பிணியற்ற வாழ்வென்னும்

நோயில்லா வாழ்வு

இது

சிறுமணவூர் - முனிசாமி முதலியார்

அவர்களால்

இயற்றியது.

—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

57, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை—1.

காபிரைபிட்] — [ரு. 2-00

பிணியற்ற வாழ்வென்னும்

நோயில்லா வாழ்வு

M·43

இஃது

செழுமணவை - நல்லண்ண பரதேசியவர்கள்

மருகரும் மாணுக்கருமாகிய

சிறுமணவூர் - முனிசாமி முதலியார் அவர்களால்

இயற்றியது.

page-104

சென்னை :

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

அவர்களால்

திருமகள் விலாச அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

காபிரையிட்] [விலை ரூ. 2-00

M·43

நூலினுட் பிரிவு

விஷயம்		பக்கம்
1 நோயணுகாவிதி	....	1
2 மாதர்விதி	....	22
3 சிகிச்சாவிதி	....	33
4 சிசு வளர்க்கும்விதி	....	43
5 தோஷயெந்திரவிதி	....	56
6 கிரகயெந்திரவிதி	....	68
7 பத்தியவிதி	....	80
8 முறிவுவிதி	....	87
9 சர்ப்பத்துவிதி	....	93
10 தாதுவிதி	....	97
11 சொற்பனவிதி	....	101

M. 43

விஷயங்களின் அகராதி

விஷயம்	பக்கம்
நெடுமாற்றுதி	1
அம்பாள்துதி	,,
நோயணுகாவிதி	,,
போஜனவிதி	4
போஜனகால அகாலவிதி	,,
போஜன அனுபானவிதி	5
போஜன அளவைவிதி	,,
போஜனப்பிரிவுவிதி	,,
போஜனசாரவிதி	6
சாதாரணசவுக்கியவிதி	,,
உண்கலவிதி	7
வெள்ளிக்கலம்	,,
செம்புக்கலம்	,,
வெண்கலம்	8
உண்கலத்தின்பொதுவிதி	,,
வாழையிலை	,,
தாமரையிலை	9
அன்னவிதி	,,
பச்சரிசியன்னம்	,,
புழுங்கலரிசியன்னம்	10
சுத்த அன்னம்	,,
கஞ்சிவிதி	,,
கோதுமைக்கஞ்சி	11
கொள்ளும் அரிசியும்	,,
வடிக்கஞ்சி	,,
பஞ்சமுஷ்டிக்கஞ்சி	,,
முடிச்சிக்கஞ்சி	,,
பாலுண்விதி	,,
காலைப்பாலுண்விதி	12
வலிவுறும்விதி	,,
குருநடைவிதி	,,
தாம்பூலப்பொதுவிதி	13

விஷயம்	பக்கம்
வெற்றிலைவிதி	13
பாக்கின்விதி	,,
இளங்கொட்டைப்பாக்கு	14
சாதாரணகொட்டைப்பாக்கு	,,
சொத்தைப்பாக்கேசுகுனம்	,,
சுண்ணவிதி	,,
முத்துச்சுண்ணவிதி	15
தாம்பூலகாலவிதி	,,
தாம்பூலசாரவிதி	,,
மலரணைவிதி	,,
இலவுபருத்தி	16
இரத்தினகம்பளவிதி	,,
சகலாத்து	,,
பாய்களின்விதி	,,
தாழம்பாயில்	,,
கோரைப்பாயில்	17
சாதிப்பாயில்	,,
பேரீச்சம்பாயில்	,,
சிற்றீச்சம்பாயில்	,,
மூங்கிற்பாயில்	,,
பனையோலைப்பாயில்	,,
தலையணைவிதி	,,
நித்திரைசெய்விதி	18
முக்காட்டுநித்திரைவிதி	,,
தொக்கணத்தின்விதி	,,
இராநித்திரைபங்கவிதி	19
சயனதிக்கு	,,
நித்திரைவிழித்தவுடன்	20
நித்திரைசெய்துவிழிக்கை	,,
பல்விளக்கும்விதி	,,
பல்விளக்கக்கூடாவிதி	21
சௌக்கியக்குறிப்பு	,,

விஷயம்	பக்கம்

மாதர் விதி

விஷயம்	பக்கம்
பொதுமாதர்	22
கூடாமாதர்	,,
மாதர்சம்பந்தவிதி	,,
புணர்விதி	23
கெற்பவிதி	24
பெண்ணறியும்விதி	,,
கெற்பக்குறியறிவிதி	25
கருவளர்க்கும்விதி	26
ஷை ஏகமூலித்தயிலம்	27
மாதர்சமாதானம்	28

சிகிச்சா விதி

விஷயம்	பக்கம்
கெற்பசஞ்சீவியெண்ணெய்	33
பிள்ளைவெளிப்பட	,,
பிள்ளைபெறமாட்டாத	34
பிள்ளைவெளிப்பட	,,
வயிற்றில்மறித்த	,,
அழுக்ககல	35
அழுக்குவெளிப்பட	,,
சூதகக்கட்டுடைய	,,
சூதகவாய்விற்குமெழுகு	36
சூதகவாய்விற்கு	,,
சூதகவயிற்றுநோய்க்கு	37
ஷை யூநானிமுறை	,,
யூநானிகருதரிக்கும்	,,
கருவுருண்டை	,,
உதிரச்சிக்கலுக்கு	38
உதிரங்கண்டால்	,,
கெற்பவதிக்கு	,,
பாலில்லாதவர்க்கு	,,
முலைப்பால்சுரக்க	,,
பால்சுரக்க	,,
விசேஷபானுக்கு	,,
முலைசிலந்திக்கு	39
முலைக்குத்துக்கு	,,
பெண்கள்பற்பொடி	39
பெண்கள்வயிற்றுவலிக்கு	40
பெரும்பாட்டுக்கு	,,
பழையபெரும்பாட்டுக்கு	,,
தீராப்பெரும்பாட்டுக்கு	,,
பெரும்பாட்டுக்கு	,,
மாதாந்திரமுழுக்கு	41
மாதவிடாயில்லாதவர்க்கு	,,
முழுக்கில்லாதவர்க்கு	,,
மாதவிடாயில்லாதவர்க்கு	,,
வெள்ளைகண்டால்	,,
காட்பட்டவெள்ளைக்கு	42
ஸ்திரீகள்பிரசவித்தபிறகு	,,

சிசு வளர்க்கும் விதி

விஷயம்	பக்கம்
நோய்வருங்காரணம்	43
எச்சரிக்கை	44
காலவிதி	,,
விக்கல்பொருமல்	,,
குடித்தபாலெடுத்தால்	45
மலங்கட்டினுல்	,,
சிறுநீர்சிரங்காவிட்டால்	,,
சஞ்சீவிப்பால்	,,
மாந்தம் 21-க்குப்பெயர்	46
குணம் அல்லது குறிதெரிய	,,
18-வித மாந்தங்கட்கும்	,,
சர்வமாந்தத்திற்கும்	47
1-வது பச்சிலைசாறு	,,
2-வது பச்சிலைசாறு	,,
3-வது பச்சிலைசாறு	48
4-வது பச்சிலைசாறு	,,
1-வது மாந்தக்குளிகை	,,
2-வது மாந்தக்குளிகை	49
3-வது மாந்தக்குளிகை	,,
4-வது மாந்தக்குளிகை	,,
புலியாசனக்குளிகை	50
18-சூலைக்கும்	51

விஷயம்	பக்கம்
செங்கிரந்திக்குணம்	52
செங்கிரந்திக்கு மருந்து	,,
கருங்கிரந்திக்குணம்	53
கருங்கிரந்திக்கு மருந்து	,,
கருங்கிரந்திக்கு எண்ணெ	,,
அதிசாரக்கழிச்சலுக்கு	54
ஜாதிக்காயெண்ணெ	,,
விடாகழிச்சலுக்கு	,,
உண்ணாக்குவளர்த்திக்கு	,,
குழந்தைகள்விக்கலுக்கு	55
அஜீரணத்திற்கு	,,

தோஷ யந்திரவிதி

விஷயம்	பக்கம்
பட்சிதோஷம்	56
பறவைதோஷம்	57
எட்சிதோஷம்	58
தேவைதோஷம்	59
புருஷதோஷம்	60
பெண்தோஷகுணம்	61
முட்டுதோஷகுணம்	,,
குளிதோஷகுணம்	62
குளித்தவள்யெடுத்த	63
கெற்பமழிந்ததோஷம்	,,
விபூதிபிடிக்குமந்திரம்	64
கட்டி சிலந்திக்குமந்திரம்	65
பூச்சிக்கடியிரங்க	66
தண்ணீரோதுமந்திரம்	,,
முடிக்கயர்மந்திரம்	67

கிரகயெந்திர விதி

விஷயம்	பக்கம்
முதலாவது	68
இரண்டாவது	69
மூன்றாவது	70
நான்காவது	71
ஐந்தாவது	72
ஆறாவது	73
ஏழாவது	73
எட்டாவது	74
ஒன்பதாவது	75
பத்தாவது	76
பதினோராவது	77
பனிரெண்டாவது	78
சாவிபினால்மந்திரிக்க	79

பத்திய விதி

விஷயம்	பக்கம்
சுரரோகிகட்கு	80
சர்வரோகபத்தியம்	,,
ஆகாதபதார்த்தங்கள்	,,
பத்தியபதார்த்தங்கள்	81
தாம்பூலங்கூடாது	82
நெய்கூடாது	,,
தயிர்கூடாது	,,
வாததேகிகட்கு நித்திய பதார்த்தம்	83
பித்ததேகிகட்கு	84
சேத்துமதேகிகட்கு	85
தைலபத்தியம்	86
பேதிக்குபத்தியம்	,,
ஷை அபத்தியம்	,,
மூலரோகபத்தியம்	,,

முறிவு விதி

விஷயம்	பக்கம்
எவ்வித அவிழ்தமாவது	87
அறுபத்திநாலுபாஷாணம்	,,
விஷமுள்ளவஸ்து	,,
சூதமென்னும்	88
ஷை இரசம்சேர்ந்த	,,
ஷை சூதமென்னும் ரசம்	,,
ஷை சூதமென்னும் ரசவேக் காட்டுக்கு	,,
ஷை சூத ரசமுறிவு	,,
தாளகம் மனோசிலே	89

விஷயம்	பக்கம்
வீரம்சேர்ந்த	89
பூரம்சேர்ந்த	,,
கருவங்கம்	,,
காரீயசெந்தூரம்	,,
கெந்தகபாஷாணம்	,,
பாஷாணம்தின்றவர்க்கு	,,
எவ்விதநஞ்சிற்கும்	90
சேராங்கொட்டை	,,
ரவைதின்றவர்க்கு	,,
அபினிஊமத்தங்காய்	,,
தனிவூமத்தை	,,
சேர்வாளக்கொட்டை	,,
ரத்தப்பாளம்	,,
இடுமருந்துகளுக்கு	,,
எருக்கன்பாலிற்கு	91
சுண்ணாம்பிற்கு	,,
மற்றும் பலவகைமுறிவு	91, 92

சர்பத்து விதி

விஷயம்	பக்கம்
குலாபிசர்பத்து	93
ரோஜாசர்பத்து	,,
பாதம்சர்பத்து	93
தாமரைசர்பத்து	94
சந்தனசர்பத்து	,,
வெற்றிலைசர்பத்து	,,
நன்னாரிவேர்சர்பத்து	95
காசினியிலைசர்பத்து	,,
திராட்சிசர்பத்து	,,
தாழம்வித்துசர்பத்து	,,
யூனானிகாகருபாசர்பத்து	,,
இஞ்சிசர்பத்து	96
எலுமிச்சம்சர்பத்து	,,

தாது விதி

விஷயம்	பக்கம்
யூனானிபலங்தோடு	97
முதல்தரம்பலங்தோடு	,,
ஸ்திரீபோக அல்வா	98
நாமாதா அல்லது பேடி	,,
மஹாமதனகாமேசுரம்	99
போககாலத்தில்	100
ஸ்திரீபோகசிந்தாமணி	,,
சொற்பன விதி	101

உ

கடவுள் துணை

பிணியற்ற வாழ்வென்னும்

நோயில்லா வாழ்வு

நெடுமாற்றுதி

ஆயிரநாம மணியரி தாட்களின்
நோயில்லாவாழ்வு நுவலக்காப்பதே.

அம்பாள் துதி

காப்பதாகிய கண்ணன்சோதரி
மூப்பதாகவே மூவுலகீன்றவள்
ஆப்பதாகவே வரனொருபங்கினள்
பூப்பதங்களிற் பொன்மலர்சாற்றுவாம்.

முதலாவது

நோயணுகா விதி

பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமுமூத்த
வேலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போ
மிரண்டடக்கோ மொன்றைவிடோ மிடதுகையிற் படுப்போம் [போ
மூலஞ்சேர் கறிநுகரோம் மூத்ததயி ருண்போ
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய உண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே.

(இதன் பொருள்)

பசும்பாலே யுண்போமன்றி மேதிப்பாலே கினவிலும் நினையோம், எண்ணெயிட்டுக் கொள்ளில் வெந்நீரில் ஸ்நானம் செய்வோம், இரதிக்கொப்பாகிய யிளம்பருவ மின்னார்கள் இலவசத்திற் சந்தித்தாலும் பகலில் புணர்ச்சி செய்ய மாட்டோம், பகலில் நித்திரையும் செய்ய மாட்டோம், தன்

வயதுக்கு மேற்பட்ட மாதரையும், இளம் வெய்யலையும் யிச்சிக்க மாட்டோம், மலஜலங்களை அடக்க மாட்டோம், இந்திரியத்தை யதிகமாய் விடுக்க மாட்டோம், எப்பொழுதும் இடது கையைக் கீழாக வைத்து சயனிப்போம், மூலரோகத்தை யுண்டுபண்ணும் பதார்த்தங்களை புசிக்க மாட்டோம், அமுதத்திற் கொப்பா யிருந்தாலும் நேத்திய கரியை புசிக்க மாட்டோம், பசித்தாலல்லது சாப்பிட மாட்டோம், எ - று.

விருத்தம்

உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்
உரங்குவ திராவொழியப் பகலுரக்கஞ் செய்யோம்
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றி புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்
பெண்கடமை திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம்
நண்பெறவே யுண்டபின்பு குறுநடையுங் கொள்வோம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

(இ - ள்.) ஒரு தினத்திற்கு இரண்டு முறையே யன்றி மூன்று முறை புசிக்க மாட்டோம், புசித்தவுடன் நித்திரை செய்வது நன்மை யென்று சயன சாஸ்திரத்தில் சொல்லி யிருந்தாலும் அப்படி பகலில் நித்திரை செய்ய மாட்டோம், பெண்களை மாதத்திற்கு ஒரேமுறை புணர்வோம், மிகுந்த தாகமாயினும் போஜனம் செய்த முடிவில்தான் ஜலமருந்துவோம், கருணைக்கிழங்கு தவிர மற்ற கிழங்குகளை புசியோம், வாழையின் இளம்பிஞ்சியே யொழிய முற்றிய காய் தின்ன மாட்டோம், அன்னம் புசித்தவுடன் குரு நடையாக (அரையே அரிக்கால்) நாழிகை உலாவினு லொழிய எத்தொழிற்கும் புகுவ மாட்டோம். எ - று.

விருத்தம்

ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுரை நுகர்வோம்
தேறுமதி யொன்றறைக்கோர் தரநசியம் பெறுவோம்
திங்களரைக் கிரண்டுதரஞ் க்ஷவரவிரும் புருவோம்
வீறுசதுர் நாட்கொருகா நெய்முழுக்கைத் தவிரோம்
விழிகளுக்குஞ் ஞனமூன்று நாட்கொருகா விடுவோம்
நாறுகந்தம் புஷ்பமிவை நாட்கொருகா விடுவோம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

(இ - ள்.) ஆறு மாதத்திற் கொருமுறை வாந்தியாகும் படியாயும் நான்கு மாதத்திற் கொருமுறை பேதியாகும்படி யாயும் மருந்துண்போம், ஒன்றரை மாதத்திற் கொருமுறை மூக்கில் நசியம் செய்துக் கொள்ளுவோம், நான்கு தினத்திற் கொருமுறை அப்பியங்க ஸ்நானம் செய்வோம், மூன்றுநாட் கொருமுறை கண்களுக்கு மையிடுவோம், கஸ்தூரி முதலிய வாசனை திரவியங்களையும் புஷ்பங்களையும் நடுராத்திரியில் முகரமாட்டோம். எ - று.

விருத்தம்

பகத்தொழுக்கு மாதரயங் கரந்துடப்ப மிவைதூட்
  படநெருங்கோந் தீபமைந்தர் மரநிழலில் வசியோஞ்
சுகபுணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோந்
  துஞ்சலுண விருமலஞ்சை யோகமழுக் காடை
வகுப்பெடுக்கிற் சிந்துக்ச மிவைமாலை விடுப்போம்
  வற்சலந்தெய்வம் பிதுர்ச்சற் குருவைவிட மாட்டோம்
நகச்சலமும் முளைச்சலமும் தெரிக்குமிட மணுகோம்
  நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

(இ - ள்.) தூரஸ்திரீ நடக்கும்போது பறக்கும் தூசியும் ஆடு கழுதை துடப்பம் இவைகளா லுண்டாகும் தூசியும் மேலே படும்படி நெருங்க மாட்டோம், இரவில் தீப நிழலில் மனிதர் நிழலில் விருக்ஷ நிழலிலும் தங்க மாட்டோம், போஜனம் ஜீரணமான பிறகுதான் புணர்வோம், மலஜலம் அழுக்காடை சீப்பிட்டு வாருதல் இவைகளை மாலைக் காலத்தில் நீக்குவோம், தன்னு லாதரிக்கும் பசுவையும் தெய்வத்தையும் பிதுர்க்களையும் ஆசாரியரையும் மாலைக் காலத்தில் பூசிப்போம், நகச்சலமும் சிகைச்செலமும் தெரிக்கு மிடத்தில் நெருங்கோம், ஆதலால் நோயை முன் குறிப்பிட்டு பின்னுல் துடரும் எமனுக்கு நாமிருக்கும் இடத்தில் என்ன வேலை யிருக்கிறது ஒன்று மில்லையே 18-சித்தர்களில் மருத்துவம் பொருந்தியுள்ள தேரையரருளிய ஆயுர்வேத விதிப் படி எழுதிய தென்றறிக.

வெண்பா

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம—லுண்ணுங்கா
னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

(இ - ள்.) மலசலத்தை அடக்காமலும், விந்துவை அதிகமாக விடாமலும், உண்ணுமிடத்து நீரைக் காய்ச்சி மோரை விளாவி நெய்யை யுருக்கி உண்ணலும் ஆகிய இத்தன்மை யுள்ளவர்களின் நாமத்தை யுச்சரிப்பவர்கட்கும் பிணி விலகும், எ - று.

போஜன விதி

தருமநூல் விதியிரண்டே தப்பிமுக்கா லுண்ணவெனில்
சிருமதலை காலைமுற்றச் சேய்பருவ—வருமுகூர்த்த
மொன்றுக்கு ளன்குக்கு ளோதுமிரண்டுக்கு ளுண்பர்
னன்றுக்குத் தீயோர் நயந்து.

(இ - ள்.) தருமசாஸ்திரத்திற் கூறியபடி இரண்டு கால போஜனமே கொள்ள வேண்டுமானால் சூரியனுக்கு இளம் பருவமாகிய உதயம் துடங்கி 1½-மணி நேரத்திற் குள்ளாகவும் காளைப் பருவமாகிய 6-மணி நேரத்திற் குள்ளாகவும் மூப்புப் பருவமாகிய இரவு 7½-நாழிகைக் குள்ளாகவும் அல்லது தீபம் வைத்தது துடங்கி 3-மணி நேரத்திற் குள்ளாகவும் நலம் பெறுதற்கு சமாக்கினி யுள்ளவர்கள் புசிப்பார்கள். எ - று.

போஜனகால அகால விதி

மூன்றுநான் காரெண் முகூர்த்தங்க ளின்முறையே
ஞான்று ளுண்ணுமந்த நறுமுணவே—தோன்றுடலுக்
கொக்குமித நோயரமு ரோகமுயிற் கந்தரஞ்செய்
விக்குமித மாராய்ந்து விள்.

(இ - ள்.) சூரியன் உதயமாகிய 11½-நாழிகைக்குள்ளாக உண்கிற நல்ல உண்டியானது தேகத்திற்குப் பொருந்தும். 15-நாழிகையில் உண்ணு முணவானது மிதம் யென்கிற அளவிடு பிணிகளை விலக்கும். 22½-நாழிகையில் புசிக்கும் பொசிப்பானது ரோக சம்பவமாம். 30-நாழிகையில் அருந்தும் போஜனமானது உயிருக்கு முடிவைத் தரும் வியாதிகளை வருவிக்குமாம். ஆதலின் முதலிற் கூறிய இரண்டு கால போஜனமே கால போஜனமாம். பின்கூறிய இரண்டு போஜன காலமும் அகால போஜன மென்றறிக. எ - று.

போஜன வனுபான விதி

ஆதியி னிப்புநடு வாம்பிரதி ருப்பொடுசா
காதி யுறைப் பாலந்தத்திற்—கோதிறுவர்ப்
பாந்ததியுப் பூரியகா யாதிவகை சேருணவை
மாந்ததிசு கத்தை யுருவாய்.

(இ - ள்.) போஜனம் முதலில் மதுரவஸ்துவும், மத்தியில் புளிப்பும் உப்பும், உறைப்பும், முடிவில் துவர்ப்பு சம்பந்த மான புளித்த தயிர் ஊருகாய்களும் நீ யுண்ணக் கடவாய். அப்படி யுண்ணில் அதியின்பத்தையும் கருவிகளுக்கு வலி வும் அடைவாய். எ - று.

போஜன அளவை விதி

முக்கா லுணவின்றி யெத்தேகிகட்கு முழுவுணவி
லக்கா ரணமன்ன சாகாதிகூடி யறையதிர்பாற்
சிக்கா வமுதம்புத் தக்கிரங்கா லுண்டிசேடமுழை
வைக்கா விடிலுண்டி வேகாதனலும் வளியுகின்றே.

(இ - ள்.) எத்தேகிகட்கு முக்கால் வயிற்று உணவே யன்றி முழு உணவு யில்லை. எப்படியெனில்: அன்னமும் கரிகளும் கூடி அறைப்பங்கும் மோரும் ஜலமுங் கூடி கால் பங்கும் ஆக முக்கால் வயிற்று வுணவேயாம். கால்வயிறு இடை வெளியே வைத்தது ஏனெனில் சமான வாய்வு அனல், பித்தம் இவை ஜொலித்து அவ்வுண்டியை ஜீரணிப் பதற்கேயாம். எ - று.

போஜனப்பிரிவு விதி

பிலத்த மருமுண்டி பிரிவை யுரைக்குங்கால்
பலத்த் கிருமிகட்கோர் பங்கு மலத்திற்கோர்
பங்குமாய் வில்லனிற்கோர் பங்குமுட வினுக்கோர்
பங்குமாய்த் தங்குமுன்னிப் பார்.

(இ - ள்.) துவாரத்தையுடைய தீனிப்பையில் தங்கிய உணவானது 4-பிரிவை யுரும். அவை யெப்படியெனில்: ஒருபங்கு கிருமிகளுக்கும் ஒருபங்கு மலத்திற்கும் ஒருபங்கு ஜடராக்கினிக்கும் ஒருபங்கு தேகத்திற்குமாம். எ - று.

போஜன சார விதி

ஒருநாளுன்னனவிரதமிரத்தாதுவை னனைத்தங்கூறிநிற்கு
மிருநாளுண்டிடினஃதங்கிரத்தாதுவி லேறுமிவ்வாறேபின்
வருநாளுண்ணெழுநாணமாயினஃதெழு தாதுவையுமளர்த்தே
தருநாளுஞ்சோராதவலியதனை யெட்டாநாட்சடத்தினுக்கே.

(இ - ள்.) ஒருநாள் உண்டவுணவில் நின்று பிரிந்த அன்னரசமானது அன்றைக்கு ரச தாதுவை நனைத்து ஊரித்தங்கும். இரண்டாம் நாளுண்ட அன்னரசமானது அந்த ரசத்திலோ முன் ஊரிநின்ற ரசம் ரத்த தாதுவிற் பாயும் அவ்வாறே மறுநாள் மாமிச தாதுவிற் பாயும். மறு நாள் மேதோ தாதுவிற் பாயும் மறுநாள் அஸ்தியிற் பாயும் அவ்வாறே நரம்பிலும் சுக்கிலத்திலும் சுரோணிதத்திலும் பாய்ந்து விர்த்தி யடையச் செய்து இவ்வாறு ஒருநாளுண்ட அன்ன ரசமானது பிரிவுற்றமையுதற்கு 4080-நாழிகை செல்லுதல் வேண்டுமாதலின் அடுத்தடுத் துண்ணும் உணவு கள் இவ்விதியே பரவி சுத்த தாதுக்களுக்கும் உரித்தாய் இச்சரீரம் வளர்வனவென்று சித்தராயுள் கிரந்தத்தில் சிறந்து காண்க. எ - று.

தற்கால சாதாரண சவுக்கிய விதி

நீதி முதலிய தருமசாஸ்திரத்திலும் சித்தர் நூல்களிலும் இருகால போஜனமே புசித்தல் போகிக்கழகென போதிக் கின்ற தாதலின் அத்தகைய விதிநூல் பிரமாணங்களைக் கடவாமலும் இருகாலப் போஜனப்படி கணக்கிடுங்கால் $11\frac{1}{2}$-அல்லது, 12-நாழிகை மட்டில் ஆன்மவாதை கொடாமலும் வயிற்றினிடமாயுள்ள தீனிப்பை, குடல் முதலிய கருவிகட்கு உஷ்ணப்பயிற்சி செய்யாமலும் தற்காலம் ஐரோப்பியர் முதலிய நம்மவரின் சிலரும் அனுசரித்துவரும் சவுக்கிய ஆகா ரங்களை சகலரும் அனுசரித்துவரில் ஆன்ம உரமும் தேக திடமும் தாதுவிர்த்தியும் முகக்காந்தியும் பெறுவர். அது யாவர்க்கும் தெரிந்த விஷயமேயாயினும் யாதெனில் : காலை யில் 5-நாழிகை அல்லது 8-மணிக்குள்ளாக சிறு கருவிகளா கிய குடல் பெருங்குடல் தீனிச் செல்லும். சிறு ஆகாரங்களுக் கிசைந்த இலேசான ஆகாரங்களுமாகப் புசித்தல் வேண்டும். அதாவது பால்சேர்ந்த காப்பி தேத்தண்ணீர் நொய்யை

கொதிப்பித்த கஞ்சி வகைகள் இதேனும் செய்ய சக்தி யற்ற வர்கள் பசுமோர் சேர்ந்த மாவு சாதமேனும் சதா உப யோகப் படுத்துவதில் மிக்க திடத்தைத் தரும். அன்றி பகல் 15-நாழிகைக்கும் இரவு 7½-நாழிகையிலும் தவராது போஷித்துவரில் நோய் முதலியவற்றும் அணுகாது புத்தி யும் சபலப்படாது தேககாந்தியும் மழுங்காது திடமும் குறை யாது என்று முதியோர்களால் மிகவும் தயவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. எ - று.

உண்கல விதி

தங்கக்கலத்திலுண்ண தாதுவிர்த்தியும்பசியும்
பொங்கமிகுதிடமும் பூரிப்பும்—அங்குறையும்
பித்தசோபப்பிணிகள் பேருலகைவிட்டகலும்
கத்தரசத் தீங்கனியே சொல்.

(இ - ள்.) தங்கப் பாத்திரத்தில் அன்னம் புசித்துவரில் சுக்கிலவிர்த்தி யுண்டாக்கும். மூவித குற்றங்களையும் மீற வொட்டாது சமரசப்படுத்தும் வண்மை யுண்டாக்கும் மனோ உற்சாகம் கொடுக்கும் பித்தசோகை யணுக வொட்டாது தேகம் பூரிக்கும். எ - று.

வெள்ளிக் கலம்

வெள்ளிக்கலத்திலுண்ண வீரிவருங்கபமும்
துள்ளியெழும்பித்தமும்போம் சொல்லவோ—விள்ளறி
காந்தியுண்டானலும் களிப்புண்டாந்தேகத்திற் [ய
சேந்திவரும் வாதமுண்டாம் செப்பு.

(இ - ள்.) வெள்ளிக்கலத்தில் போஜனம் செய்துவரில் சிலேஷ்ம கோபமும் பித்த கோபமும் நீங்கும்; தேஜசும் மகிட்சியும் உண்டாக்கும் வாதத்தை சற்றதிகப்படுத்து மென் றறிக. எ - று.

செம்புக் கலம்

செம்புக்கலத்திலுண்ண தேகவாரோக்கியமாம்
பம்புரத்ததோடம் பரக்குங்காண—அம்புவியி
லண்ணியிடுங்காந்தி யணங்கேவிழியொளியாம்
புண்ணியமும் நண்ணும்புகல்.

(இ - ள்.) செம்புப் பாத்திரத்தில் புசித்துவரில் சரீர சவுக்கியம் தேஜசு கண்ணுக்கொளிவு சுகிர்தம் இவை யுண்டாம். இரத்த பித்தரோகம் விலகும். எ - று.

வெண் கலம்

தாம்பரத்தில்வெள்ளீயந் தான்கலக்கவெண்கலமென்
றும்பெயர்பெருங்கலத்தி லன்னமிண்ணிற்—றேம்பிமருஞ்
சோபமொடுரெத்தபித்தந் தோன்வரியாதனங்கள்
சாபமெனச் சென்னுதலே சாற்று.

(இ - ள்.) வெண்கலப் பாத்திரத்தில் புசித்துவரில், சிக்கல், சோர்வு, இரத்த பித்தரோகம் இவை நீங்கும். தாதுவிற்கு வலியும் புஷ்டியும் உண்டாம். எ - று.

உண்கலத்தின் பொது விதி

வாழைவெள்ளைப்பன்னன்று மற்றிலைகள்மத்திபமாம்
மாழைவெள்ளிவெண்கலமு மாறுய்கேள்—கோழ
கயப்பாண்டம்நோய்போங் கருதினிவைக்கெல்லாம்
குயப்பாண்டமேலசனங் கொள்.

(இ - ள்.) இலைகளில் மனோவுச்சாகவும் ஆன்மதிருப்தியும் கொடுக்கத் தக்கது வெள்வாழையிலையே தவிர மற்றயிலைகளெல்லாம் மத்திபமாம். கலங்களில் தங்கம், வெள்ளி, வெண்கலம் இம்மூன்றே உத்தமம். பழமையாகிய மண்கலத்தில் புசிப்பவர்களுக்கு க்ஷயம் பாண்டு ரோகத்தால் வந்த நீர்சுரங்கள் விலகும். எ - று.

வாழையிலை

தொக்கினுருமின்னிஞ் சுகபோகமுமன்னும்
அக்கினிமந்தம் பலமோடு—திடுக்கிடுகால்
பாழையிலைப்புமறும் பன்னுபித்தமுஞ்சமனும்
வாழையிலைக்குணரு வாய்.

(இ - ள்.) வாழையிலையில் பொசிக்கில் சரும தாதுகளுக்கும் பளபளப்பும் சுகபோகங்களு முண்டாம். மந்தாக்கினி துற்பலம் க்ஷீணவாத சிலேஷ்பனம் அரோசகம் இவை நீங்கும். பித்தசோபமும் சாந்தமாம். வாழைத் தோப்பில் சஞ்சரிக்கில் இரத்தக்ஷீணமும் காசமும் உண்டாம். எ - று.

தாமரையிலை

தாமரைப்பன்னத்திலுண்டால் தாங்கரியா உட்டினமாம்
நாமவாதஞ்சினத்து நண்ணுங்காண்—தாமமுரு
லக்கினிமந்தங்களுண்டா மன்றேமலர்ந்திருவத்
திக்கினிலிரு வெனவேதேர்.

(இ - ள்.) தாமரையிலையில் புசித்துவரில் வெப்பமும் வாதரோகமும் மந்தாக்கினியு முண்டாம். சர்வ சம்பத்தும் நீங்கி விடும் சில வகையான பாலுள்ள மரங்களின் இலைகளில் உண்டு வந்தால் பங்குவாதம், க்ஷயம், தாகரோகம் இவை யணுகாமல் காற்கும் பலாயிலையில் உண்டால் குன்மரோகம் பெருவயறு இவை வரவொட்டாது ஆனல் அடங்கிய பித்தத் தையும் அதிகரிக்கச் செய்யும். எ - று.

அன்ன விதி

அதிசுடுகையன்னம் ரத்தபித்தந்தாகம்
பிதிரேறுசித்தப்—பிரமையொடு—மதரோக
மென்றுரைக்குநோய்கட் கிடங்கொடுக்குந்தப்பாது
குன்றுரைக்கும் பூண்முலையேகூறு.

(இ - ள்.) குன்றை நிகர்த்த முலைமாதே! அதிக சுடுகை யான அன்னம் உண்பாயாகில் உதிரபித்தம், தாகம், திறமை, மதரோகம் இவைகளை யுண்டாக்கும். அற்ப சுடு கையான அன்னம் புசிப்பதுவே உத்தமத்திலும் உத்தம மென்றுணர்வாயாக. அதேனெனில்: வாத பித்தங்களி னலும் பீனிசத்தாலும் விளைகின்ற நோய்களுக் கிடங் கொடாமல் காற்பதுடன் சரீரத்திற்கு வண்மையுந் தரும். எ - று.

பச்சரிசி அன்னம்

பச்சரிசியன்னம் பலங்கொடுக்கும்வாயுவென்பார்
நிச்சயமாய்பித்தத்தை நீக்குங்கா—ணச்சமற
மூத்திரகிரிச்சரத்தை முன்பொழிக்குஞ்சேய்க்குமந்த
மாத்திரமே யுண்டாம்வழுத்து.

(இ - ள்.) பச்சரிசி யன்னமானது சரீரத்திற்கு பலத் தை யுண்டாக்கும் பித்தகோப கிரிச்சனத்தை நீக்கும் குழந் தைகளுக்கு மாத்திரம் மந்த முண்டாகு மென்பார் வாய் வாகும். எ - று.

2

புழுங்கலரிசி அன்னம்

தென்புவினுளும் செழித்துவளரும்சாலி
வன்புழுங்கல் வடிசாதம்—உண்ணவே
வாயுவிலையத்தால் வலியும்வன்நோயுமிலை
நோயுடையார்க்காகும் நுவல்.

(இ - ள்.) புழுங்கலரிசிச்சாதம் பொசிப்பவர்களுக்கு வாத கோப முதலிய பற்பல வலிய ரோகங்கள் யாதொன்றும் யில்லை நோயாளிகளுக்கும் ஆகுமென்றறிக. எ - று. (வலிவு கிடையாது.)

சுத்த அன்னம்

சுத்தவன்னங் குற்றமிலை தோஷங்களை யகற்று
முத்தர தேகிக்குமது முக்கியமாம்—பத்தியத்திற்
காகுமது முப்பிணிக்கு மாம்வியனஞ் சனங்கலந்து
ணேகுமுண் ணேயல்லா மிரங்கி.

(இ - ள்.) சுத்த அன்னமென்பது பழைய அரிசியை நொய் தவிடு முதலியவை போம்படி நன்ருய் தீட்டி இளம் வென்னீரில் மூன்றுவிசை கழுகி வஸ்திரத்தில் கொட்டி சற்றே ஆற வைத்து ஒரு பாத்திரத்தில் அரிசிக்கு மூன்று பங்கு ஜெலம்விட்டு அடுப்பேற்றி ஜெலம் கொதிக்கும்மட்டில் காய்ச்சி மேற்படி அரிசியைப் போட்டு முக்கால் பதமாக வெந்தவுடன் கரண்டியால் விழாவி வடித்துக் கொண்டு மறுபடியும் சிறுதணலில் வைத்து பக்குவமான பதத்தில் இரக்கிக் கொள்ளுவதாம். அவ் வன்னத்துடன் நற்கரி வகைகளைச் சேர்த்து புசித்துவரில் வாதபித்த சிலேட்டும மென்னும் மூவித ரோகங்களையும் விலக்கும் மூவித தேகி கட்கு உத்தமம். அன்றியும் குடலைப் பற்றிய ரோகங்கள் முழுமையும் நீக்கும். எ - று.

கஞ்சி விதி

1 - வது. பசும்பால் பச்சரிசி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியை சாப்பிடுவோர்களுக்கு பித்தயெரிவு நீங்கும் சுக்கி லம் விருத்தியாகும் தாதுபுஷ்டிக்கு தேகம் பூரிக்கும் புத்தி அதிகரிக்கும்.

2 - வது. கோதுமைக் கஞ்சியானது வாதசுரம், ஜல தோஷம், கபம், ஜன்னிபாதம் இவைகளை விலக்கும் தேகத்திற்கு வண்மை தரும்.

3 - வது. கொள்ளும் அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியானது அதிக பசி தீபன முண்டாகும். எள்ளை கையினல் கசக்கிப் பிழியும்படியான பலமும் அதற்குத் தக்க வீரியவிர்த்தியும் கிழவர்களுக்கும் கூட உண்டாகும் யென்க.

4 - வது. வடிக்கஞ்சி யென்பது சாதத்தினின்று வடிக்கப்பட்ட கஞ்சிகளெல்லா வாதாதிக்கமானுலும் விழிகளுக்கு குளிர்ச்சியைத் தரும் பித்தகோபம் நீங்கும் உடற் பூரிக்கும் சாதம் வேகும்போது மீட்கிற கஞ்சித்தண்ணீ ரென்கிற கஞ்சிநீர் கருக்கைப் போக்கும்.

5 - வது. பஞ்சமுஷ்டிக்கஞ்சி யென்பது துவரை, யுளுந்து, கடலை, சிறுபயறு, பச்சரிசி இவை 5-ம் வகைக்கு ஒருபிடி எடுத்து தனித்தனியே சீலைகளில் முடிந்து ஒரு பாத்திரத்தில் 2-படி ஆத்து ஜெலம் விட்டு அதில் மேற்படி முடிச்சுகளைப் போட்டு அதில் ஒரு பங்காய் காய்ச்சி யிறக்கி நீடித்த லங்கணக்காரர்கள் லங்கணமுடிவில் 2 3-வேளை அருந்தினல் திரிதோஷ விகாரங்களும் அணுகாது ஆயாசம் இளைப்பு யிவை நீங்கும் என்க.

6 - வது. முடிச்சுக்கஞ்சி யென்பது ஆழாக்கு அரிசிக்கு இரண்டு படி ஜலமும் விட்டு அரை பலம் சுக்கை இலைபோல் சன்னப் பொடிகளாகச் சீவி மெல்லிய சீலையில் முடிந்து அதிற் போட்டு 4-ல் ஒரு பங்காகக் காய்ச்சிய கஞ்சியின் தெளிவை யிருத்து சகல நோயாளிகளுக்கும் கொடுக்கலாம். வாத ரோகங்கள் வெப்பம் சிவந்து யிறங்குகிற மூத்திரம் பித்தத்தா லுண்டாகிய சிலேட்டும ரோகம் குடலைப் பற்றிய செரியாமந்த ரோகம் முதலிய சர்வ நோய்களும் தீரும். உதிராக்கினி விருத்தியாகும் போஜனம் பெருக்கும் உண்டாகும் நேத்திர சூடு நீங்கும் என்க.

பாலுண் விதி

அப்பான்முகூர்த்தத்து ளங்கடிக்குள்ளுணது
மிப்பான்மனுதர் விழிதாகு—மூப்பாயி
கஞ்சத்தான்காண்டற் கரியானகிலமுன்
தஞ்சத்தானுண்ட விருந்தாம்.

(இ - ள்.) பசும்பால் கரந்த 3½-நாழிகை அல்லது 5-நாழிகைக்குள்ளாக உண்ணக்கடவாய்! அவ்வாறு உண்டால் அப்பால் தேவாமிர்தத்திற் கொப்பாகும் அக்காலங்களுக்கு மேற்பட்ட பாலை யுண்டால் பிரமதேவன் அரிதற்கரிய ஸ்ரீ கயிலாசபதி யுண்ட ஆலகால விஷத்தை யொப்பாகும். எ - று.

காலைப்பாலுண் விதி

சூரியன் உதயகாலத்தில் உண்ணும் பசுவின் பாலினல் கைகால் யெரிவு, உடம்புகளிலெரிவு, காமாலை, ரத்தபித்த ரோகம், பாண்டு, ஜீரண சுக்கில உஷ்ணத்தால் மார்பு சளி இவை நீங்கும் தாது புஷ்டியாம் தேகமேனியிடும், அன்றியும் குழந்தைகட்கு தாய்ப்பாலுக்கு மிஞ்சிய வலிவு தரும் கரந்த சூடுகை ஆறுவதற்கு முன் உண்பதே உத்தமம்.

வலிவுறும் விதி

அறுசுவையோடு கூடிய அன்னம் புசிப்பவர்களுக் குண்டாகும் பலத்தைவிட 8-பங்கு பலம், மாவும் அவலும் தின்பவர்களுக்கு அதிக முண்டாம், அதைப் பார்க்கிலும் 8-பங்கு பலம் பாலும் பழமும் தின்பவர்களுக் குண்டாகும், அதைப் பார்க்கிலும் 8-பங்கு பலம் மாமிசமும் கிழங்கும் தின்பவர்களுக்குண்டாம், அதைப் பார்க்கிலும் 8-பங்கு பலம் பற்பல நெய்களா லுண்பவர்களுக்குண்டாம், இந்த நெய்கள் இவ்வாறே பலத்தையும் மிதந் தப்பினல் தீமையும் செய்யு மென்க.

குருநடை விதி

உண்டபின்புநூரடிவைத் தோங்காக்குருநடையைக்
கொண்டவர்க்குமுன்புகுடற் கொண்டபருந்—திண்டியெலா
சேர்ந்தொன்ருய்ஜீரணிக்குந் தீயமுத்தோடங்களதி [ஞ்
லார்ந்தொன்று மாட்டாதறி.

(இ - ள்.) இராப் போஜனம் செய்தவுடன் 100-அடி உலாவிய பின் நித்திரை கொள்பவர்களுக்கு முன்னுண்ட அன்னத்திற் சேர்ந்த விஷ பதார்த்தங்களெல்லாம் ஒன்ருய்க் கலந்து ஜீரணிப்பதுந் தவிர அவ்வுண்டியில் திரிதோஷமும் சாராதென்றறிக. எ - று.

தாம்பூலப் பொது விதி

வெத்திலைக்குமுன்னம் வெரும்பாக்கைவாயிலிட்டால்
குற்றமுருமுரவோர் கூட்டம்போம்—வெற்றிலையை
முன்னிட்டுப்பாக்கருந்து மூதரிவோர்தம்மார்பில்
மன்னிட்டுவாழும்பூ மாது.

(இ-ள்.) தாம்பூலம் தரிக்குமிடத்து, முதல் பாக்கை வாயிலிடுவது குற்றம், அதேதெனில்: துவர்த்தல், சொக்குதல், மூர்ச்சை, புழு, உளுத்ததூள், பிசுபிசுப்பு இவை முதலிய துற்குணங்கள் அப்பாக்கினிடத்திலுள்ள சுபாவ குணமாகையால் உடற்கு அபாயம் தருவதுடன் பந்து விரோதமுண்டா மாதலின் சுண்ணந் தடவாத புனிதமுள்ள ஓர் வெற்றிலையை வாயிலிட்டு மென்று அச்சாற்றை விழுங்கில் நெஞ்சுலர்ந் திருந்தாலும் கபங்கட்டுதலும் பாக்கினது தோஷங்களும் நீங்கும். ஆதலால், ஒரு வெற்றிலையை மென்று விழுங்கிய பிறகு பாக்கருந்துவாய். எ-று.

வெற்றிலை விதி

நீற்றிலையின்மூக்கு நெடியநரம்புடனே
தீற்றும்புரவுரியுந் தின்றக்கால்—மாற்றலரை
வெல்லப்போர்செய்யும் விரநெடுமாலாயிடினும்
சொல்லப்போய்கிறப்பாள் திரு.

(இ-ள்.) வெற்றிலைத் தின்னும்போது சுண்ணந் தடவிய பின், காம்பு, நுனி, நீண்ட நரம்பு பின்புரத்தோல், இவைகளை நீக்கித் தின்ன வேண்டியது. அப்படி நீக்காத வெற்றிலையை யுகாயுகந்தோறும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் பொருட்டு அளவிறந்த அவதாரங்கள் செய்யும் வைகுண்ட வாசனுகிய (மஹா விஷ்ணுவே தின்றபோதிலும்) லட்சுமி விலகிவிடுவாள். எ-று.

பாக்கின் விதி

அதிபிஞ்சதிமூப்பு அதிபசுமைமேனி
அதியிரம்பூச்சிகளுள்ளாட—லதிசொக்கல்
உள்ளவிதப்பாக்குகளி லொன்றேனும்சேரிலதைத்
தள்ளவிதி மூக்காலுந்தள்.

(இ - ள்.) மிகவும் பிஞ்சி அதிக முதிர்ச்சி, மிகவும் புதிய பாக்கு பச்சை நிறமான மேனிப்பாக்கு சொக்குதல் ஆகிய இப்பாக்குகளில் ஒன்றகப்பட்டாலும் தின்னுமல் நீக்கக் கடவாய். எ - று.

இளங் கொட்டைப்பாக்கு

வளம் பொருந்திய இலங்கை யென்னும் கொளும்பு தேசத்திலுண்டாகிய கொட்டைப்பாக்கை தின்பவர்களுக்கு தற்காலத்தில் தொண்டைக்குள் கோழை யடையும் வாதமும் நீங்காக் கபமும் வலிய அரிசியும் விலகி பசி யதிகரிக்கும். இது ஒளிப்பல்ல வென்றறிக. மேற்படி தோஷங்கள் துரை முகவாசிகளுக் கணுகா.

சாதாரண கொட்டைப்பாக்கு

கொட்டைப்பாக்கு தின்பவர்களுக்கு கோழை மலம் மலப்பையானது அடிதட்டிலிருக்கும் கிருமி இவைகளை நீக்கும், இது சுரரோ யுடையவர்களுக்கும் ஔஷதம் சாப்பிட்டவர்களுக்கும் வாயிற் போட்டுக் கொள்ள உதவும். அதிகமாகவும் தின்னக் கூடாதென்றறிக.

சொத்தைப்பாக்கே சுகுனம்

சொத்தைப்பிளவிடித்து தோயமதிலூரவிட்டு
சத்துவரநூறுவிசை தான்கழுவி—வைத்துலர்த்தி
வாசமைத்துத்தின்ன மந்தமொடுதோஷமறும்
தேசுமழகாமதிதம் செப்பு.

(இ - ள்.) சொத்தைப் பாக்குகளை யிடித்து நல்ல ஜலத்தில் நூறுதரம் கழுவி உலர்த்தி அத்துடன் வால்மிளகு ஏலரிசி முதலிய வாசனைத் திரவியங்களைக் கலந்து தாம்பூலந் தரித்துக் கொள்ளில் அக்கினிமந்தமும் திரிதோஷங்களும் விலக்கும்; ஒளிவும் முகத்தேஜசும் உண்டாகும். எ - று.

சுண்ண விதி

கற்சுண்ணத்தினல் அன்னம் ஜீரணமாவதுந் தவிர குடலைப் பற்றிய சில நோய்கள், நெஞ்சுசிக்கு, வாதகிரிச்சனம் இவை நீங்கும். பற்கள் வலிவுதரும்; நெருப்புப்பட்ட புண், சொரி, சிரங்கு, தினவு, காயங்களால் வொழுகுகின்ற

ரத்தம், அளிந்த விரணம், மண்டைப்புற்று, தலைநோய், சன்னி இவைகளுக்கு கிரமப்படி உபயோகப்படுத்துவது முண்டு. சுக்கிலத்திற்கும் பலந் தரும்.

முத்துச்சுண்ண விதி

முத்துச் சுண்ணத்தை உபயோகப்படுத்துபவர்களுக்கு நீடித்த பேதியை விலக்கும். மலக்கிருமி, வயிற்று நோய் இவைகளை விலக்கும். வாதரோக மணுகவொட்டாது முகம் பளபளப்பும் தேஜசும் உண்டாகும்.

தாம்பூல கால விதி

காலைப் பிளவதிகங் கட்டுச்சி நீரதிகம்
மாலையி லதிக மாயருந்தில்—வேலைநிலக்
காலை மலங்கழிவுங் கட்டுச்சி தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்.

(இ-ள்.) தாம்பூலந் தின்பவர்கள் காலையில் பாக்கை அதிகமாய் சேர்க்கில் அன்றாடம் சரியாய் மலங்கழியும் மத்தியானத்தில் சுண்ணத்தை அதிகமாய் சேர்க்கில் நல்ல பசியையுண்டாக்கும். மாலையில் வெத்திலையை அதிகப்படுத்தி யருந்தினால் வாய் மணம் வீசும்; திரிதோஷமும் அணுகவொட்டாது சமப்படுத்து மென்றறிக. எ-று.

தாம்பூல சார விதி

பாக்கு, வெற்றிலை, சுண்ணம் மூன்றும் ஒன்றுபட மெல்லும்போது அதில் நின்று ஊரிய முதல் நீர் நஞ்சு, இரண்டாவது நீர் மிகு பயித்தியம், மூன்றாவது நீர் அமுர்தம், நான்காவது நீர் அதியினிப்பு, ஐந்தாவது ஆறாவது நீர்கள் பித்த தோஷம், அக்கினிமந்தம். பாண்டுரோகம் இவைகளை யுண்டாக்கும்.

மலரணை விதி

தீபாக்கினி தழையுந் தின்றமருந் தாலெழுந்த
தாபாக்கினி யுந்தழை யுங்காண்—யாபார
நட்புவரும் விந்தூறும் நாளுமுட லுஞ்செழிக்கும்
புட்பவணைக் கென்றே புகல்.

(இ - ள்.) மல்லிகை, முல்லை முதலிய புட்பவணையில் துயில்பவர்கட்கு பசி, போகத்திலிஷ்டம், சுக்கிலவிர்த்தி, சரீரம் செழித்தல் இத்தகைய நற்குண முண்டாகும். மந்தத்தி லுண்டாகிய வெட்பத்தைத் தணிக்கும். எ - று.

இலவுபருத்தி பஞ்சணையின் விதி

இலவின்பஞ்சு படுக்கைக் கேகுமன மெல்லா
மலர்பருத்திப் பஞ்சுமா வணையோ—உலவிரத்தம்
விந்திவைக ளைப்பெருக்கு மேல்விகர முண்டாகுங்
குந்துசுரத் தையமைக்குங் கூறு.

(இ - ள்.) இலவம்பஞ்சு படுக்கையால் உட்சூடு நீங்கும், பருத்திப்பஞ்சு மெத்தையிற் படுப்பவர்களுக்கு இரத்தம், விந்து, காமச்சுரம் இவைகள் விருத்தி செய்யும். எ - று.

இரத்தினக்கம்பள விதி

விருத்தம்

பஞ்சவர் னஞ்சேர்கம் பளத்துருஞ் சலவைதோடம்
விஞ்சிடும் பித்தந்தாது விர்த்தியு முண்டாஞ்சீத
மஞ்சிடுங் கோபவைய மலைந்திடும் பாண்டுவோடு
நஞ்சுக ளெல்லாந்தீரு நலம்பெறு முன்னமாமே.

(இ - ள்.) வெள்ளை, சிகப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு யென்னும் 5-நிற ரோமங்களால் நெய்த ரத்தினக் கம்பளத்தில் துயில்வோர்களுக்கு சீதளதோஷம், குளிர், பாண்டு, வீக்கம் பித்தம் இவை நீங்கும். சுக்கிலதாது அதிகரிக்கும், மிகுந்த உஷ்ணமா மென்றறிக. எ - று.

சகலாத்து

சகலாத்துப் போர்வை படுக்கை கொள்பவர்களுக்கு சுரத்திற் குபயோகமாகும். குளிர், பனி இவைகளை நீக்கும் வர்ணங்கள் சேர்ந்த சகலாத்திற்கு அற்ப உஷ்ணமா மென்றறிக.

பாய்களின் விதி

தாழம்பாயில் சயனிப்பவர்களுக்கு தலை சுழற்றல், பாண்டு ரோகம், பித்ததோஷம், நீராமைக்கட்டி, வெகு மூத்திரம் இவைகளை விலக்கும் யென்க.

கோரைப்பாயில் சயனிப்பவர்களுக்கு அக்கினிமந்தமும், சுரதோஷமும் நீங்கும். தேகம் குளிர்ச்சி யுண்டு; சுக நித்திரை கொடுக்கு மென்க.

சாதிப்பாயில் அதாவது பிரப்பம்பாயில் சயனிப்பவர்களுக்கு மூலரோகம், சீதமலம், சீதசுரம், சிரோரோகம் இவை யுண்டாக்கு மென்க.

பேரீச்சம்பாயில் சயனிப்பவர்களுக்கு வாதகுன்மம், சோகையும் நீங்கும். பசி, பாண்டு, உஷ்ணதிக்கம் உண்டா மென்க.

சிற்றீச்சம்பாயில் சயனிப்பவர்களுக்கு அதிக உஷ்ணம், தேக வுளைவு, கபசினம் இவையுண்டா மென்க.

மூங்கிற்பாயில் சயனிப்பவர்களுக்கு மூத்திரக் கிரிச்சனம் உஷ்ண பித்தம் ஆகிய இவைகள் மேலுமேலும் விருத்தி யாகு மென்க.

பனையோலைப்பாயில் சயனிப்பவர்களுக்கு அதிக உஷ்ணமும், வாத நிக்கிரகமும் செய்யும் சற்று பித்தம் விளை விக்கு மென்க.

தலையணை விதி

கழுத்திற்குந் தோளுக்குங் கண்ட வுயர்வாய்
வழுத்து நீளத்தில் வைத்தமட்டா—யிழைத்தநறும்
பஞ்சின் றணையணைக்கெப் பானரம்பும் நன்றும்போந்
துஞ்சின் றலைக்குமுச்சிச் சூர்.

(இ - ள்.) கழுத்திற்குந் தோளிற்கும் மத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாகவும் வேண்டிய நீளமுள்ளதாக வும் இலவம் பஞ்சியினல் தைப்பித்த தலையணையின்மேல் சிரசு வைத்து படுத்துக் கொண்டால் பாதாதி கேசமட்டும் உள்ள யெந்த பக்கத்து நரம்புகளும் பிசகாமல் இருக்கும். அதுவுமன்றி சிரசைப் பற்றிய ஆவர்த்த நோய்களும் நீங்கி விடும். நாம் சொன்னது சந்தேகமா யிருந்தால் இப்போதே நீ நித்திரை செய்து பரீட்சை பார்ப்பாயாக. எ - று.

நித்திரைசெய் விதி

ஐயந்திரிய சவுக்கியமுந் தானகலும்
நைந்தமனத் துச்சாகம் நண்ணுங்காண்—பைந்தொடி
மேனீட்டு மாயுளுரும் மெய்யினயர் வொழியும் [யே
கானீட்டிப் பள்ளிகொள்ளுங் கால்.

(இ - ள்.) முறைப்படி இடது பக்கமாகப் படுத்து காலை நீட்டிக்கொண்டு நித்திரை செய்தால் பஞ்சேந்திரியங்களி னயர்வும் சரீர வருத்தமும் நீங்கும்; இளைத்த மனத்திற்கு உற்சாகமும் ஆயுசு விருத்தியு முண்டாகும். எ - று.

முக்காட்டு நித்திரை விதி

முக்காடிட் டங்கமுற்றும் மூடித்துயிலி விரண்
டக்கிக்குந் தோட்கு மதிபலமா—மிக்கான
சீதவெயிற் றூசிபனி சேரிவருங் குளிரிவையா
தேதுவருத் தம்மிலையென் றெண்.

(இ - ள்.) தேகாதி பாதம் வரைக்கும் வஸ்திரத்தால் மூடிக்கொண்டு நித்திரை செய்யில் இரண்டு நேத்திரங்களுக்கும் இரண்டு புஜங்கட்கும் வண்மை யுண்டாம். அன்றியும் குளிர், பனி, வெய்யல், தூசி, மேகம் இவைகளால் விளைகின்ற குற்றங்க ளணுகாதென்றறிக. எ - று.

தொக்கணத்தின் விதி

தொக்கணினு விரத்தம் தோலு ணிவைகட்கு
மிக்க சவுந்தரிய மீண்விழியா—மெய்க்கதிக
புட்டி யிரக்கம் புணர்ச்சி யிவைகட்கு
பட்ட வலைச்சலரும் பார்.

(இ - ள்.) தொக்கணத்தினுல் இரத்தமானது சருமம் மாமிசம் ஆகிய சப்ததாதுக்களும் போஷணை யாவதும் தவிர தேகபுஷ்டியும் சுக நித்திரையும் புணர்ச்சியி லின்பமும் அதிகரிக்கும். வாதாதிக்கமும் உழைப்பினுல் வந்த வருத்தமும் நீங்கும். (தொக்கண மென்பது) குத்துதலும் தேகத்திற்கு யிதவாகப் பிடிப்பதுமாம்.

இரா நித்திரைபங்க விதி

சித்தமயக் கஞ்செரியும் புலத்தயக்க
மெத்தலனுக் கமைந்த மென்பவைக—னித்தமுற
வண்டுஞ் சிலரை நாயாய்ப் பன்னோய் கவ்வுமிராக்
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்.

(இ - ள்.) இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலச் சோர்வு, கட்கம், பயம், அக்கினிமந்தம் முதலிய நோய்கள் மெத்தவும் நம்பிக்கையாகத் தொடரும். அதுவுமன்றி, வேடருடைய நாய்கள் கவ்வுதல்போல நித்திரை யில்லாதவரை பற்பல நோய்களும் கவ்விக் கொள்ளும். எ - று.

சயன திக்கு



வெண்பா

இந்திரற்கு நிதிசேரு மேமென் றனக்காயுள்
பித்த வருணன் பிரபலமுமா—மைந்தாகேள்
பொன்னின் குபேரன் பிணியாகும் நித்திரைக்கு
முன்னுரைத் ததிக்கே முயல்.

(இ - ள்.) இந்திர திக்கென்னும் கிழக்கில் சிரசு வைத்து படுத்தால் ஐஸ்வரியம் சேரும், இயமன் திக்குயென்னும் தெற்கில் சிரசு வைத்து படுத்தால் ஆயுள் விர்த்தியாம். வருண திக்கு யென்னும் மேற்கு சிரசு வைத்துப் படுத்தால் பிரபலமும் கீர்த்தியும் உண்டாகும். குபேர திக்கு யென்னும் வடக்கு வியாதி சம்பவிக்கு மாதலால் வடக்கு சிரம் வைத்து படுக்கலாகாது. படுக்கும்போது கௌபீன மில்லாமலும் அம்மணமாயும் படுக்கலாகாது. இரவில் போஜனம் செய்த பிறகு நூறு அடி உலாவிய பின் நித்திரை செய்வதே சயன சாஸ்திர விதியென் றறிக. எ - று.

நித்திரைசெய்து விழித்தவுடன் பார்க்க வேண்டிய விதி

நித்திரை செய்து விழிக்கும்போது தாமரைப்பூ, தங்கம், தீபம், கண்ணடி, சூரியன், புகையொழிந்த நெருப்பு, கொஞ்சந் தனம், கடல், வயல், சிவலிங்கம், முகில் சூழ்ந்தமலை, கன்றையுடைய பசு, கற்பக விருட்சம், தமது வலக்கை, மனைவி, மிருதங்கம் இவற்று ளெதுவேனும் ஒன்றைப் பார்க்கில் உத்தமம். விழித்தவுடன் கண்ணடியைப் பார்த்துக் கொண்டுவரில் வீரிய விர்த்தியும் மகிழ்ச்சியும் சர்வ வசியமும் ஞானமும் அதிகரிக்கு மென்பார்.

நித்திரைசெய்து விழிக்கையில் பார்க்கக்கூடா விதி

நித்திரை செய்து விழித்தவுடன் அங்கயீனம், வஸ்திரயீனம், பாம்பு, காவிவஸ்திரம், கிரசங்கை, ஊமை, மொட்டைத்தலை, செவிடு, அழுகை, சடை, கூன், அழுக்குமேனி, விரிந்த மயிர்தலை, குஷ்டம், கொலை, எண்ணெய்தலை, மனோவியாகூலம், உன்மதம், ஆசூசம், விதவை, பாம்பு, பூனை, சாம்பல், எருமைகன்று, உலக்கை, முறம் இவைகளைப் பார்த்தால் அன்றைக்கு கெடுதி அல்லது பல துன்பங்களுண்டாகு மென்றறிக.

பல்விளக்கும் விதி

வேலுக்குப் பல்லிரும் வேம்புக்குப் பற்றுலங்கும்
பூலுக்குப் போகம் பொழியுங்கா—லுலுக்கு
தண்டாமரையாளும் சார்வாளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்.

(இ - ள்.) கருவேலங் குச்சியினல் பற்களுக்குரிதியும், வேப்பங் குச்சியினல் பற்களுக்கு வொலியும், நீர்ப்பூலாக் குச்சியினல் வீரியவிர்த்தியும், ஆலம் விழுதினல் லக்ஷ்மி கடாட்சமும் நாயுருவியினல் துலக்கினல் வசீகரமு முண்டாம். எ - று.

பல்விளக்கக்கூடாத விதி

கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம்—பல்லதனை
தேய்த்திடுவா ராமாயின் சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து.

(இ - ள்.) செங்கல்மாவு, மணல், கரி, தென்னம்பாளை, வைக்கோல் இவைகளால் தினமும் பல் துலக்குவோரிடத்தில் இலட்சமி நீங்கி மூதேவி வந்து சேர்வாள். எ - று.

சௌக்கியக் குறிப்பு

சரீரத்தை அசைத்தும், சிரசை ஆட்டிக்கொண்டே நடக்கையாலும் மல்லார்ந்துப் படுத்து இருகையும் துடைக்குள் வைத்து புரண்டு புரண்டு தூங்குவதாலும், இரு கைகளையும் மார்மீது வைத்துத் தூங்குவதாலும், அதிக நெடுமூச்சு விட்டு நித்திரை செய்வதாலும், மலஜெலங்களை அடக்குதலாலும், வலிவுக்கிசைந்தவாறு புணராமல் விசேஷ ஸ்திரீபோகஞ்செய்து விந்தை நாசப்படுத்துவதாலும், அகாலபோஜனத்தாலும், சதாவிசனமும், பொருமையும், வஞ்சகமும், எப்பொழுதும் கோபசிந்தையு மிருக்குமாயின் அதிசீக்கிரத்தில் பிணிகள் சம்பவிக்குமென்றறிக.

அன்றியும், பூமியின் தண்ணீராவது தேசங்கள்தோறும் பேதப்பட்டிருப்பதால் சுயபூமி அல்லது தேகத்திற்கு ஒத்துமையான இடங்களை விட்டு அன்னிய தேசங்களில் சஞ்சரிக்க நேரிட்டால் அந்த ஊரின் ஜலத்தில் தேயிலை, தேத்தாங்கொட்டை, காசுக்கட்டி, மாம்பருப்பு, கொட்டைப்பாக்கு இவைகளில் ஏதாவதொன்றை உறைத்து தெளியவைத்து உபயோகப்படுத்தி வருவது மகா உத்தமம், அல்லது 2-படி தண்ணீரும் 5-குண்டுமணியெடை படிகாரத்தை உறைத்துக் கலந்து 12-மணி நேரஞ்சென்று அடியில் ¼-படி நீங்கலாக மற்றவை யிருத்து தாகம் முதலானதற்கு உபயோகப்படுத்தி வந்தால் எத்தேசத்து ஜலமும் தொந்தரை செய்யாமல் சவுக்கியமும் சந்தோஷமும் உண்டாக்கும்.

:நோயணுகா விதி முற்றிற்று.

———

இரண்டாவது

மாதர் விதி

பொது மாதர்

கலித்துறை

துக்கம் பயமயக் கேசந்திரிமலர்த் துஞ்சலலி
வெட்கம் பசிகருப்பந்தாக ப்புவெறுமூப்ப சுபஞ்
சுக்கமலட் சியங்கோப ரூபமெய்த் தூர்க்கந்தங்கொண்
மிக்கதிதூல முடைமாதர்போகம் விணைக்குவித்தே.

(இ - ள்.) துயரம், அச்சம், தேகமுழுதும் ரோமம், திரிதோஷ கோபம், தூங்கிவிழுதல், அலித்தன்மை, நாணம், பசி, சுகமின்மை, அசுசி, முகயோனி, ரோகம், அலட்சியம், கோபம், அழிசின்னம், கற்றாழைநாற்றம், கோள்சொல்லுதல், அதிதூலதேகம் ஆகிய இப்பேர்க்கொத்த மாதர்களை இணங்குதல் சகல ரோகத்திற்கும் காரணமாம். எ - று.

கூடா மாதர்

தேவ ருவரசா தினதாரத் தயலார்
பாவ வமங்கலமாம் பாவையர் பால்—மேவியின்பங்
கண்டாரைச் சாறுமுறு கண்ணிடுக்க மின்றியே
விண்டாரைச் சாறுமுன்னி விள்.

(இ - ள்.) தேவஸ்திரீ, குருபத்தினி, இராஜபத்தினி, ஏழை ஸ்திரீ, தாரஸ்திரீ, விதவை இவர்களை போகிக்கும் புருடர்களை தரித்திரமும் துன்பமும் துடருமேயன்றி மற்ற யாரை துடரும். எ - று.

மாதர் சம்பந்த விதி

16-வயதுள்ள ஸ்திரீயும் 20-வயதுள்ள புருஷனுக்கு விவாகம் முடிக்கவேண்டுமென்பது தருமசாஸ்திர பிரமாணமென்றறிக. சில மதத்தினர் புஷ்பிணியாவதற்கு முன்னம் கல்யாணம் செய்வது முண்டு. அப்படி செய்யினும் 10-12-15 வயதுக்குள் புஷ்பிணியானாலும், 16-18-வயது வரையில் புருஷனுடன் புணரவொட்டாமல் காப்பாற்ற வேண்டியது தாய் தந்தையர்க்கு முக்கியமான கடமையாகும். அதே

னெனில், புஷ்பிணியான பிறகு 2-3 வருஷ மட்டிலும் இணங்காதிருந்தால் கருக்குழி முதலிய உட்கருவிகள் யாவும் வளர்ந்து விசாலயிடம் பெற்றும் வலிவடைந்தும் இருக்கும். கரு தரித்தாலும் சட்டை பண்ணமல் தாங்கும்படியான முதிர்ச்சி பெறுமென்பது கருத்து. இவ்விதியின்படி நடப்பவர் ஆங்கிலேயரே யாதலின் 16-18 பிள்ளைகளைப் பெற்றும் மேற்படி பெண்களும் புருடர்களும் மிகுந்த பலசாலிகளாகவும் சர்வ தொழிலின் முறையிலும் சாதுர்யவான்களாயும் புத்தி யுத்தியில் புனிதராயும், இளமையில் மரண மில்லாதவராயும், செழித்திருப்பது ஏற்கனவே திஷ்டாந்திரத்திற் தெரிய வருகிறது.

புணர் விதி

அங்கமுற்றும் பாகியமா யார்வமொன்று யன்பொன்று
யங்கமுற்றும் போகமொன்று யாருங்கா—லங்கத்
துறையுஞ் சகலவித வுற்ற கருவிங்க
தறையும் பருவத் தவர்.

(இ-ள்.) மேற்கூறியபடி 16-வயதுள்ள ஸ்திரீயும் 20-வயதுள்ள புருஷனும் மாதத்திற் கொருநாள் இராத்திரி காலத்தில் சரீர சம்பந்தப்பட்டால் உற்பவிக்கும் குழந்தைகளுக்கு தேக திடமா யிருக்கும். யாதொரு வியாதியும் வராது. அப்படி வந்தாலும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி விடும். தாய் தந்தையருக்கும் திரேகம் உறுதியாயிருக்கும். பற்பல வியாதிகளும் வாதிக்காது. மேற்படி முறைப்படி மாதத்திற் கொருநாள் மருவுங்கால் இருவருக்கும் உண்டாகிய ஆசையும் அன்பும் ஒன்று யிருந்து இருதயமும் சுத்தமா யிருக்க வேண்டுவதுடன் திரேக மறைப்பில்லாமல் இணங்குவாராகில் நல்ல கருதரிக்கு மென்பர். அன்றியும்,

ஸ்திரீகள் மாதாந்த ருதுகாலமாகிய மூன்று நாளும் அசுத்த நாளாகையால் புருஷன் சேரக்கூடாது. ஏனெனில் கருப்பையின் முகத்துவாரமானது பிரமாணந் தப்பி மிகவும் விஸ்தரித்திருப்பதாலும் சுக்கிலத்தை அளவு மீறிக் கொள்ளுவதாலும் சுரோணிதமானது மிதமிஞ்சிக் குழம்பிக் கொண்டிருப்பதாலும் ஆணும்பெண்ணல்லாத அலிப்பிள்ளை பிறக்கு மென்பர் அதுவுமல்லாமல் மாதாந்த ருதுவென்னும்

ரகசிய ஸ்தானம் செய்யும் மூன்றுநாளும் நீக்கி நாலாவது நாட்டுடங்கி இரட்டித்தனுள்களிற் புணர்ந்தால் ஆண் குழந்தையும், ஒற்றைபட்ட நாள்களிற் புணர்ந்தால் பெண்குழந்தையும் பிறக்கு மென்பர். இந்த விவரத்தை யெல்லாம் (சரீரம் யென்னும்) சாஸ்திரத்தில் முதலத்தியாயத்திற் காண்க.

கெற்ப விதி

அகநாள்விந்துவிட்ட ஐந்தாநாள் கடுகுபோலாம்
போகவீரைந்நாளில் பொருந்தியமுட்டைப்போலாம்
ஏகமாதத்தில்பிண்டம் இரண்டினில்மார்பமட்டாம்
பாகமாமூன்றுந்திங்கள் பகருந்தி மட்டுமாமே.

மட்டுடன்நாலாந்திங்கள் வளர்ந்திடும்பாதமட்டும்
கட்டுடன்ஐந்தாமாதம் கருவுபூரண மாம்ஆறில்
தட்டுடன்யெலும்புஜீவன் தலைமயிர்நரம்புயேழாம்
எட்டுடன்அரிவாம்ஒன்ப தியல்சதம் பிறவியாமே.

பெண் ஆணறியும் விதி

கெற்ப ஸ்திரீகள் உட்காருகையிலும் யெழுந்திருக்கையிலும் வலது கையை விசேடமாக ஊன்றுவார்களாகில் ஆண்சிசு வென்றறியவும். வலது கையைப் பார்க்கிலும் இடது கையை விசேடமாக ஊன்றுவார்களாகில் பெண்சிசு பிறக்குமென்றறிக. அல்லது,

மாசற்ற துத்திஞகப் பாத்திரத்தில் நல்ல ஜெலம் விட்டு கலங்காமல் நிற்கச் செய்து கெற்ப ஸ்ரீகளினது முலைப்பால் 1-அல்லது 2-துளி விடவும் அப்பாலானது பரவி மிதக்குமாயின் ஆண்சிசு வென்றும், மிதக்காமல் உள்ளமுந்துமாயின் பெண்சிசு பிறக்குமென் றறியவும்.

ஆண்சிசு தரித்திருக்குமாயின் பிண்டம் வலதுபாரிசத்தி லிருப்பதாகத் தோன்றும் அதிக வருத்தமில்லாமலும் யிருக்கும் பெண்சிசு தரித்திருக்குமாயின் பிண்டம் யிடதுபாரிசத்தி லிருப்பதாகத் தோற்றும் ஆண்சிசுவா லடைவதைப் பார்க்கிலும் ஒரு பங்கு அதிகமான வருத்தமும் துன்பமும் அடைவா ளென்றறிக.

கெற்பக்குறி யறி விதி

கருக்குழி யென்னும் கெற்பப்பையானது தட்டையாயும் நீளத்தில் 3 அங்குலமும் அகலத்தில் 2 அங்குலமுள்ளதாயும் கீழ்புறத்தில் தூர்நீர் முதலியவற்றைக் கழிப்பதற்கு துவாரமுள்ளதாயும் யிருக்குமென்பார். அதனிடமாகத்தான் சூதகம் சுரப்பது இயற்கையாம். அக்கருப்பையின் கழுத்தைப்பற்றி அனேக தசைகளும் சவ்வுகளும் சூழ்ந்திருக்கும், அப்பையினது சுபாவம் 5 அங்குல சுற்றளவாயுள்ளதாகவும் இருக்கும். கருவு வளர வளர தானும் வளர்ந்துக்கொண்டே வரும். பிரசவ காலத்தில் ஏறக்குறைய ஒருமுழமுள்ள விஸ்தீரணமாகும். அந்த பையினிடத்தில் 280 அல்லது 300-நாளைக்குள் படிப்படியாய் வளர்ந்து வெளியாகியபின் மேற்படி பையானது பந்துபோல் சுருங்கி சிறிதாகிவிடும், இரண்டு ஜவ்வுகளால் ஏற்பட்ட பனிக்குடமென்னும் பையினிடத்தில் சிசுவானது மிதந்துக்கொண்டிருக்கும் நிமித்தியமும் அந்த சிசுவுக்கு அடி முதலிய அபாயம் நேராமலும் காக்கும் பொருட்டு மேற்படி பனிக்குடத்தில் ஜெலத்தையுண்டுபண்ணக் கடவுளின் கிருபையை இந்நூலெழுதியயானும் வாசிக்கின்ற நீங்களும் அறிவது அசாத்தியத்திலும் ஆயிரம் பங்கதிகத்திற் கதிகமாம். இந்த கெங்கை யுற்பவத்தை அறியும்திறமை சாகரக் கல்வியை தாகமாயுண்ட மகான்களும் திரிகாலத் தியானிகளுமாகிய சித்தர்களே யறிவாரென் றுரையலாமென்க.

மேற்படி பையினிடத்தில் தரித்திருக்கும் கருவானது 1 இஞ்ச் முதல் 17-18 இஞ்ச் வரையில் வளரும் அதினுடைய பாரமானது ½-பலம் முதல் 1-வீசை கனமுள்ளதாயிருக்கும் அக்கருப்பையி னிடமாயிருக்கும் சிசுவானது வவ்வாலைபோல் அதோமுகமாக ஊஞ்சலாடிக்கொண் டிருப்பதுடன் முகம் பின்பார்வையுற்றும் முழங்கால்கள் முகவாய்க்கட்டையணைய முடக்கிக்கொண்டும் கைகளை நெஞ்சிற் கட்டினபடியாயும் சுருங்கினதேகமாயும் கருக்குழியின் ஜலத்தில் நீந்திக்கொண்டிருக்கையில் துள்ளித் துள்ளியும் இடம் வலமாகத் திரும்புதலும் உண்டு. அப்படி சுழலும்போது உந்திக்கொடியானது கழுத்தினிடமாகச் சுற்றிக்கொள்ளுத வியற்கையேயாம்.

சமரசநிலையி லுதிக்காமல் ஒன்று இரண்டு சுற்றுகள் அதிக மாயிருக்கையில் பிறக்குமாயின் அதைத்தான் மாலைசுற்றிப் பிறந்ததென்றுஞ் சொல்லுவார்கள்.

கருவளர்க்கும் விதி

1-வது மாதம் அல்லது குளிநின்ற மாதத்தில் கெர்ப்ப ஸ்திரீகட்கு அடிவயிற்றில் சிறுவலியாயிருக்கும். (அதற்கு சாந்தி) தாமரைப்பூ ஒன்று, சந்தனத்தூள் விலாமிச்ச வேரின் தூள் வகைக்கு 3-காசுயெடை சேர்த்து நீர்விட்டரைத்து ஆழாக்கு பசும்பாலில் கரைத்துக் கொடுக்க நிவர்த்தி, இப்படி ஒன்று இரண்டுவேளை கொடுக்கவும்.

2-வது மாதத்தில் மேற்படி வலிபோற்காணும் அல்லது சிறுகுத்தலாகக் காணும் (அதற்கு) தக்கோலமும் தாமரைப் பூவும் சமனெடை சேர்த்து குளிர்ந்த நீர்விட்டரைத்து பசுவின்பாலில் கரைத்துக் கொடுக்க சவுக்கியமாம், இப்படி ஒன்று இரண்டுவேளை செய்யவும்.

3-வது மாதத்தில் வயருளைவு நமநமத்தல் இவை காணுமாகில் வெண்டாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும்,சமனெடை கொண்டரைத்து பசும்பாலில் கலக்கி கொடுக்கவும், இப்படி இரண்டொரு வேளை கொடுக்கவும்.

4-வது மாதத்தில் கெற்பவலி காண்பதுடன் இரத்த முதிக்குமாயின் நெய்தற்கிழங்கும் நொச்சிவேறும் சமனெடை கொண்டரைத்து பாலில் கரைத்துக்கொடுக்க சவுக்கியமாம். இப்படி இரண்டொரு வேளை கொடுக்கவும்.

5-வது மாதத்தில் வயிற்றுவலி கொஞ்சம் விசேஷித்துக் காண்பதுண்டு. அப்படிக் காணுமாகில் ஆம்பல்பூவும் விலாமிச்சவேரும் சமனெடை கொண்டரைத்து பாலில் கரைத்துக் கொடுக்கவும், மூன்று நான்கு வேளையில் தீரும்.

6-வது மாதத்தில் கெற்பம் குடல் அழன்று வலிக்கும். அத்துடன் நீர்சுருக்கம் காணுமாகில் திப்பிலி, முந்திரிப்பழம் நெய்தற்கிழங்கு சமனெடை கொண்டரைத்து பாலில் கொடுக்க நிவர்த்தியாம்; இரண்டு மூன்று வேளை தரவும்.

7-வது மாதத்தில் வயறு வலித்து நோய் விசேடித்துக் காணுமாகில் விலாமிச்சவேறும் சந்தனம் தக்கோலம் சமனெடை கொண்டரைத்து பாலில் கரைத்து கொடுக்கத் தீரும்.

8-வது மாதத்தில் கைகால் ஓச்சல், பசியில்லாமை சில வேளை ஏப்பம் காணுமாகில் தாமரைப்பூவும் நெய்தற்கிழங்கும் அரைத்துப் பாலில் கரைத்துக் கொடுக்கவும், மூன்று நான்கு வேளையில் தீரும்.

9-வது மாதத்தில் கெற்பத்தில் வலியல்லது அதிக நோய் காணுமாகில் அரசமரப்பட்டையும் மருதம்பட்டையும் சமன் கொண்டரைத்து பாலில் கொடுக்கவும், இந்தப்படி மூன்று நான்கு வேளை கொடுக்கவும்.

10-வது மாதத்தில் காணும் நோய்களுக்கெல்லாம் இலுப்பைப்பூவும் சர்க்கரையும் சமனெடைகொண்டு நீர்விட்டரைத்து பாலில் கொடுக்கவும், இப்படி மூன்று நான்குவேளை அடுத்தடுத்துக் கொடுக்க நிவர்த்தியாம்.

கருவை வளர்க்கும் ஏகமூலித் தைலம்

இங்ஙனங் கூறிய சிகிச்சைகள் 10-மாதத்திற்கும் தனித் தனியே செய்வதற்கு முடியாத பக்ஷமா யிருந்தால் விளக்கெண்ணெய் வீசை-1 நிறுத்தெடுத்து தாளிவேர் 5-அல்லது 7½-பலங் கொண்டுவந்து எண்ணெயிற் போட்டு அடுப்பேற்றி கமலாக்கினியாக எரித்துவரவும், அப்படி எரிக்கும்போது அப்போதைக் கப்போது எண்ணெயிற் போட்டிருக்கும் வேரில் ஒன்றை யெடுத்து இரண்டுமுனையும் பிடித்து உடைத்தால் மளக்கென்று உடையவேணும். அப்படி உடையுமாயின் அந்தப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு கெற்பஸ்திரிகளுக்கு ஐந்தாவது மாதம் துடங்கி ஒன்பதாவது மாதம் வரையில் அநந்தமாதம் பிறந்த முதலில் மூன்றுநாள் வீதமாக ½-பலம் எண்ணெய் கொடுத்து ஒரு நாழிகை சென்று பழயது சாப்பிடவும், இதற்குப் பழயது எண்ணெய் யென்றும் பெயர், சாப்பிடும் ஸ்திரிகளுக்கு யாதொரு வியாதிகளும் பிரசவ காலத்தில் வேதனை யில்லாமலும் பிரசவிக்கும் அந்த குழந்தைக்கு கரப்பான், மாந்தன், கணம்,

வாய்வு, யாதொரு வியாதியும் இருக்காது. செகிட்சியாக வளரும்.

மாதர் சமாதானம்

ஐயா புத்திமான்களே! பூர்வீக இராஜாக்களும் வித்துவான்களும் ரிஷிகள் முதலான முதியோர்களும் தங்களுடைய பத்தினிகளை எவ்வளவோ கௌரவமாக நடத்தினார்களென்றும், ஸ்திரீகளுடைய வார்த்தைகளை அவர்கள் ஒருக்காலும் தட்டினதில்லை யென்று இராமாயணம், பாரதம், பாகவதம், நைடதம் முதலிய காவியங்களால் தெரிய வருகிறதன்றி இந்துக்களாகும் நம்முடைய தேவர்களும் ஸ்திரீகளை கீழே விட மனமில்லாதவர்களாய் தங்கள் தங்கள் தேகங்களிற்றானே வைத்துக் கொண்டதாகவும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றதை யாம் கண்ணுற்றிருக்கிறோமல்லவா? சாக்ஷாத் பரமசிவன் தனது தேவியாகிய பார்வதியை பாகத்திலும், கங்கை யென்னும் மற்றொரு பெண்ணைத் தலையிலும் வைத்துக் கொண்டதாகவும், மகா விஷ்ணுவானவர் தனது பாரியாகிய இலட்சுமியை மார்பிலும், நான்முகனாகிய பிரம தேவன் தனது பத்தினியை நாவிலும், இந்திரன் தொடையிலும் இவ்வாறாக பற்பல புராணங்களிற் படித்தும் பிரசங்கித்து வருகிற நாம் மாத்திரம் நமது மனைவிமார்களை அடிமையிலும் கடைப்படக்கடிந்து நடத்தி வருவது அளவிடப்படாத பெண் துரோகமேயாம்.

மனுஷாவதாரஞ் செய்த நம்மையும் கண்ணகன்ற உலகத்தையும் சிருஷ்டித்த கடவுளுக்கும் மாதா யிருக்க வேணுமென்ற சந்தேகம் ஒவ்வொருவருக்கும் புலப்படுவதுடன் தற்காலம் இத் தேச முழுமையும் அரசாட்சி செய்யும் விக்டோரியா மகாராணியும் ஸ்திரீதானே இதுவுமன்றி நம்மை பத்துமாத மளவும் உதிரத்தில் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்த தாய்மார்களும் பெண்கள் தானே இரவெல்லாம் கண் விழித்து அடிக்கடி பால் கொடுத்து மருந்து கொடுத்து தாங்களும் மருந்துண்டு பத்திய மிருந்து பிள்ளைகளுடைய மல ஜலாதிகளை யெல்லாம் சகித்து தங்களுடைய பிராணனெல்லாம் பிள்ளைகள் மேல் வைத்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகள் வளரும்

பொருட்டாய்த் தாய்மார்கள் படுங் கஷ்டம் இவ்வளவென்று சொல்லக் கூடுமா?

நாம் கலியாணம் செய்து கொள்ளுமளவும் தாய் தமக்கை முதலானவர் கையிலிருந்து வளருகிறதுந் தவிர 'தாய்க்குப்பின் தாரம்' யென்று சொல்லும் பழமொழிக் கிணங்க விவாகமான பின்பு பத்தினிகளால் சகல சம்ரக்ஷணையும் அடைகிறோ மல்லவா திரவியமும், கீர்த்தியும் சம்பாதிக்கும் விஷயத்தில் நாம் நம்முடைய எண்ண மெல்லாம் செலுத்துகிறோம். தாய் தமக்கை பத்தினி முதலானவர்களின் எண்ணமென்றாலோ நமக்கு வேண்டிய சுகத்தையும் நம் பிரியத்தையுந் தேடுவதில் அவர்களுடைய நினைவை யெல்லாம் வைக்கிறார்கள். நாம் அவர்களுடைய க்ஷேமத்தை நினையாத நேரமில்லை. அவர்களுடைய பேச்செல்லாம் நம்முடைய பேச்சே. அவர்களுடைய நினைவெல்லாம் நம்முடைய நினைவே அவர்கள் செய்யும் தேவதா பக்தி யெல்லாம் நமக்கும் நம் சேய்களுக்கே. இது நிற்க, நாம் நம்முடைய ஊரையும் விட்டு சிலது நாள் பிரிகிறதா யிருந்தால் வேண்டிய சமுதாயத்துடன் பிரயாணப்பட்டாலும் எவ்வளவோ மனஸ்தாபமும் துன்பமும் அடைகிறோம். அப்படி யிருக்க நம்முடைய பத்தினிகள் தாம் பிறந்த ஊரையும் வீட்டையும் தாய், தந்தை, தங்கை, தமக்கை, அண்ணன், தம்பி மற்றுமுள்ள இனத்தினர் யாவரையும் விட்டு கையாண்ட சொத்தும் சுதந்தரமும் மறந்து நம்மை நம்பி வருகிறபடியால் அவர்களை மிகவும் பிரீதியாயும் அவர்க்கோர் மனக்குறையும் அணுகவொட்டாமல் காப்பாற்ற வேண்டியது நமக்கு மிகவும் கட்டாயமான கடமையல்லவா,

பெண்களுக்கு இயற்கையாயுள்ள மாதவிடாய் கெற்பம், பிரசவம், பிள்ளை வளர்த்தல், பாகஞ் செய்தல், புருஷன், மாமி, மாமன் முதலியோரை யுபசரித்தல், விருந்தோம்பல் முதலாகிய கஷ்டங்களையும், துன்பங்களையும் சற்று நினைத்தால் மண்ணும் இரங்கும், மலையும் கரையுமே அதைப் பற்றியே 'பெண்ணென்றால் பேயு மிரங்கு' மென்று சொல்லுகிறார்கள். மழை, பனி, வெயில், காற்று முதலியவைகளை தன் மேல் தாங்கிக்கொண்டு குஞ்சுகளை சிரகுக்குள்

அணைத்துக்கொண்டு காக்கும் பட்சிபோல் சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் ஸ்திரீகள் தாங்கிக் கொண்டு சுகங்களை மட்டும் நமக்குக் கொடுக்கிறார்கள். புருஷர்கள் எவ்வளவுதான் படித்தாலும் ஸ்திரீகளுக்குள்ள அடக்கமும், பொறுமையும், சாந்தமும், உண்மையான விசுவாசமும் புருஷர்களுக்கு வருமா? இறந்து போன பெண்சாதியின் பிரேதத்தை வெளியில் கொண்டு போவதற்கு முன்னமே நாம் வேறே பெண் விசாரித்து புனர் விவாகத்திற்கு அடி போடுகிறோமல்லவா? புருஷ வியோகமான ஸ்திரீகள் வேறு கலியாணமில்லாமல் ஆயிசுனையெல்லாம் வீணே போக்குகிறார்களே சில பெண்கள் புருஷரிறந்து போன துக்கத்தை சகிக்க மாட்டாமல் அதே யேக்கமாக சிலநாளைக்குளிறந்து தன் புருஷனை பின்பற்றுகிறார்கள்.

இவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்களுக்குந் துன்பங்களுக்குந் துயரங்களுக்கும் பெட்டகமாகிய பெண்களுக்கு வாய்ந்த புருடன் எவனோ அவனே அம்மாதிற்கு தாயும், தந்தையும், அண்ணனும், ஆண்டானும், உயிரும் உடலும்போல ஒத்திருப்பதன்னியில் கடவுள் போலக் காற்பதே கடமைகட்கெல்லா முதற்கடமையா யிருக்கிறதென்றறிக.

இதுவுமன்றி, கடவுளானவர் படைத்த எண்பத்து நான்கு லட்ச ஜீவபேதங்களில் அறிவின்மை பிறவியாகிய மிருகங்களிலும் பறவைகளிலும் ஆண்பிறவிகளை எவ்வளவு ரூபசவுந்திரியமாகப் படைத்து இருக்கின்றாரோ அவ்வாறே மனுஷ ஜாதிகளாகிய நம்மில் புருஷரை மாத்திரம் சமரசமாகவும் ஸ்திரீகளை மாத்திரம் அதிரூபவதிகளாகவும் மிருதுவாக்கியமும் துற்பெலமும் துடையிடை செவிகள் முதலிய அவயவங்களை கண்ணுறும் ஆடவர் ஆன்மாக்களை ஆவாகணிக்கப் படைத்தருளியது அக்கடவுளுக்கும் பெண்ணென்ற பிரிய மிருந்ததல்லவா? படைத்தானுக்குள்ள பரிதாபத்தை விட படைப்பி லொன்றாகிய நாம் எவ்வளவு அன்பாக பரிபாலிக்க வேண்டுமோ அதைப் பங்கிட்டுப் பாருங்கள் பெண்படைத்த பாக்கியவான்களே.

அன்றியும், சில துஷ்ட ஸ்திரீகள் தன்னியற்கையால் விபசாரத்துவ மடைந்தாலும் அன்னிய புருஷர்கள் தந்திரத்

தால் அவமான மடைந்தாலும் இந்தியன் பினல்கோர்ட்டு யென்கிற ஆக்கினைப் பிரமாண சட்டமானது அன்னிய ஸ்திரீயுடன் சேருகிற புருஷனுக்கு மட்டும் தண்டனை வகித்திருக்கிறபடியால் சட்ட சாஸ்திரங்களும் ஸ்திரீகளுக்கே அநுகூலமா யிருக்கிறதென்பது ஏற்கெனவே பிரத்தியட்சத்தில் பார்த்து வருகிறோம்.

இதுவுமன்றி உலகத்தில் நடக்கிற சகல சுப சோபனாதிகளிலும் கலியாணமே சர்வ சிலாக்கிய மென்பதை யாவரும் நிராடங்கமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆயிரம், பதினாயிரம், லட்சம் பொன் கொடுக்கல் வாங்கல் விஸ்தாரமான காணி பூமி முதலியவைகளை கிரயத்திற்கும் வாங்குகிறார்கள். அந்த செய்கைகட்கெல்லாம் ஒரு சாட்சி யல்லது இரண்டு சாட்சி முன்னில் நடத்துகிறார்கள் என்பது உண்மைதானே? கலியாணமோ யென்றால் தெய்வ சாட்சியாகவும், குருசாட்சியாகவும், சர்வஜென சாட்சியாகவும் நடப்பதினால் கலியாணம் எவ்வளவே உக்கிருஷ்ட மென்று உசிதமாகத் தெரிகின்றது. கலியாண சம்பிரமத்திற்கு முக்கியமான ஸ்திரீகளை பிற்பாடு அப்பிரியமாகவும் அசிரத்தையாகவும் நடத்துவது தருமமல்லவே. ஸ்திரீயும் புருஷனும் உடலுமுயிரும் போலே மாராத நேசத்துடன் எப்பொழுதும் ஒத்துவாழ்கிறதென்று கலியாண காலத்தில் பிரமாணப் பூர்வீகமாக உடன்படிக்கையும் செய்துக் கொள்ளுகிறார்கள். 1-2 சாட்சிகள் முன்னிலையில் நடக்கும். விக்கிரயம் முதலிய சில நிபந்தனைகள் எவ்வளவோ ஊர்ஜிதமா யிருக்க தெய்வமறிய, குருவறிய, பூமியறிய, ஆகாயவாணியறிய, தேச பிராமணளறிய, அளவிறந்த ஜெனங்களறிய, பந்துயினத்தாரறிய, அம்மியும் அரசாணிக்காலறிய, ஓமகுண்டமாகிய அக்கினி சாட்சியாக செய்துக் கொண்ட கலியாண வுடன்படிக்கையை மீறி (கீரியும் பாம்புபோல) அவர்கள் அடித்துக் கொல்வதும் புருஷர்கள் பரஸ்திரீகமனம் செய்வதும் பரம பாதகமல்லவா.

இல்லறம், குடும்பம், சமுசாரம் யென்று பெருமையாக பேசிக் கொள்வதெல்லாம் ஸ்திரீயைப் பற்றியே யொழிய புருஷனைப் பற்றி யல்லவே. உலகத்தார் கலியாண மில்லாத

ஏகாங்கிக்கு செய்கிற உபசாரத்தைப் பார்க்கிலும் ஒருவன் குடும்பியாயும் சமுசாரியாயும் யிருந்து கஷ்டப்படுவானேன் அவன் விஷயத்தில் அதிக பச்சாத்தாபமும் இரக்கமும் வைத்து உபசரிக்கிறார்களே இதுவும் ஸ்திரீகளால் வருகிற நன்மை தானே இவ்வளவு நன்மையைத் தருகிற ஸ்திரீகளை நம்முடைய பிராணனிலும் எண்மடங்கு அதிகமாகப் பார்த்து அவர்க்கு அணுகும் துன்பமெல்லாம் நமக்கடுத் தாற்போல கார்த்து அவர்கள் பிரியப்படும் வஸ்துவின் பிரியமெல்லாம் தீர்த்து நம்மேல் அணிபணி முதலிய நாக ரீகம் போர்த்து பொன் போல சேர்த்து என்னாளும் நன்னா ளாக சேர்த்து ஆதரிப்பது ஆடவர் கடமையாதலின் விவேக மற்றவர்க்கே விவரித்துச் சொல்ல வேண்டுமாதலால் இங் ஙனம் சுருக்கமாகக் குருக்கி யெழுதலாயிற்று.

"பகுக்கும்படிக்கு நடக்கின்றையோயிப்பழஞ் செருப்பா லடிக்கட்டுநோவுனக் கொத்தாசையாரரைப் பாவிநெஞ்சே"

என்பதிற்கிணங்க இங்ஙனம் எழுதிய பான்மை தங்க ளுக்கு இயற்கையோ வென்னப் பன்னுவாருண்டாதலின் முன்னுண் மொழியை சென்னிமேற் பூண்டானை.

மாதர்விதி முற்றிற்று.

———

மூன்ருவது

மாதர்கள் கெற்ப விகற்பத்தாலாய சர்வ சங்கடத்திற்கும்

சிகிச்சாவிதி

கெர்ப்ப சஞ்சீவி யெண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	படி	$\frac{1}{4}$
பசும்பால்	,,	$\frac{1}{4}$
வெள்ளைப்பூண்டு	பலம் அரையே அரைக்கால்	
கழுதைப்பால்	படி	$\frac{1}{8}$
கருஞ்சீரகம்	விராகனெடை	$1\frac{1}{2}$

வெள்ளைப்பூண்டு மேற்ருேல் நீக்கி சிறுக அரிந்து சீரகத்தை மேற்படி எண்ணெய் விட்டரைத்து யாவும் ஒன்ருயூற்றிக் கலந்து கரண்டியால் கலக்கி அடுப்பேற்றி யெரிக்கவும். அப்படி எரிக்கும்போது மெழுகு பதமானவுடன் அந்த எண்ணெயில் கைவிட்டு விழாவி பார்த்தால் குளிர்ந்த நீர் போல் யிருக்கும். அந்தப் பதத்தில் இரக்கி வடித்து வைத்துக்கொண்டு கெற்ப ஸ்திரீகளுக்கு ஐந்தாவது மாதம் பிறந்த முதனுள் துடங்கி 5-நாள் காலையும் மாலையும் வேளைக்கு $\frac{1}{4}$-பலம் வீதமாகக் கொடுக்கவும். உப்பு, புளிதள்ளி பத்தியமா யிருக்கில் கருவை யழிக்கும் கிரந்தி சூலை கெற்ப காரியம் இவை யணுக வொட்டாமற் காற்பதுடன் பிரசவ காலத்தில் யாதொரு வருத்தமு மில்லாமல் பிறக்கும். இதுவன்றி, தாய் தந்தையருக்கு எவ்வித வியாதி யிருந்தாலும் அப் பிள்ளைக்கு அணுகாது பூரணுயுசும் பெற்று வளரும் மாந்தம், கனம், கரப்பான் இவை வராது எண்ணெய்கட்கெல்லாம் இது மிகவும் உத்தமமான எண்ணெய் யென்றறிக.

பிள்ளை வெளிப்பட

பசலையிலைச்சாறு	படி	$\frac{1}{8}$
நல்லெண்ணெய்	,,	$\frac{1}{8}$

இவ்விரண்டும் ஒன்ருய்க் கலந்து கொடுக்க பிள்ளை சீக்கிரத்தில் பிரசவமாகும் யாதொரு வருத்தமும் இராது நஞ்சுக் கொடியும் விழும்.

இதுவுமது பிள்ளைபெற மாட்டாதவர்க்கு

சிவனார்வேம்பு கொண்டு வந்து முலைப்பாலில் அரைத்து தொப்புளின் சுற்றிலும் தளமாய் பூசினால் சீக்கிரத்தில் பிரசவமாகும்.

இதுவுமது பிள்ளை வெளிப்பட

கௌதும்பைச் செடியின் வடக்கே போகிற வேரை தூப தீபங் கொடுத்து பிடுங்கி வந்து மூன்றுவித நூலினாற் குளிசமாடி கெர்ப்ப ஸ்திரீயின் நெற்றிக்கு நேரே தொலாந் திரமாகக் கட்டி தொங்கவிட்டு அதைப் பார்த்துக் கொண் டிருக்க பிரசவமாகும்.

வயிற்றில் மரித்த பிண்டம் வெளிப்பட

ஜவ்வாது விராகனெடை-7, குங்குமப்பூ விராகனெடை-¼, இவ்விரண்டும் சேவல் இரத்தத்தினால் இழைத்துக் கொடுக்க பிள்ளை பெற மாட்டாமல் உபத்திரவப்படுகிறவர் களும், வயிற்றில் தானே பிண்டம் மரித்துப் போனவர் களுக்கும் உடனே வெளிப்படும். இது பூனாணி பண்டிதர்கள் நன்கு மதிக்கப் பெற்ற முறையாம்.

இதுவுமது பிண்டம் வெளிப்பட

கெர்ப்பம் வெளிப்படாமல் தொந்தரைப் படுவார்களா கில் குங்குமப்பூ ஒரு கழஞ்சு கொண்டுவந்து சோம்பு கியா ழம் ஒரு கரண்டி யளவெடுத்து அதில் யிழைத்துக் கொடுக்க உடனே சிசுவு கலிதமாகும். இதுவும் பூனாணி சாஸ்திர மென்றறிய.

இதுவுமது பிண்டம் கலிதமாக

நிலக்குமிழி வேரைக் கொண்டு வந்து அரைத்த சாந்து புன்னைக்கா யளவெடுத்து வெந்நீரிற் கரைத்துக் கொடுக்க பிண்டம் வெளிப்படும். இது சுதேச பண்டித ரியல்பென்றுணர்க.

இதுவுமது வயிற்றில் மரித்தபிண்டம் வெளிப்பட

சரக்கொன்றைக்காயின் மேலோட்டை பொடி செய்து 3-விராகனெடை யெடுத்து அதனுடன் குங்குமப்பூ விராக னெடை-1, சர்க்கரை விராகனெடை-1 இம்மூன்றும் கல்

வத்திட்டு பன்னீர்விட் டரைத்து உருண்டை செய்து பிரசவ வேதனைப் படுகிறவர்களுக்கும் வயிற்றில் தானே பிள்ளை மறித்து வெளிப்பட ஏதுவில்லாமல் துன்பப்படுகிறவர்க்கும் கொடுத்தால் உடனே வெளிப்படும். 15-நிமிஷத்திற் கொரு தருதியாய் மூன்றுவிசை கொடுக்கவும் உத்தமம். இது இந்துஸ்தானி பண்டித நூலில் இருந்தவாறு மொழி பெயர்க்கலாயிற்று.

அழுக்ககலும் விதி

ஸ்திரீகள் கர்ப்பிணியா யிருந்து பிள்ளை பெற்ற பிறகு சூதகங் கட்டுபட்டாகிலும் நஞ்சுக்கொடியாகிலும், மற்று முள்ள அசுத்தம் முதலானதும் வெளிப்படாதிருந்தால்,

கற்பூரம்	வராகனெடை 1
சாம்பிராணி	,, 1
லிங்கம்	,, 1

இவை மூன்றும் கல்வத்திலிட்டு ஒன்றும் விடாமல் தனியே அரைத்தால் மெழுகாகும் ஒரு நாழிகை குறையாமல் அரைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு குண்டுமணி யளவு இருவேளையும் கொடுக்கவும். வயிற்றிலுள்ள அழுக்கு கள் யாவும் வெளிப்படும். இச்சாபத்தியம்.

இதுவுமது அழுக்கு வெளிப்பட

நாட்டுசாரம் விராகனெடை-3, கொடிக்கள்ளிப்பால் துளித்துளியாய் விட்டு கைவிடாமல் அரைக்கவும். 2-நாழி கை அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு பெருமிளகு பிர மாணம் ஒரு வேளை கொடுக்கவும். அந்தியில் கொள்ளுக்காய் வேளைவேர் பலம்-2, சுக்கு பலம்-¼, அதிமதுரம் பலம்-¼ இவை யிடித்து கால் படி ஜலம் வைத்து அரிக்கால் படியாக இறக்கி வடிகட்டிக் கொடுக்கவும் எவ்வித அழுக்கும் வெளிப்படும். இச்சாபத்தியம்.

சூதகக்கட்டு உடைய

இலுப்பைப் புண்ணாக்கு கொண்டு வந்து ஆர்க்கப் பொடி செய்து புன்னைக்காயளவு மெல்லிய சீலையில் முடிந்து நிதம்பக் குழையில் ஒரு ஜாமம் புகுத்தி வைக்கவும். உடனே சூதகக்கட்டு உடையும் உடையாவிட்டால் இரண்டு அல்லது

மூன்று நாளைக்கு காலையில் இம்மாதிரி செய்ய வேண்டியது. ஆனால் அன்றாடம் வெவ்வேறு புண்ணாக்கு கொண்டு வந்து பொடித்து முடிந்து சொரிகி வைக்கவும் ஐந்து மாதத்தில் கருவா யிருந்தாலும் வெளிப்படும்.

சூதகவாய்விற்கு அண்ட மெழுகு

கோழிமுட்டை-4 கொண்டுவந்து உடைத்து இருவித கருவையும் பீங்கான் கோப்பையில் ஊத்திக்கொண்டு அத்துடன் 15-எலுமிச்சம் பழச்சார் பிழிந்து வைத்துக்கொண்டு வீரம், பூரம், சாரம் படிகாரம் வகைக்கு பலம்-¼ எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய் இடித்து மேற்படி கருவுடன்போட்டு நன்றாய் கலக்கி கோப்பையி லெடுத்து ஒருநாள் சூரிய புடம் வைத்து நீர் சுண்டினபிறகு கல்வத்திலிட் டரைத்து மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் கோப்பையில் வைத்துக் கொண்டு மிளகு பிரமாணம் மூன்றுநாள் கொடுக்கவும், பிரசவித்தவர்க்கு வயிற்றில் தங்கிய சகல அழுக்குகளும் சூதகக்கட்டும் சூதகத்தால் காணும் வாய்வுகளும் கைகால் குத்தல் குடைச்சல் முதலிய யாவுந் தீரும். இச்சாபத்தியம்.

சூதக வாய்விற்கு

ஆற்றுத்தும்மட்டிக்காய்		50
இந்துப்பு	பலம்	1
வெடியுப்பு	,,	1
சவுட்டுப்பு	,,	1
பொட்டிலுப்பு	,,	1
வளையலுப்பு	,,	1
கரியுப்பு	,,	1
நாட்டுச்சாரம்	,,	½

தும்மட்டிக்காய்கள் ஒவ்வொன்றையும் நாலாய் பிளந்து மற்ற சரக்குகள் யாவையும் பொடித்து அத்துடன் போட்டு குலுக்கி நன்றாய் கலக்கச்செய்து வாய்மூடி சீலைசெய்து கஜ ஆழத்தில் புதைத்து மூன்றுமாதம் பொறுத்து எடுத்து மறுபடியும் குலுக்கி ஒருநாள் சூரியபுடம் வைத்து எடுத்துக் கொண்டு வேண்டியபோது கெச்சைக்காய்ப் பிரமாணம் எடுத்து கல்வத்திலிட்டு சமனிடை பனவெல்லம் கூட்டி, அரைத்து அந்தி சந்தி சாப்பிடவும். உப்பு, புளி கூட்டலாம்.

இச்சாபத்தியம், இரண்டு தரம் பேதியாகும், சூதகத்தைச் சேர்ந்த வியாதியெல்லாந் தீரும்.

சூதக வயிற்று நோய்க்கு

கோடாச்சியிலே கொண்டுவந்து மிளகு பூண்டு வைத் தரைத்து புன்னக்காய் விதம் காலையில் மூன்றுநாள் தின்ன வும் திரும்.

சூதகவலிக்கும் கர்ப்பந்தரிக்கவும் யூனனி முறை

மரமஞ்சள், கருஞ்சிரகம், சதகுப்பை இம்மூன்றும் சம னெடை தூக்கி இடித்து சூரணித்து அதற்கு மூன்றிடை புட்டி வெல்லம் சேர்த்து பிசைந்து வேளைக்கு 2-விராக னெடையாக சோம்பு கியாழத்திற் கலந்து சாப்பிடவும். (சாப்பிடும் விவரம்) பெண்கள் வீட்டுப்புரம் போகும் நாள் அல்லது ருதுவாகும் நாளைக்கு 3, 4-நாள் முன்பாக ஆரம் பித்து ருது கண்ட மூன்றுநாள் வரைக்கும் சாப்பிடவும் சூதகக்கட்டு சூதகநோய் தீரும் கருப்பந்தரிக்கும் இப்படி 2, 3-முறை சாப்பிடவும்.

யூநானி கருதரிக்குங் குறிப்பு

பிள்ளையில்லாத பெண்கள் சலோபாதைக்குப் போன வுடன் அப்படியே குந்தியிருந்து மட்டிப்பாலை படை நெருப்பி லிட்டு அந்தப் புகையை யோனி துவாரத்தில் படும்படியாய் சற்றுநேரம் காட்டிப் பிடித்திருக்கவும். புகை புக்கினபிறகு மறுபடியும் மலம் உதையுமாகில் அவசியம் கருதரிக்கு மென்றறியவும் இக்குறியில்லாதவர்க்கு எப்போதும் கருப்பந் தரிக்காது.

கருவுருண்டை

கோரோசனம்	பலம்	1
சாம்பிராணி	,,	1
திப்பிலி	,,	1

இம் மூன்றும் சுக்கு, கியாழம் போட்டு இரண்டு ஜாமம் அரைத்து சுண்டக்காய்விதம் உருண்டை செய்துவைத்துக் கொண்டு காலையில் ஒரு உருண்டையாக 10, 15-நாள் சாப் பிடவும் அஜீர்ணம், சூலை, குலைவாய்வு, கலவை ஜன்னி, அக்கினி மந்தம் இவை தீரும், கெற்பந்தரிக்கும்.

உதிரச் சிக்கலுக்கு பொது விதி

பிள்ளைபெற்ற பின்பு ஒவ்வொரு பணயெடை குங்குமப் பூவை சோம்புக்கியாழத்தி லிழைத்துக்கொடுக்க உதிரச் சிக்கல் தீரும், மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்கலாம், இச்சாபத்தியம்.

கெற்ப ஸ்திரீகளுக்கு உதிரங்கண்டால்

அதிமதுரம்	பலம்	$\frac{1}{4}$
சீரகம்	,,	$\frac{1}{2}$

இவை யிரண்டும் இடித்து $\frac{1}{4}$-படி ஜலத்திலிட்டு $\frac{1}{8}$-படி கியாழமாக இறக்கி வடிகட்டி காலை வேளையில் கொடுக்கவும். இப்படி 3-நாள் கொடுக்கவும்.

கெற்பவதிகட்கு மலஜலங்கட்டினுல்

நாள்பட்ட நெல்லிவற்றல் பலம்-1 கொண்டுவந் திடித்து கியாழம் வைத்து அதற்குச் சமன் பசும்பால் விட்டு கொடுக்கவும். உடனே மலம் உதையும் ஜலுப்பு செய்யாது சௌக்கியமா யிருக்கும்.

பாலில்லாதவர்க்கு

பாதிரிவேரும் வேளைவேரும் சமன்கொண்டு பசும் பாலில் அரைத்து பாக்களவு கொடுக்கவும்; இப்படி காலை மாலை மூன்று நாள் கொடுக்கப் பால் சுரக்கும்.

இதுவுமது மூலைப்பால் சுரக்க

கோவையிலையை கொண்டுவந்து மிளகு மிளகாய்போட்டு நெய்விட்டுப் பிரட்டி காலையில் கால்வயரு சாப்பிடவும்; இப்படி 3-நாள் கொடுக்க பால் சுரக்கும்.

இதுவுமது பால் சுரக்க

கிழாநெல்லிவேரை அரைத்து புன்னைக்காயளவு எடுத்துக் கால்படி பசும்பாலில் கரைத்துக் கொடுக்கவும்; இப்படி 3-நாள் கொடுக்க பால் சுரக்கும்.

விசேஷ பாலுக்கு

குழந்தை குடிக்கத்தகுந்த பாலைவிட அதிகமாகவும் சில பெண்களுக்கு சுரப்பதுண்டு. அதனுல் மார்குத்தல் பூரித்தல்

பாரித்து மிருக்கும். மல்லிகைப்பூவை வைத்துக் கட்டுதலு முண்டு. அத்துடன் எண்ணெய் பேதிக்கு கொடுத்தால் பால் குறைந்து சுரக்கும், பால் சீக்கிரத்தில் சுரக்காவிட்டால் வென்னீர் ஒற்றிடங் கொடுத்து ஆமணக்கிலையை வதக்கி கட்ட பால் சுரக்கும்.

விசேஷ பாலுக்கு

மூலை சிலந்திக்கு அனுபோக வயித்தியம் 2-வது பாகம் 74-வது பக்கத்தில் கூறியபடி சிகிச்சைசெய்ய நிவர்த்தி யாகும்.

மூலை குத்துக்கு

அனுபோக வைத்திய பிரமரகசியம் இரண்டாவது காண்டத்தில் 23-வது பக்கத்தில் கூறியிருக்கும் அகஸ்தியர் பெருங்குழம்பை முடித்து மேற்படி புத்தகம் 24-ம் பக்கத்தில் சொல்லியபடி அனுபானத்தில் உபயோகப்படுத்தவும் தீரும்.

பெண்கள் பற்பொடி

அன்னபேதி	விராகனெடை	3
வெள்ளைக்காசுக்கட்டி	,,	3
துருசு	,,	3
குரோசானி	,,	3
வசம்பு	,,	3
அமுக்கனும்வேர்	,,	3
வேப்பம்வேரின்பட்டை	,,	4
கால்மல்யென்னும் இரசபற்பம்	,,	3
கொட்டைப்பாக்கு	,,	4
படிகாரம்	,,	3
மாசிக்காய்	,,	3
தண்டவாளபொடி	,,	8

இவைகளை இடித்துப்பொடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும்; இரவில் போஜனம் செய்ய ஒரு நாழிகை முன்பாக இதில் ஒரு சிட்டிகையெடுத்து பல்துலக்கி வெந்நீரால் வாய்கொப்பளித்துவிட்டு போஜனஞ்செய்யவும். இப்படி சதா செய்துவரில் பெண்களுக்குண்டாகும் இரகசிய ஸ்தானமென்னும் உடைக்கலிதம் குருகலாகும்; பலம் உண்

டாகும் பல்லுகள் இருகும், வாய்நாற்றம் நீங்கும், முகம்தேஜசு கொடுக்கும். பிரசவ காலங்களில் ஜன்னியா லுண்டாகும் பல்வலி முதலிய சீதளங்க ளுண்டாகாது.

மாதவிடா யில்லாதவர்க்கும் பிள்ளை யில்லாதவர்க்கும் பெண்கள் வயிற்றுவலிக்கும்

பச்சைமஞ்சள் சார், மலைவேம்பு சார், நல்லெண்ணெய் இம் மூன்றும் சமனெடை சேர்த்து காலைவேளையில் (காலாழக்கு) வீதமாக 3-நாள் கொடுக்க மாதவிடாய் காலத்தி லுண்டாகும் வயிற்றுவலி நீங்கும் மாதவிடாய் இல்லாத வர்க்கு அது உண்டாகும் பட்சத்தில் அவசியம் கெற்பந் தரிக்கும்.

பெரும்பாட்டுக்கு

இளசியாகிய தென்னம்பாளையி னுள்ளேயிருக்கும் அரி சியை யெடுத்து பசும்பாலில்விட்டு இடித்து பிழிந்து அரைக் கால்படி வீதமாக 3-நாள் காலையில் சாப்பிடவும்; உதிரப் பெருக்கு நிவர்த்தியாகும்.

இதுவுமது பழைய பெரும்பாட்டுக்கு

கௌதும்பையும் குருவரிசியும் சமன்கொண்டு இடித்து மாவாக்கி பனைவெல்லம் போட்டுப் பிசைந்து புன்னைக்காய் வீதம் மூன்றுநாள் தின்னவும் சாந்தியாம்.

இதுவுமது தீராப் பெரும்பாட்டிற்கு

நாவல்பட்டை, ஒதியம்பட்டை வகைக்கு ஒரு பிடி கொண்டுவந்து பஞ்சுபோல் நறுக்கி அரைப்படி ஜலத்தி லிட்டு அரிக்கால் படியாக காய்ச்சி வடித்து சாப்பிடவும். இப் படி 3-நாள் 6-வேளை கொள்ளவும்.

இதுவுமது பெரும் பாட்டிற்கு

நாவல்பட்டை ஒரு படி எருமை மோரில் போட்டு யிடித் துப் பிழிந்த நீரில் அகிற்கட்டை தூள் ஐந்து விராகனெடை கலந்து சாப்பிடவும். இப்படி 3-நாள் 6-வேளை கொள்ளவும் சாந்தியாம்.

மாதாந்திர முழுக்கில்லாதவர்க்கு

பேய்க் குமட்டிவேர், கார்கொலரிசி, புகையூரல் இவை சமனெடைகொண்டு அரைத்து கண்டங்கத்திரி கிழக்குச் சாற்றில் மத்தித்து தின்றால் மாதவிடாய் உண்டாகும். இப்படி 3-நாள் கொள்ளவும்.

இதுவுமது மாதவிடாய் இல்லாதவர்க்கு

ஒரு படி கொள்ளில் 4-படி தண்ணீர் விட்டு 6-க்கு ஒரு பங்காய் காய்ச்சி வடிகட்டிய நீரை எடுத்துக்கொண்டு நிலப் பனங் கிழங்கு பரங்கிச் சக்கை யிரண்டும் சமனெடைபோட்டு இடித்து சூரணித்து அந்த சூரணத்தை மேற்படி தண்ணீரில் போதுமான மட்டில்போட்டு லேகியம்போல் கிளரி வைத்துக்கொண்டு புன்னைக்காய் வீதம் அந்திசந்தி சாப்பிட்டு வரவும். மாதவிடாய் உண்டாகும்.

இதுவுமது முழுக்கில்லாதவர்க்கு

மாவிலிங்கப்பட்டை சூரணஞ் செய்து தினையரிசியின் தவிடு சமனுய்க் கலந்து கொட்டைப் பாக்களவு இரு வேளையும் மூன்றுநாள் கொள்ளவும். சூதகம் வுடைந்து மாத விடாய் உண்டாகும்.

இதுவுமது மாதவிடாய் இல்லாதவர்க்கு

கொடிவேலி வேர் எலுமிச்சங்காயளவு அரைத்து, கொள்ளு ஊறவைத்துக் கழுவிய தண்ணீரில் கரைத்துக் கொடுத்தாலும் உதிரக் கலிதமாகும். இப்படி 3-நாள் கொடுக்கவும்.

பெண்களுக்கு வெள்ளை கண்டால்

தக்காளி, மணித்தக்காளி இரண்டும் காயும் பூவுமாகப் பறித்துவந்து ஒன்றிரண்டாய் இடித்து கியாழமிட்டு அந்தி சந்தி இருவேளையும் ஒவ்வொரு பாலாடைவீதமாக 3, 5-நாள் சாப்பிடவும். அன்றியும் ஒன்றிற்கு இரண்டிற்கு போகும் போதெல்லாம் மேற்படி கியாழத்தை யோனியில் படும்படி யாய் தாராளமாய் விட்டு கழுவிக்கொண்டு வரவும். 3, 5, 6-நாளில் தீரும். இச்சாபத்தியம்.

பெண்களுக்கு நாட்பட்ட வெள்ளைக்கு

படிகாரத்தைப் பொரித்து கல்வத்திலிட்டு அரைத்து சுன்னம்போல் பொடித்து வைத்துக்கொண்டு அதற்குச் சமன் கற்கண்டும் விரை நீங்கி யுலர்ந்த நெல்லிக்காய் வற்றலும் பொடித்துச் சேர்த்து வேளைக்கு இரண்டு விராகனெடையாக மோரிற்கரைத்து சாப்பிடவும். இப்படி ஒரு நாளைக்கு மூன்று வேளையாக 7-நாள் கொள்ளவும். தீராத வெள்ளை நீர்சுருக்கு தீரும், இச்சாபத்தியம். ஒருசாமம் இருமல் காணுமாகில் பசும்பால் கறந்தவுடன் நுரையோடு சாப்பிடவும் நிவர்த்தியாம்.

ஸ்திரீகள் பிரசவித்தபிறகு ரகசிய ஸ்தானம் சுத்தம் செய்ய

ஆலம்பட்டை, மாம்பட்டை, பூவரசம்பட்டை, அரசன் பட்டை, நாகப்பட்டை, வேப்பம்பட்டை, குமுளம்பட்டை, நுணக்காய், காசுக்கட்டி, படிகாரம், கடுக்காய், தாணிக்காய், நெல்லிப்பட்டை, சிறுகீரைவேர், பணைவேர் இவைகள் சமன் கொண்டு அல்லது நிதானமாயெடுத்து ஒன்றிரண்டாய் இடித்து கியாழம் வைத்து அந்தக் கியாழத்தால் நிதம்பத்தில் படும்படி அலம்பிக்கொண்டுவரவும்.

ஸ்திரீ வயித்தியம் முற்றிற்று.

———

நான்காவது

சிசுவளர்க்கும் விதி

பிள்ளைகட்கு நோய்வருங் காரணம்

பிறந்தநாள் பிள்ளைக்குத் தானேதாயார்
பிதாவாலே சிசுவுக்கு மேலேதோன்றும்
சிறந்தபிணி மாந்தகணங் கரப்பான்தோஷம்
தீதான அக்கரங்கள் கிரந்தியுண்டாம்
அரந்தழைக்கு மருத்துவச்சி யாலேதீரும்
அல்லாவிட்டால் மருந்தறிவா ராலுல்தீரும்
திரந்தெரிந்து பார்த்துரைப்போம் சிறுபிள்ளைக்கு
சீராக வருநோய்கள் செப்பக்கேளே.

செங்கிரந்தி கருங்கிரந்தி செவ்வாப்புத்தான்
தீயான கரப்பானும் அறையிற்காணும்
அங்கமெல்லாம் செவ்வாப்பு சிவந்துகாணும்
அதுவன்றி கருங்கிரந்தி தொண்டைகட்டும்
பிங்கிரகம் பேய்தோஷம் பட்சிதோஷம்
பின்னும்வெகுரோகங்கள் பிரித்துச்சொல்ல
அங்கரிது குழந்தைபிணி யறிந்துதீர்க்க
ஆராலுமாகாதென் றரனுர் சொன்னுர்
சொல்லுகின்ற குழவிக்கு கரப்பானேது
தோஷமென்ற வினையேது மாந்தமேது
கொல்லுகின்ற கணமேறு அக்கரங்களேது
கூறும்வகை சூரியனென்று குளரலேது
புல்லுகின்ற தாயாலே தந்தையாலே
புனைந்துகொடி படர்ந்ததுபோல் படர்ந்துதப்பா
கொல்லுகின்ற கரப்பானும் கெற்பமேகம்
கோதுற்ற தோஷமெல்லாம் முலைப்பால்சூடே
சூடான மாந்தமெல்லாந் தாய்ப்பால்மாந்தம்
தொகையான கணங்களெல்லாங் கெற்பச்சூடு
பீடான அக்கரங்க ளெல்லாந்தாயும்
பிதாயிருவர் புணர்ச்சினு லெழுந்தசூடு

பீடான வைசூரியெல்லாம் அனுபோகத்தால்
படர்ந்திந்த வினையெல்லாங் கர்மத்தாலே
காடான வகைபோலே சொன்னதற்கு
கைமருந்தின் பாகமினி கழறுவேனே.

கெற்ப ஸ்திரீகளுக்கு எச்சரிக்கை

முக்கியமாய் பெண்கள் கெற்பகாலந் தொடங்கி பிள்ளையைப் பெற்று அக்குழந்தை பால் மறக்களவும் ஸ்திரீகளிருக்க வேண்டிய நெறி அல்லது பத்தியம்.

பால் கூடிய அன்னம் எருமை யென்னும் மேதிப்பால் பானம், வாழைப்பழம், நாகப்பழம், இலந்தம்பழம், தேங்காய், இளநீர், மாங்கிஷம், கவிச்சு, மலைத்துவரை, மொச்சை, புளியங்கொட்டை, கடலைமாவு, அரிசிமாக்களினல் செய்யப்பட்ட உருண்டை முதலிய விசேஷத்தின் பண்டம் உளுந்து புளித்தமோர் கெண்டை கெளுத்தி வாளை உளுவை கள்ளு முதலிய இவைகளைத்தின்று அப்பாலே குழந்தைக்கு ஊட்டினல் மேற்கூறிய மாந்தம், கணம், ஊதல், பொருமல் முதலிய பல வியாதிகள் அக்குழந்தைக்குக் காணுமென்றறிக.

மேற்கூறிய வியாதிகளின் காலவிதி

கரப்பானென்னும் வியாதியானது குழந்தை பிறவி கண்ட முதல்நாள் தொடங்கி மூன்று மாதத்திற்குளென்றி வாதிக்கும் பக்ஷி, எக்ஷி, குளிமுதலிய தோஷங்களும் மூன்று மாதம் தொடங்கி ஒருவருடமட்டில் வாதிக்கும். மந்தம் என்னும் 21-வித வியாதிகளும் வருஷந்தொட்டு மூன்று வருஷமட்டும் வாதிக்கும். கணம் முதலிய வியாதிகள் மூன்று வருஷந்தொட்டு ஏழு வருஷமட்டும் வாதிக்கும். அக்கரங்கள் என்னும் வியாதிகள் ஏழாண்டுதொட்டு முப்பது வயதுமட்டில் வாதிக்கும். வைசூரியென்னும் வியாதியானது உயிர்ப்பிரியுங் காலமட்டும் உறவாடும் என்றறிக.

பிள்ளை பிறந்தவுடன் சிறியமுது விக்கல் பொருமல் கண்டால் மருந்து

சிறுதேக்கு திப்பிலியும் சமன்கொண்டு பொடித்து வஸ்திரகாயஞ்செய்து தேனில் அல்லது ஆவின் நெய்யில் குழைத்து கொங்கைக் காம்பில் தடவி, பாலுண்ணச் செய்யவும்;

நிவர்த்தியாம் அல்லது திப்பிலியும் ரோகணியும் யிடித்து வஸ்திரகாயஞ் செய்து நெய்யில் குழைத்து கொங்கையில் பூசிப் பாலுண்ணச் செய்தாலும் நிவர்த்தியாகும்.

பிள்ளையின் வயறுவீங்கினல் குடித்தபாலெடுத்தால் கொட்டாவி விட்டால் மருந்து

பிள்ளை பிறந்தவுடன் வயறுவீங்கினல் மதுரத்தைப் பொடித்து காடியில் அரைத்து வயற்றில் பூசினல் வீக்கம் தீரும் வெள்ளுள்ளி ஓமம் சமனெடை இடித்து கியாழமிட்டு துளி துளியாய் குடிக்கச் செய்தால் பாலெடுத்தால் கொட்டாவி இவை தீரும். அதிமதுரத்தைப் பொடியாக்கி பாலில் அரைத்து முலைக்காம்பில், தடவி பாலுண்ணச் செய்தால் திருப்தியாய் பாலுண்ணும் தோஷகுணமிருந்தாலும் சகிக்கும்.

குழந்தைக்கு மலங்கட்டினலும் வயறுநொந்தழுதாலும்

புன்னை, சிறுதேக்கு, கோஷ்டம் சமன்கொண்டு நீர் விட்டரைத்து கரைத்துக் காய்ச்சி வயிற்றில்பூச நோய்தீரும். அடிவயறு நொந்து மலங்கட்டினல் அதிமதுரம், வேப்பந் துளிர், சர்க்கரை அரைத்து நெய்யில் மத்தித்து புகட்ட மலமிரங்கும்.

பிள்ளைக்கு சிறுநீர் இறங்காவிட்டால்

வெள்ளரிவிரை எலிபுழுக்கை சமன்கொண்டு கொஞ்சம் நீலி மருந்துங்கூட்டி நீர்விட்டரைத்து அடிவயற்றில்பூச நீரிரங்கும்.

சஞ்சீவிப் பால்

நாயின் மண்டையோட்டை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து முலைப்பால்விட்டரைத்து தாயின் இரண்டு ஸ்தனங்களுக்கும் தடவி உலர்ந்த பின்பு குழந்தைக்கு பால் ஊட்டச் செய்யவும். சிசுப் பிறந்த பின் முதல்நாள் ஊட்டுந் தாய்ப் பாலுக்கு இவ்வித சிகிச்சை செய்யில் அக் குழந்தைக்கு ஆசுயு மட்டும் யாதொரு வியாதியும் வராது வந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

மாந்தம் 21-க்குப் பெயர்

வாதமாந்தம், பித்தமாந்தம், சேத்துமமாந்தம், விஷமாந்தம், போர்மாந்தம், வாலைமாந்தம், சுரமாந்தம், நீர்மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், பால்மாந்தம், துலையாமாந்தம், எரிமாந்தம், தலைமாந்தம், கணமாந்தம், வலிப்புமாந்தம், சுழிமாந்தம், முக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊதுமாந்தம், விக்கமாந்தம் ஆக மாந்தம் இருபத்தியொன்று.

இங்ஙனங்கூறிய இருபத்தொரு மாந்தங்களில் வாத பித்த சிலேத்துமமாகிய 3-வித மாந்தங்களின் குணம் அல்லது குறி தெரியவும்

விருத்தம்

ஒன்றும்வாதமாந்தகுணம் உரைக்கக்கேளுதிருக்கெனவே
பொன்றுகால்கைகுளிர்ந்துதாம்பொருமும்விழியால்பாத்தழு
குன்றுமெய்யில்வேர்வையுமாம் குழிவலிக்கும்பலவிதமாய் [ம்
துன்றுதுடிக்கும்கொட்டாவி துளையுநாசிப்புண்ணுமே.

ஆமேபித்தாந்தகுணம் அடுத்தேபேதிவாந்தியுமாம்
தாமேமூர்ச்சையாய்குரலும் தயங்கிக்கம்மலாகிவிடும்
போமேமேனிமஞ்சளித்துப் புசியும்வேர்வைவாய்நடுக்கும்
வாமேகுழவிதேகமெங்கும் வலிக்குங்குளிரும்மயங்கிடுமே.

மயங்கிடும்சேஷ்மமாந்தம் வகையினைத்தகையாய்கேளு
முயங்கிடுகளிருண்டாகும் முழுதுடல்சிலுசிலுப்பாம்
பயக்குநாவும்வெளுக்கும் பயந்தேஅரலைத்தான்கொடுக்கும்
சயக்கவயறுகழிந்துவரும் தளராபொருமும்வயரதுவே.

மூன்றுவித மாந்தம் நீங்க பதினெண்வித மாந்தங்கட்கும் பொதுக்குணம்

விருத்தம்

பிள்ளையுங்கனத்திருக்கும் பிரண்டைபோல்காலும்பின்னி
உள்ளமும்கண்சிவந்து உடம்பினில்நோயுங்காட்டும்
துள்ளியேகையில்தங்கா துடுக்கெனச்சுழலுமாகில்
கள்ளமாய்குரலுந்தாழ்ந்து கண்குவிழ்ந்திருந்தால்மாந்தம்.

இதுவுமது

மாந்தத்தின்குணமேகேளாய் வயறுபோம்வெப்பும்மாறும்
சோர்ந்துகைகால்குளிர்ந்து தோகையேபாலுண்ணாது
வாந்தியுமிதுவேபண்ணும் வாயுமேஉலர்ந்துக்காயும்
வாந்தியேமயக்கமுண்டாம் மாந்தத்தின்குணமதாமே.

இதுவுமது

மாந்தத்தின்குணமேதென்றால் வயறுகழியும்மயக்கமாய்
காந்துபசியுமில்லாமல் காமவிசாரங்கொண்டவர்போல் [கில்
சோர்ந்துகிடக்குங்கைகாலுங் குளிர்ந்தேகாணுந்தொல்லுல
காந்தள்மலர்போல்கையுடையாய்கனத்தமாந்தகுணமிதுவே.

இதுவுமது

பாரேசீதமலமுடனே பதமாய்க்கழியும்பலவிதமாய்
தேரேகெட்டப்பாலதுபோல் தெளிந்ததண்ணீர்போலவுமே
வாரேகழியும்குணம்பாரே வளமாயுள்ளங்கைகாலும்
நேரேகுளிர்ந்ததண்ணீர்போல் நேர்ந்தால்குணமாமே.

பாரேவெதுப்புங்கண்சுழலும் பனிபோல்தேகம்மிகவேர்க்கும்
பாரேமுகமும்பலவிதமாய் பளிங்குபோலேஒளிமின்னும்
பாரேயிந்தக்கூறுதனைப் பருவம்அறிந்துக்கொண்டெல்லாம்
பாரேயிந்தப்படிதானே பண்பாய்மாந்தக்குணமென்னே.

சர்வமாந்தத்திற்கும் பரிகார விதி

1-வது பச்சிலைச்சாறு

நொச்சியிலை, பொடுதலையிலை, நுணாயிலை, உத்தாமணி யிலை இந்நான்கும் ஒவ்வொருபிடி கொண்டுவந்து இடித்து பிட்டிட்டு சாறுபிழிந்து இதில் (அனுபோக வைத்தியம் முதற் காண்டத்தில் கூறிய) கஸ்தூரி மாத்திரையில் ஒன்றிழைத்து கொடுத்து தாயார் இச்சாபத்திய மிருக்கவும்.

2-வது பச்சிலைச்சாறு

உத்தாமணி, பேய்மிரட்டி, சாணாக்கிலை, வெதுப்படக்கி வேளை, நொச்சில் இவை யாவும் ஒக்கயெடுத்து வதக்கிச்

சாறுபிழிந்து (பின்னுலுறைத்திருக்கும்) மாந்தக்குளிகை, கஸ்தூரிகுளிகை இதுகளை ஒரு இழை யிழைத்துக் கொடுக்கவும். காலையில் குளிகை சேர்த்தும் மாலையில் வெறுஞ்சாறுமாக இரண்டு மூன்றுநாட் கொடுத்து தாயார் பத்தியமிருந்து பாலூட்டவும்.

மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு 3-வது பச்சிலைச்சாறு

நல்வேளையிலை, கற்பூரவல்லியிலை, வசம்பு இவை நறுக்கி வெதுப்பி பிழிந்து இதில் (அனுபோக வயித்திய பிரமரகசிய முதற்காண்டத்தில் கூறிய ரசக்கற்பூரக்கட்டு) 2, 3-இழை இழைத்து $\frac{1}{2}$-$\frac{3}{4}$-1-சங்கு வீதமாக குழந்தையின் பருவம் பார்த்துக் கொடுக்க மாந்த தோஷம், வலிப்பு, மலக்கட்டு இவை தீரும்; பால் கொடுக்கும் மாதா பத்தியமிருத்தல் வேண்டும்.

நீர்மாந்தம் முதலிய தோஷத்திற்கு 4-வது பச்சிலைச்சாறு

ஜனகிபூண்டு, பேய்மிரட்டி, வெதுப்படக்கி, நுணாயிலையும் சமனாய்க்கொண்டு இடித்து ஒரு சட்டியை அடுப்பின் மேல் வைத்து சுக்கு, திப்பிலி, மிளகு, சமன்பொடித்த தூள் சட்டியின் அடியில் பரப்பி அதன்மீது மேற்படி இலையை வைத்து பிட்டவியல் செய்து சாறு பிழிந்து $\frac{1}{2}$-1-சங்கு இருவேளையும் கொடுக்கச் சாந்தியாம்.

1-வது மாந்தத்திற்கு குளிகை

ஓமம்	சீரகம்
திப்பிலி	கருஞ்சீரகம்
சுக்கு	குரோசாணி
கொத்தமல்லி	ஆமையோடு

சமனெடை நிறுத்து வெந்நீர் விட்டரைத்து மிளகளவு குளிகைசெய்து வைத்துக்கொண்டு முலைப்பாலில் இஞ்சி சுரசத்தில் துளசிப்பிட்டு சாற்றில் இவைகளில் இருவேளையும் ஒவ்வொரு மாத்திரை யிடவும்; 3-நாளில் தீரும்.

2-வது மாந்தக் குளிகை

வாய்விளங்கம்	விராகனெடை	2
ஆமையோடு	,,	2
திப்பிலி	,,	2
கழல்பருப்பு	,,	2
மிளகு	,,	2
பொடுதலைக்காய்	,,	2

இவை சமனெடை கொண்டு நீர்விட்டரைத்து நிழலி லுலர்த்தி பொடுதலை சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்து சூரைக்காய் அளவு குளிகைசெய்து சுரம், கழிச்சல், இரும லுக்கு கண்டங்கத்திரி கியாழத்தில் ஒரு மாத்திரையாக இரு வேளையும் 3-நாள் கொடுக்கவும்.

3-வது மாந்தக் குளிகை

சுக்கு	விராகனெடை	4	கருஞ்சீரகம்	விராகனெடை	4
திப்பிலி	,,	4	ஓமம்	,,	4
மிளகு	,,	4	வசம்பு	,,	3
உள்ளி	,,	4	கடுக்காய்	,,	15
சாரணைவேர்	,,	5	தும்பைக்கொழுந்து	,,	5
உத்தாமணியிலை	,,	5	பொடுதலைக்கொழுந்து	,,	5

கல்லுரலிலிட்டு பஞ்சுபோல் இடித்து சட்டியிலிட்டு வெதுப்பி தும்பைச்சாற்றில் 2-ஜாமம், பொடுதலைச் சாற்றில் 2-ஜாமம் அரைத்து சுண்டக்காயளவு குளிகைசெய்து நிழலி லுலர்த்தி குழந்தைகளின் வயது பார்த்து $\frac{1}{4}$-$\frac{1}{2}$-$\frac{3}{4}$-1 மாத்திரை யாக வென்னீரிலிடவும்; கட்டுமாந்தம், கழிச்சல், வலிப்பு, இவைகள் போகும். 2-3-நாள் இருவேளையும் கொடுக்கவும்; தாயார் பத்தியமிருந்து பாலூட்டவும்.

4-வது சர்வ மாந்தத்திற்கும்
தன்வந்திரி குளிகை

* பூரம்	பலம்	$\frac{1}{2}$
ஏலம்	,,	$\frac{1}{4}$
லவுங்கம்	,,	$\frac{1}{4}$

* அனுபோக வயித்தியம் முதற் பாகத்தில் சொல்லியபடி பூரத்தை சுத்தி செய்துக்கூட்டவும்.

வசம்பு	பலம்	¼
மாசிக்காய்	,,	¼
அதிவிடையம்	,,	¼
சீரகம்	,,	¼

இவைகளை உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்திலிட்டு மாசிப்பத்திரிவேர் சார் அல்லது கியாழம் விட்டு ஒரு ஜாமம் அரைத்து விஷ்ணுகரந்தை சார்விட்டு 1½-ஜாமம் அரைத்து கொத்தமல்லி பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி மாந்த கியாழத்தில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க முன் சொன்ன மாந்த சேஷ்டைகள் யாவுந் தீரும்; மாதா பத்தியமிருத்தல் வேண்டும்.

5-வது சகல மாந்தத்திற்கும் புளியாசனக் குளிகை

வில்வவேர்	திருநீற்றுப்பச்சைவேர்
விளாவேர்	தும்பைவேர்
நாய்வேளைவேர்	சிறுதும்பைவேர்
கஞ்சாங்கோரைவேர்	கண்டங்கத்திரிவேர்
சின்னிவேர்	அமுக்குராவேர்
காட்டுமொச்சைவேர்	சங்கங்குப்பிவேர்
நுணுவேர்	உத்தாமணிவேர்
முடக்கொத்தான்வேர்	சாரணைவேர்
வெண்காக்கட்டான்வேர்	முடைதாரிவேர்
கொழுஞ்சிவேர்	பிரமிவேர்
புண்ணுக்குப்பூண்டுவேர்	சித்திரமூலிவேர்
கோவைவேர்	மணித்தக்காளிவேர்
கையான்வேர்	கீழாநெல்லிவேர்

இவைகள் வேர் யாவும் வகைக்குக் கழஞ்சுவீதம் எடுத்து உலர்த்தி கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு,

வசம்பு	தான்றிக்காய்
ஓமம்	நெல்லிக்காய்
சுக்கு	ஆனைத்திப்பிலி
சதகுப்பி	ஜனகிபூண்டு
அரத்தை	புதுவாலுழுவை

சிரகம் பொஸ்தகக்காய்
காட்டுச்சிரகம் புரசங்கொட்டை
கடுக்காய் மிளகு
தேசாவரம்

இவைகள் வகைக்கு கழஞ்சுவீதம் நிறுத்தெடுத்து உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்தி லிட்டு சாணக்கிலேச்சார், அப்பைக்கோவைச்சார், அகத் திச்சார், இண்டஞ்சார் வகைக்கு இரண்டு ஜாமம் அரை த்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை துவரைபோல் குளிகை செய்துக் கொண்டு ஒரு பங்கில் சுத்தித்த வாளம் கழஞ்சி-1, கடுகுரோகனி கழஞ்சு-1 எடுத்து மேற்படி ஒரு பங்கில் சேர்த்து அகத்திச்சார், நிலவாகைச்சார் வகைக்கு மூன்றுஜாமம் அரைத்து, துவரைபோல் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு முன்கூறிய 21-வித மாந் தக்கட்டி குழந்தைகளின் பருவம் பார்த்து பனிக்குளிகை யில்-1, கட்டு வலிப்பு இசுவு முதலியவைகட்கு வாளம்சேர்ந்த குளிகையில்-1 இவ்விதமாக நாய்வேளைச்சார், அப்பைக் கோவைச்சார், எருமுட்டைப் பீநாரிச்சார், சிறுதும்பைச் சார், துளசிச்சார், காட்டு மொச்சையிலைச்சார் இதுகளிலெதி லானுலும் 1-மாத்திரை யிழைத்துக் கொடுக்கவும், இப்படி 2, 3, 5-நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

பதினெட்டு சூலைக்கும் பன்னிரண்டு கிரந்திக்கும் எண்ணெய்

ஆசிரிய விருத்தம்

அண்டபகி ரண்டமுதல் கொண்டுமனு விண்டுதொழ
 ஆமணக் கெண்ணை யதுசேர்
அடைவாக தேங்காயை திருகிமுன் பாலையெடு
 அவர் செம்பரித்தி சார்சேர்
கண்டதொரு பாண்டங் கலந்தடுப் பேற்றியே
 காய்ச்சிவடி யெண்ணை யதிலே
கற்கமயினி வர்க்கமொடு சுக்கது கிராம்புடன்
 கனிவா யுகந்த யேலம்
கொண்டசிறு திப்பிலிச் சண்ட மாருத பூரம்
 குன்று மிளகும் பொடியதாய்

குறையாமல் இவ்வகை வகைக்கே விராகனெடை
கூட்டிவிடு யெண்ணை யதிலே
இண்டபடி ஒருசங்கு தந்தகுழ விக்கிய
யேகு நோயான வகைகேள்
ஈராறு கிரந்தியும் அறுமூன்று சூலையும்
ஏங்கி யோடிப் போகுமே.

இதன் விபரம்

விளக்கெண்ணெய்	பலம்	8
செம்பருத்திச்சார்	,,	8

முந்திய ஒரு தேங்காய்ப்பால் பிழிந்து மூன்றுங்கலந்து அடுப்பேற்றி சுக்கு, கிராம்பு, ஏலம், திப்பிலி, மிளகு, பூரம் வகைக்கு விராகனெடை-1 எடுத்துப்போட்டு மெழுகுபதத்தி லிறக்கி காலை ஒருசங்கு எண்ணையாக 3, 5, 7-நாள் கொடுக்க இச்சாபத்தியம்.

செங்கிரந்தியின் குணம்

விருந்தம்

பிள்ளைபிறந்தவுடன் அழுதுபிறகுமிடறுதனைக்கட்டி
மெள்ளப்பூனைகுரல்போலும் விடாமல்நீர்மலம்வயதி [ரூல்
துள்ளிக்கைகரல்சிவப்பேரிச் சும்மாய்கிடக்கும்யேதென்னி
கள்ளமானசெங்கிரந்தி கருத்தாய்வந்ததென்றுணரே.

செங்கிரந்திக்கு மருந்து

கோரோசனையை முலைப்பாலில் இழைத்து அந்திசந்தி ஒவ்வொரு சங்கு கொடுத்துவரவும் தீரும் அல்லது,

கற்பூரவள்ளி யிலையும், வெள்ளுள்ளியும் சமன்கொண்டு நறுக்கிச் சாறுபிழிந்து ½-சங்குவீதம் இருவேளையும் கொடுத்துவரவும் தீரும். அல்லது,

முருங்கையிலைச்சார் குண்டுமணியிலையின் சாறும் ஒவ்வொரு சங்கு கொடுத்தாலும் நிவர்த்தியாம். இவைகளில் எவ்வித சாந்திசெய்தாலும் செம்முள்ளியிலையை பஞ்சுபோல யிடித்து இரண்டு கொத்து போட்டுக் காய்ச்சிய தண்ணீரில் குளிப்பாட்டி வரவும். இரண்டுவேளையும் இந்த ஜலத்தால்

உடம்பிற்கு வார்ப்பதுடன் தலைக்கு வார்க்கும்பொழுதும் மேற்படி ஜலத்தை வார்க்கவும்.

கருங்கிரந்தியின் குணம்

விருத்தம்

முழங்கஅழுது முலையுண்ணுமூர்ச்சையாகும் உடல்வெதுப்பும்
கொழுங்கண்திரவாய் வரட்சிகொண்டே உதடுகருப்பேறும்
அழுங்கிஅலரும் குரல்கம்மும் அதிகமாகவயருதும் [மே·
புழுங்கவலிக்கும் கருங்கிரந்தி பொல்லாதெனவும் புகன்றன

கருங்கிரந்தியின் மருந்து

ஓணன் இரத்தம் காசளவு கழுதைப்பால் கலந்து கால் அரைசங்கு வீதம் கொடுக்கவும். அல்லது கருங்கழுதை மூத்திரமும் அவுரிச்சாறும் சமன் கலந்து வசம்பு உள்ளியும் இடித்து புன்னைக்காய் வீதம் மேற்படி சாறுடன் போட்டுக் கலந்து ஆமணக்கெண்ணெய் $\frac{1}{4}$-$\frac{1}{2}$-படியில் கலந்து எரித்து மெழுகு பதத்திலிறக்கி 2-3-காசளவு கொடுத்து வரவும்.

கருங்கிரந்திக்கு எண்ணெய்

நெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், சங்கம் யிலைச்சார் வகைக்கு அரையாழாக்கு வீதம் கலந்து அதில் சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு அரைபலமாக எடுத்து நீர் வார்த்தரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து சூரியபுடம் வைத்தெடுத்து காலைமாலை துட்டிடையாக கொடுத்துவரவும், செம்முள்ளி யிலையும் கிரந்தி நாயகமும் பஞ்சுபோல் இடித்து ஒரு குடந் தண்ணீருக்கு நாலுகுத்துப்போட்டு காய்ச்சி உடம்பிற்கும் தலைக்கும் வார்த்துக்கொண்டு வரவும்.

அதிசாரக் கழிச்சலுக்கு

வெண்பா

காட்டாத்திப்பூவும் கருங்காலிவேர்தோலும்
கோட்டானைத்திப்பிலியும் கூவிளமும்—கூட்டியே
காச்சித்தேன்விட்டருந்தக் காணுஞ்சிறுவேர்க்கு
போச்சென்றதிசாரம் போம்.

யாவும் சமனெடைகூட்டி குழம்புபோல் காய்ச்சவும்.

அதிசாரக்கழிச்சலுக்கும் கபசுரத்திற்கும்

விருத்தம்

அத்திக்காயின்சார்ஓமம் அரிசியெருமைத்தயிருடனே
பத்தியாகக்கலந்தருந்த பண்பாய்பிறந்தகுழவிகட்கு
தத்திக்கழியுமதிசாரம் தானேயகலுங்கபசுரமும் [லே
மெத்தப்பயந்துவிட்டோடும் மீன்போற்குவளைபெண்மயி

ஆமக்கழிச்சலுக்கு ஜாதிக்கா யெண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் பலம்-1, இரசகற்பூரம் விராகனெடை-3, அரிசியுடன் போட்டு வேகித்தெடுத்த ஜாதிக்காய்-1, அல்லது சோற்றுடன் வெந்த ஜாதிக்காய்-1 இவைகளைக் கல்வத்திலிட்டு மேற்படி எண்ணெய் விட்டரைத்து வேளைக்கு ஒரு கரண்டியாக கொடுக்கவும். ஆமக்கழிச்சலென்னும் குடித்த பாலெடுத்தல் இரத்தம் சுண்டி முகம் உலர்ந்து போதல் சுரமடித்தல் கைகால் நீத்துவிடுதல் ஆகிய இவை தீரும்.

விடா கழிச்சலுக்கு

ஆசிரிய விருத்தம்

ஜாதிக்காயும்அதிவிடையம் ஜாதிப்பத்திரியோடபினி [து
மாதர்க்கரசேசரியெடையாய் வைத்தெள்ளெண்ணெய்தனில்தோய்த்
சேதப்படாதேயரைத்து தினமோர்பணவிடைமூலப்பாலில்
நீதப்படியேதான்கொடுக்க நிஜமாய்க்கழிச்சலடைபடுமே.

உண்ணுக்கு வளர்த்திக்கு

வெண்பா

எவச்சாரம்கற்சுண்ணம் இரண்டும்பழச்சாற்றால்
அவச்சாரமாக அரைத்து—சுவைச்சேர்
உண்ணுக்கிலேதடவ உண்ணுவுதான்வளர்தல்
கண்ணுரஓடுமது தான்.

எவாச்சாரமும் கற்சுண்ணும்பும் சமனெடை கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து மிளகளவு யெடுத்து உண்ணுக்கிற் றடவவும்.

குழந்தைகள் விக்கலுக்கு

ஆசிரிய விருத்தம்

தேற்றான்கொட்டை சந்தனமும்
திகழுங்கலைமான் கொம்புடனே
கூற்றான்விழிப்பெண் முலைப்பாலில்
கொட்டைப்பாக்கு அளவெடுத்து
ஆற்றுவெல்லங் கூட்டியிட
அகலும்வெண்கா ரம்பொரித்து
போற்றாயிளநீர் தனிற்கொடுக்க
போகும்விக்கல் பண்டிதரே.

அஜீரணத்திற்கு

ஆசிரிய விருத்தம்

வெற்றிலைபத்தெடுத்து வேண்டும்சுண்ணும்பூசி [டு
வைத்திடுஅடுப்பிற்சட்ட மடிக்கும்வெற்றிலையைப்போட்
ஒத்துடன்வறுத்துநன்றாய் ஒருபடிநீரைவார்த்து
பற்றறஎட்டொன்றாக்கி பாங்குடநிறுத்துட்கொள்ளே.

இப்படிகொள்ளவேதான் இதமுடன்அஜீரணங்கள்
தப்பியதாதுஜன்னி சயித்தியம்மயக்கம்வாந்தி
செப்பியவயிற்றுநோவு சூதகமுங்கடுப்புதாகம்
அப்பொழுதோடுமென்று அகத்தியருரைசெய்தாரே.

இது பெரியவருக்கு மாத்திரம்

இந்த சிசுவளர்க்கும் விதிக்கு வைத்திய சிகிச்சைகள் அனுபோக வைத்தியம்) 2-வது காண்டத்தில் பார்க்கவும்.

சிசு வளர்க்கும் விதி முற்றிற்று.

ஐந்தாவது

தோஷயெந்திர விதி

பட்சிதோஷ குணம்

ஆசிரிய விருத்தம்

காலையில் மாலைதன்னில் காளையை யீன்றமாலை
பாலனை வெளிகொணர்கால் பக்ஷியின் வாடைதாக்கில்
சாலவே பாலுண்ணாது சஞ்சல மிகுதியாக்கும்
கோலமாய் முகம்சிறுக்கும் குரலது மாறும்பாரே.

(இ - ள்.) பக்ஷிதோஷ மென்பது தண்ணீர்போல் கழியும், குடித்தபா லெடுக்கும், முகம் சிறுக்கும், கண் பீளை சாறும், தலை பாரமாகும், கழுத்து வீங்கும், குரல் கம்மும், அடிக்கடி அலரி யழும், குழந்தை பிறந்தநாள் துடங்கி ஒரு வருஷமட்டில் அதிகாலையில் மாலை சந்திவேளையிலும், சிசுவை வாசலிலும், வீதியிலும் கொண்டுவரில் பட்சி தோஷம் சம்பவிக்கும், அல்லது ஒரு வருஷத்திற்குள்ளாக அகத்திக்கீரை, முளைக்கீரை, காசிவிக்கீரை இதுகளை தாயார் தின்னுவாளாகில் பச்சென்று கழியும்; அதையும் பட்சிதோஷ மென்பார்கள். எ - று.

இதற்குச் சாந்தி

ஆதிவாரம் காலையில் பனைமரத்தின் வடக்கே போகிற வேருக்கு தூபதீபங் கொடுத்து மஞ்சள் நூலினல் காப்புக் கட்டி வேர் கொண்டு வந்து செப்புத்தகட்டில் மேற்படி யெந்திரம் எழுதி வேரை வைத்து குளிசமாடி மூன்றுவித நூலினல் சுத்தி தூபதீபங் கொடுத்து இதற்கு மூலமந்திரம்.

சிங், கிரீயும், ஸ்ரீயும், சவ்வும், ஐயும், சுவாஹா.

இந்த மந்திரத்தை 108-தரம் ஜெபிக்கவும், ஜெபிக்குமளவும் சூடப்புகைகாட்டி ஜெபித்து சிசுவுக்கு வலதுபாரிசம் கட்டி உடனே ஒருபிடி பச்சரிசியும், கொஞ்சம் உளுந்தும் போட்டுப் பொங்கி எருக்கம் இலையில் வைத்து அரிசி மாவினால் செய்த மூன்று கலசம் வைத்து நெய் தீபம் ஏற்றி மேற்படி மூலமந்திரத்தை 108-தரம் ஜெபித்து ஒன்பது தடவை குழந்தைக்கு சுத்தி முக்கோடி சந்தில் வைத்துவிடவும். மறு தினம் காலை மூன்றெண்ணெய் கூட்டி தலைக்கு வார்த்து எருமாட்டுக்கால் குளம்பைச் சீவி படைநெருப்பிலிட்டு புகை காட்டவும்; பட்சி தோஷம் தீரும்.

பறவைதோஷ குணம்

குஞ்சியின் உடம்புநொந்து குடல்தனில் பாலுந்தங்கா
நெஞ்சியும் சுழியாய்வாங்கும் நெற்றியும் வலிப்புண்டாகும்
துஞ்சிடும் போதுசற்றே துணுக்கென வலித்துச்சீறும்
பஞ்சின்மெல் லடியினாளே பறவையின் தோஷமானே.

உச்சிமூளை தனைப்பற்றி உடலம்யெங்கும் வெதுப்புண்டாம்
எச்சமாகநாவுலர்ந்து இரண்டுகண்ணும் வெளுப்பாகும்[க்கும்
பச்சைமஞ்சள்முறித்தாபோல்பசும்பொன்னிறமாய்முகமினு
இச்சைபுரியுங் குழல்மாதே யிதுபறவை தோஷமென்றே.

ஹூ		ஹூ		ஹூ	
ஷ	ந	ஷ	ெ	கூ	ஹூ
	மூ	ஹூ	மூ		

இதற்குச் சாந்தி

மங்களவாரங் காலை ஆலமரத்தின் கிழக்கே விடுகிற விழுதிற்கு தூபதீபங் கொடுத்து கொண்டுவந்து மேற்படி சக்கரம்போல் செப்புத் தகட்டி லெழுதி விழுதைவைத்து குளிசமாடி பஞ்சவர்ன நூல்சுத்தி முன் பட்சி தோஷத்திற் கூறிய மூலமந்திரத்தை 108-தடவை உச்சாடனம் செய்து தூபதீபங் கொடுத்து குழந்தைகளுக்குக் கட்டவும். உடனே சீரகம்,

வெங்காயம், பூலாவேர் இம்மூன்றும் சமன்கொண்டு கியாழம் வைத்து கொடுக்கவும், இப்படி 3-நாள் 6-வேளை ஒரு சங்கு வீதம் கொடுத்துவர தீரும்.

எட்சிதோஷ குணம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

தேயும்உடம்பு மிகநாறும் செல்வன்முலைப்பால் மறந்திருக்கும்
தாயைக்கண்டால் ஒவ்வாது சற்றேவயிறு தான்கழியும்
பாயும்புலிபோல் பதறியழும் பாலர்கண்டால் பார்த்திருக்கும்
பாயும்விடையோன் தானறியப் பகராய்எட்சி தோஷமென்றே.

இதுவுமது

வித்தாங்தேக மிகநாறும் மெல்லிமுலைப்பால் அருவறுக்கும்
சற்றேவயறு தானெழுகும் சண்டாளம்போல் சுரங்காயும்
தத்துந்தாயைக் கண்டாலே தவனம்அது வாய்சிரிஅழும்
மற்றுங்கண் ணைப்பிசைந்து மண்ணில்புரளும் பாலகனே.

இதற்குச் சாந்தி

வெள்ளிக்கிழமையில் அழுக்கணஞ் செடியின் வடக்கே போகிற வேருக்கு தூபதீபங் கொடுத்து மஞ்சள் நூலினல் காப்புகட்டி நமசிவய யென்று 108-தரம் ஜெபித்து மாலையில் சூடங்கொளுத்தி வேரை அறுத்துவந்து மேற்படி யெந்திரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை வைத்து குளிச மாடி பழம், தேங்காய், கடலை, வெல்லம் வைத்து சூடம் கொளுத்தி முன் சக்கரத்திற்குரைத்த மூலமந்திரத்தை 108-தரம் உச்சாடனஞ் செய்து பிறகு தரையில் வைக்காமல் சேந்திய கேணி ஜலத்தில் கொஞ்சம் குழந்தை சிரசில் தெளித்து குளிசத்தை இடுப்பில் கட்டவும் நிவர்த்தியாகும்.

அடுத்தசிலபக்கத்தில் கூறிய பச்சிலைச்சாறு அல்லது பெண்கள் சாதாரணமாய் உபயோகப்படுத்தும் மாந்தக் கியாழங்கள் ½-¾-1-சங்கு வீதமாய் இரண்டு வேளைக் கொடுத்து கழிச்சல் சுரம் நின்றபிறகு பசும்பால் கூடிய காப்பி, தேத்தண்ணீர், புழுங்கலரிசி கஞ்சி இதுகளைக் கொடுத்துத் தேற்றவும்.

தேறைதோஷ குணம்

ஆசிரிய விருத்தம்

தேனேர்மொழியாய்நீகேளாய் தேறைகுணந்தானியம்புகிறேன்
ஊனேவற்றியுடம்புலரும் உலர்ந்தேநெஞ்சுதான்கூடும்
காணேகண்ணும்பொடித்திருக்கும் கையுங்காலுங்கரிமுடக்கும்
மானேவயிறுபுடைத்திருக்கும் மலமுந்தீயும்வாயுலரும்.

இதுவுமது

உலரும்தண்ணீர்தாகிக்கும் உந்திமலரும்குரல்வேராம்
மலர்ந்தமலரைப்போன்றமுகம் மடிந்துவாடிசெவிதாழும்
முலையின்பாலும்உண்ணாது மூச்சுவாங்கும்இதுதீர
பலருஞ்சொன்னரென்னடீ பழியாங்கையுங்கால்பாறே.

இதுவுமது

காலுங்கையுமிகவற்றிக் கட்டிப்போட்டாற்போல்பிள்ளை
மேலும்வற்றிவெளுப்பிட்டு வேறேகுணமாய்குரல்கெரித்து
சாலமுலைப்பால்குடித்தாலும் சற்றுந்தோராதிருந்தாக்கால்
நீலவட்டமுலைமாதே நிஜமாம்தேறைதோஷமிதே.

இதற்குச் சாந்தி



ஆலமரத்தின் புல்லுருவி கண்டு ஆதிவாரம் மாலையில் தூபங் கொடுத்து 2-அங்குல நீளக்கொடி தரித்துக்கொண்டு காரீயத்தகட்டில் மேற்படி சக்கரம் எழுதி கொடியை வைத்து குளிசமாடி பஞ்சவர்ன நூல் சுற்றி முதல் சக்கரத்திற் கூறிய மூலமந்திரத்தை 108-தரம் ஜெபித்து குழந்தை யிடுப்பில் கட்டவும் பஞ்சவர்ண சாதம் புதுச்சட்டியில் வைத்து குழந்தைக்கு சுத்தி வாழைத்தோப்பில் வைக்கவும்.

வேறுவித அவிழ்த சாந்தி

நீர்முள்ளி, காட்டுமல்லி, நீலி, கரசனுங்கன்னி, சிறுகீரை, முலைக்கீரைத்தண்டு இவை வகைக்கு ஒரு பிடி கொண்டு வந்து அரைப்படி ஜலத்திலிட்டு நாலுக்கொரு பங்காய் காய்ச்சி வடித்து மதுரம், திப்பிலி, ஏலம், சுக்கு, சமன் போட்டு பொடித்து. பசும் பாலிலரைத்து எலுமிச் சங்காயளவு யெடுத்து முன் கியாழத்துடன் கலந்து இதில் கால்படி நெய்யையும் ஊற்றி சிவக்கக் காய்ச்சி உச்சிக் கரண்டி வீதம் இருவேளையும் கொடுக்கவும். தாயார் இச்சா பத்தியம் இருக்கவும் குளிதோஷம் தேறைதோஷம் நீங்கும்.

புருஷதோஷ குணம்

விருத்தம்

கோமேயுச்சிகண்குழியும் பொருந்துண்பாலுந்தங்காது
போமேவயிறுபச்சென்றும் பொருகியழுகும்பறவைகுரல்
தாமேகுருகும்ஒருவேளைத் தனியேதனியேசீரியழும்
காமேகருத்தவிழியாளே கருதாய்புருஷதோஷமென்றே.

இதற்குச் சாந்தி

ந	சி	ழ	அ	ள்	ந	க	ய
கு	ர	ழூ	ழ	ல	ல	ள	ற
ெ	ல	ள	ய	சு	மு	மி	ம்

ஆண் உடும்பு நாக்கு கொண்டு வந்து மேற்படி யெழுத்துக்களை எழுதி வெள்ளெருக்கன் நாரில் கோர்த்துக் கட்டி தூபதீபங் கொடுத்து (ந-ய-வ-சி-ம) யென்று நூற்றியெட்டு உரு ஜெபித்து ஓணான் பலி கொடுத்து குழந்தையின் கழுத்தில் பதக்கம்போல் தொங்கக் கட்டவும் தீரும், மூன்றெண்ணைக் கூட்டி தலைக்கு வார்க்கவும்.

பெண்தோஷ குணம்

விருத்தம்

நெஞ்சுவரண்டுகண்குவிழ்ந்து நீடும்பெருமூச்சுண்டாகி
பஞ்சுபோலேகண்வெளுத்து பாலுங்குடியாதேயலரி
துஞ்சாதிரவும்பகலுந்தான் சுருங்கிதேகம்முகம்வேர்த்து
செஞ்சொல்மயக்கமுண்டாகில் செப்பும்பெண்ணின்தோஷமிதே.

பெண்தோஷ சாந்தி

பஞ்சவர்ண சாதம் செய்து புது அகண்டத்தில் வைத்துப் பஞ்சவர்ண மலர்வைத்து வெள்ளிப்பணம் ஐந்து வைத்து நெய் விளக்கு வைத்து வாழையிலையில் அல்லது தாளிப்பனை யோலையில் குழந்தை உருவு யெழுதி மலர் பரப்பி ஊதுவத்தி வைத்து (ந-ய-ம-சி-வ) யென்று நூத்தியெட்டுரு ஜெபித்து குழந்தைக்கு சுத்தி முச்சந்தியில் வைக்கவும்.

முட்டுதோஷ குணம்

போமென்றகுழந்தைமேனி பொன்னிரம்வாடிவேராய்
தாமென்றவயிற்றில்பாலுந் தங்காமல்வாயால்போகும்
நாமென்றகண்குழிந்து நாக்குவாய்கருகித்தோன்றும்
காமென்றமாதவிடாயின் கன்னியரெடுத்தகூரே.

முட்டுதோஷ சாந்தி



பூமியில் படாமல் தூக்கிய கேணி ஜலத்தில் வேப்பிலையைத் தோய்த்து அதிகாலையும் மாலையுமாக முதற்சக்கரத்தில் கூறிய மூலமந்திரம் சொல்லி 51-தரம் சொல்லி மந்திரிக்கவும். இப்படி ஐந்துநாள் மந்திரித்து பஞ்சவர்ண சாதமும், சுத்திப்போடுவதுடன் உச்சிவேளையில் எலுமிச்சங்காய் கொண்டுவந்து குழந்தையை முற்றத்தில் நிறுத்தி சிரசின் மேல் பழத்தையறுத்து நாலுதிக்கும் யெரியவும், மேற்படி சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி தூபதீபங்கொடுத்து இடுப்பில் கட்டவும் தீரும்.

குளிதோஷ குணம்

விருத்தம்

உச்சியுங்கழிந்திருக்கும் உயிர்விழிவளையமாகும்
மிச்சமாய்வாந்திசெய்யும் வேர்வையுமிகவேகானும்
பச்சுபச்சென்றுதானும் பலபலவர்ணமாக
எச்சமாய்கழிச்சலுண்டா மிகுகுளிதோஷந்தானே.

பாரேஉச்சிக்கண்ணிரண்டும் பரிவாய்பள்ளம்வீழ்ந்திருக்கும்
சாரேகழிச்சல்மிகவுண்டாம் தணல்போல்தேகம்மிகக்காயும்
வாரேகுய்யம்புண்ணாகும் வளமாய்உடல்மிகவற்றும்
மாரேதுன்பமிகப்படும்பார் மனையாள்குளித்துக்கண்டதுவே.

குளிதோஷ சாந்தி

தழுதாழை, குட்டிவிளா, வேப்பம்பிலை, சோம்பு, மஞ்சள், வசம்பு, சுக்கு இவை சமன்கொண்டு அரைப்பு அரைத்து வைத்துக்கொண்டு நிலவாகையிலை 4-5, கொத்துப் போட்டுக் காய்ச்சிய ஜலத்தை தணிய ஆறவைத்து மேற்படி அரைப்பை தேய்த்து ஜலத்தை தலைக்கு வார்க்கவும், பிறகு மூன்று கிணற்று ஜலம் கொண்டுவந்து மூன்று மஞ்சள் உரைத்துக் கலக்கி வாசலில் கிழக்குமுகமாய் நிற்க வைத்து,

(மங் - ஸ்ரீயும் - ஐயும் - சவ்வும்)

இந்த மந்திரத்தை 108-உரு ஜெபித்து முகத்திற் றெளிக்கவும். மீதி ஜலம் சிரசில் ஊற்றிவிடவும், பின்பு மறுநாள் நத்தைச்சூரி வேருக்கு தூபங்கொடுத்து பிடுங்கி வந்து செப்புத் தகட்டில் மேற்படி நாலு வாக்கியங்களும்

எழுதி, வேரை உள்ளே வைத்துக் குளிசமாடி குழந்தை இடுப்பில் கட்டவும் நிவர்த்தியாகும்.

குளித்தவள் எடுத்த தோஷ குணம்

மதலையின்வேனிவாடி வயிற்றினில்பாலுந்தங்கா
சதலையிற்குழியுண்டாகி சத்தியம்யெடுக்கும்நீராய்
நுதலினிஜலமும்நண்ணி நோக்கியவிழியுந்தாழ்ந்து
குதலைவாய்கருகித்தோன்றும்குளித்தவள்எடுத்ததாலே

இதுவுமது

பாலகன்பவளவாயிற் பனியெனவேர்க்கும்மூக்கும்
ஆலகண்வளையமாகும் அடிக்கடிவயிறுபோகும்
காலதுபின்னிக்கொள்ளும் கதறியேயலரிச்சீறும்
சிலமாய்விழித்துதாவும் தீதவளெடுத்ததாலே.

இதற்குச் சாந்தி



ஆதிவாரத்தில் திருக்கள்ளியின் வடக்கே போகிற வேருக்கு தூபதீபங் கொடுத்துக்கொண்டுவந்து மஞ்சள் நூலினல் சுத்தி, மேற்படி சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி வேரைவைத்துச் சுருட்டி குளிசமாடி மூன்றுவித நூலினல் சுத்தி தூபதீபங் கொடுத்து,

(மங் - ஸ்ரீயும் - ஐயும் - சவ்வும்)

இந்த மந்திரத்தை 108-தரம் ஜெபித்து குழந்தையின் இடுப்பில் கட்ட நிவர்த்தியாகும்.

கெற்பம் அழிந்த தோஷகுணம்

குடித்தபாலும்சகியாது குஞ்சியுடம்புமிகநொந்து
மிடித்தநெஞ்சயர்ந்தண்ணுந்து மிகவேநோகும்ஜடம்நாறும்
படியுங்கைகால்அழுக்கேறி பதைத்துவருத்தப்படுமானல்
துடிக்குஞ்சமனமிடையாளே சொல்வாயழிந்ததோஷமிதே.

இதுவுமது

காலும்பின்னுமுடம்பிளக்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாம்
மேலுஞ்சிவக்குமுடல்நாறும் விழியுஞ்சொருகிமயங்கிடுமாம்
வேலுஞ்சேல்போல்விழியாளே வில்போலபுருவமுடையாளே
கேளுமிந்தகுணங்கண்டால் கெற்பமழிந்ததோஷமிதே.

இதற்குச் சாந்தி

காட்டாத்திவேருக்கு தூபதீபங்கொடுத்து பிடுங்கிவந்து மஞ்சள்நூல் சுத்தி மேற்படி எந்திரத்திற் கூறிய மந்திரத்தை 108-உரு ஜெபித்து தூபதீப நைவேத்தியங் கொடுத்து குழந்தை இடுப்பில் கட்டவும். பின்பு பரித்திவேர் அரைத்து புன்னைக்காய்வீதம் கொடுத்து கொஞ்சம் பனைவெல்லங் கறைத்தநீர் குடிப்பாட்டவும் சாந்தியாம்.

விபூதி பிடிக்கும் மந்திரம்

குழந்தைகள் பயந்தாலும் திடுக்கிட்டாலும் அந்தி சந்தி உச்சி நேரங்களில் அலரிவிழும். சர்வ பயத்திற்கும் பற் கடிக்குதல், வாய்பிதற்றுதல் முதலிய சகலத்திற்கும்,

இந்தச் சக்கரம்போல் தாம்பாளத்தில் விபூதிபோட்டு எழுதி கற்பூரம் கொளுத்திவைத்து சொல்லும் மந்திரம்

ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி
சி	வ	ய	ந	ம
ம	சி	வ	ய	ந

ஆக்குறசனி உச்சாடுபாலதேவதா சர்வ கிரகங்களும் உன்னைக் கண்டவுடன் உன்பேரைச் சொன்னவுடன் சர்வபூத பசாசுகளும் ஓ யம்மா! நேபொய்யே நேபொய்யே யென்று கொக்கறித்தோட ஓம் ஐயுங் கிலியும் சவ்வும் மாலாமணி சவ்வுங் கிலியும் ஐயும் மாலாமணி சவ்வும் மாலாமணி நான் நினைத்த காரியத்திற்கு முன்வந்து நிற்க, சுவாஹா என்று

108-உரு ஜெபித்து பிறகு அந்த விபூதியில் கொஞ்சம் குழந்தை வாயிலும் சிரசிலும் போட்டு நெற்றியிலிட்டு உச்சியிலிருந்து பாதமட்டும் வாயினல் மூன்றுவிசை யிறக்கி ஊதிவிடவும். மற்ற விபூதியை தாம்பாளத்துடன் தலைமாட்டில் வைத்து தூங்கச் சொல்லவும், மாலையில் ஒருபிடி சிகப்பு சாதம் சுற்றி வீதியில் வைக்கவும். சகல பயமும் நீங்கும்.

கட்டிகள் சிலந்திகட்கு மந்திரம்

கிரந்தி, சிலந்தி, கட்டி இவைகள் குழந்தைகட்கு காணுமாகில் கிழக்கு முகமாய்த் தாயின் மடியில் குழந்தையை யிருக்கச்செய்து தாம்பாளத்தில் விபூதியைப்பரப்பி மேற்படி யெந்திர மெழுதி அருகில் கற்பூரம் கொளுத்தி வைத்து (அகார உகார மகார விந்தர ஆகாய வரப்பிரம்ம மூர்த்தி யென்னெதிர் வந்த சர்வ விஷங்களும் சர்வ கட்டிகளும் சர்வ வைப்புகளும் தரி முரி முரி தாக்கு தாக்கு சர்வ பூத பிரேத பசாசுகளும் நான் கையில் வேப்பிலை எடுத்தவுடன் பஞ்சா பறக்க சுவாஹா) யென்று வேப்பிலையால் 108-விசை மந்திரித்து சிரசிலிருந்து மூன்றுவிசை யிறக்கி இப்படி மூன்று நாள் மந்திரித்து ஞாயிற்றுக்கிழமையில் மேற்படி யந்திரத்தை செப்புத்தகட்டி லெழுதி தேங்காய், பழம், தாம்பூலம் தட்சணை வைத்து நவதானியம் நெற்பொரி வைத்து சூடன் கொளுத்தி 108-விசை முன் மந்திரத்தை உச்சரித்து வெள்ளித்தாயித்தில் குளிசத்தை யடைத்து குழந்தைக்கு கட்டவும். நெற்பொரி நவதானியத்தை எடுத்து குழந்தைக்கு சுத்தி முச்சந்தியில் யிரைத்துவிடவும்.

பூச்சிக்கடி யிரங்க

(சிரங்கு, சொரி, பூச்சிக்கடி இவைகட்கு)

சர்வ ருத்திராணி சர்வ விஷங்களும், சர்வ ரோகங்களும் சர்வ தீவானங்களும், அடி அடி உன்னைப்பெற்ற சிவன் பாதத்தாணை இரங்கு இரங்கு என்னைக்கண்டு என் மூச்சு பட்டவுடன் பரிஷ்காரமாய் யெரங்கெரங்கு நான் கட்டினது மாணிக்கமாய் நினைந்து யெரங்கு யெரங்கு சுவாஹா இந்தப் படி 108-உரு ஜெபித்து மண்ணை முடிந்து கையிற்கட்டி அடியிற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி குளிசஞ் செய்து கட்டவும்.



குழந்தைகள் சோக்கந்தீர தண்ணீர் ஓது மந்திரம்

கேணியில் தூக்கி தரையில் வைக்காமல் கையிலேந்திய புது ஜலத்தில் வேப்பிலையால் தோய்க்கும்போது (ஓம் நமோ பகவதி சர்வ ருத்திராணி சர்வ பூதப்பிரேத பசாசுகளையும் சர்வ ஐயன் பிடாரிகளையும் சர்வ காட்டேரி இரிசி முதலான தேவதைகளையும் கட்டுகட்டு முட்டுமுட்டு தாக்குதாக்கு நான் நினைத்த காரியத்திற்கு உன் திருமங்கிலியம் சாட்சியாய் வர வேணும் ஆக்கிரசு உச்சாடு பேதன்சு சிரந்தி உச்சாடு நான் எடுத்த வேப்பிலையால் அதிசீக்கிரமாக யொக்கு சுவாஹா) யென்று 108-விசை ஜெபிப்பதுடன் வேப்பிலையை தோய்

த்து கடைசியில் தோய்த்த ஜலத்தை குழந்தை முகத்தில் அடித்து இப்படி அந்திசந்தி 3-நாள் மந்திரித்து மேற்படி சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி சூடன் கொளுத்தி மேற்படி மந்திரத்தை 108-விசை ஜெபித்து குளிசமாடி குழந்தைக்கு கட்டவும் தீரும்.

முடிகயறு கட்டுமந்திரம்

ஞாயிற்றுக்கிழமையில் வெள்ளெருக்கன்னார் கொண்டு வந்து திரித்து வைத்துக்கொண்டு சூடன் கொளுத்திவைத்து சொல்லும் மூலமந்திரம் (கட்கட் கபாலவைரவா உன்னையும் என்னையும் பிறப்பித்த யீஸ்வரன் ஆணைவிடாதே சர்வ விஷங்களும் நாடவொட்டாதே சர்வபூத பிரேதபசாசுகணங் களும் பரக்க எரி எரி கிட்ட நாடாமல் அரி அரி மன சிம் சுவாஹா) இது ஒவ்வொரு முடி போட்டுக்கொண்டே வரவும் 1008 சரியாய் மந்திரமுமாய் இப்படி 1008-உரு ஜெபிக்கும் போது ஒழிந்த பின்பு மெழுகிய தரையில்வைத்து தாம் பூலம், புட்பம், கற்பூரம் கொளுத்தி தேங்காயுடைத்து மேற் படி மந்திரம் 108-உரு ஜெபித்து குழந்தை அறையில் கட்ட வும் நிவர்த்தியாகும்.

தோஷ எந்திர விதி முற்றிற்று.

———

ஆறவது

கிரக யெந்திர விதி

முதலாவது

கலி விருத்தம்

பாலக்கிரகமெனப் பல்வினை தீருமே
பாலக்கிரகமெனப் பல்பிணியோடுமே
பாலக்கிரகமெனப் பற்பொருள் கூடுமே
பாலக்கிரகந்தொழும் பாருளானுர்க்குமே.

பிள்ளை பிறந்த முதல்நாள் தொடங்கி ஒரு வருஷத்திற்குள்ளாக (காளி) என்னும் பேய் அணையும்.

அதின் குணம் :

வெதுப்பும் வாந்தியாகும் வயர்கழியும்.

இதற்குச் சாந்தி:

அரிசிமாவினுல் எருமை செய்து புதுச் சட்டியில்வைத்து சந்தனம்தெளித்து எருக்கம்பூ சூட்டி செம்பு காசு ஒன்று வைத்து கற்பூரம் கொளுத்திவைத்து குழந்தையை தாயின் மடியிலிருக்கச்செய்து கிழக்குமுகமாகக் குந்தவைத்து (பாலக் கிரக மோகனுங்கி) யிந்த பாலகிரகதோஷம் நிவர்த்திக்க (ஐயும் கிலியும் சவ்வும்) என்று 12-தடவை சொல்லிய பிறகு அந்த சட்டியை கையிலேந்தி தாய்க்கும் பிள்ளைக்குமாக 9-தடவை சுத்தவும் சுத்தும்போது சொல்லும் மந்திரம் (ஓம் இளங்காளி அம்மை அவன் தன்னுேடும் ஆங்காரமும் ஆயிசும் அதிக முண்டாகச் சுவாஹா) யென்று ஒன்பது தடவை சொல்லிக்கொண்டே சுத்தி திரும்பிப் பாராமல் சென்று ஊருக்கு வடக்குமுகமாக அல்லது வீட்டுக்கு வடக்குமுகமாகக் கொண்டுபோய் நாலுச்சந்தும் கூடுமிடத்தில் வைக்கவும்.

மறுதினம் காலை அல்லது சந்தியில் அடியிற்கண்ட சக்கரம்போல் செப்புத்தகட்டிலெழுதி விபூதிமேல்வைத்து நாயுருவி வேர் ஒரு துண்டு கொண்டுவந்துவைத்து (அரி அரி சிவசிவா அரி ஓம் சிவா) இந்த சிசுவுக்கு சகல தோஷங்

களும் நிவாரணமாசிவா யென்று ஊதுவத்தி கற்பூரங் கொளுத்திவைத்து 108-உரு ஜெபித்து மேற்படி வேரை வைத்து குளிசமாக மூன்றுவிதநூல் சுற்றி குழந்தைக்குக் கட்டவும் நிவர்த்தியாகும்.



இரண்டாவது

பிள்ளை பிறந்த இரண்டாவது வருடம் தொடங்கி மூன்றும் வருடத்திற்குள்ளாக (உத்திரபதி) யென்னும் பேயணையும்.

(இதின் குணம்) பால் எதுக்கும் முதுகு நிமிரும் வதுப்பும் கண் முழிகாது பலகாரம்பண்ணும் (இதற்குச் சாந்தி) அஞ்சி வர்ணசாதமும் அரிசிமாவடையும் பொரியும் பச்சையெள்ளும் சிவந்த பூவும் இதுகள் புதுச்சட்டியில்வைத்து குழந்தையை தாயின் மடியிலிருத்தி கிழக்குமுகமாய் குந்தவைத்து கற் பூரம் கொளுத்தி சட்டியில் வைத்து கையிலேந்திக்கொண்டு (ஓம் ஸ்ரீயும் பாலகிரகதோஷ நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வும்) யென்று 12-தடவை சொல்லிக்கொண்டே சுத்தி இரவு ஏழு மணி சுமாருக்கு பிடாரிகோயிலண்டை வைக்கவும்.

அடியிற்கண்ட சக்கரத்தை செப்புதகட்டி லெழுதி விபூதிமேல் வைத்து வேலை வேருக்கு தூபம் கொடுத்து ஒரு துண்டு கொண்டுவந்து சக்கரத்துடன் வைத்து கற்பூரங் கொளுத்தி தாம்பூலம் பழம் வைத்து (ஓம் அரிதர்ம தேவா தாரணியளந்த நம்பி நிலகண்ட மாயாசொருபா இப் பிள்ளைக்கு சர்வ தோஷம் படு படு ருங்கு ருங்கு மசிமசி நம சிவாயா) யென்று 108-உரு ஜெபித்து வேரை 3-வித நூலி னூற் சுத்தி குழந்தைக்கு கட்டவும்.



மூன்ருவது

பிள்ளை பிறந்த மூன்ரும் வருடம் முதல்நாள் துடங்கி நாலாவது வருடத்திற்குள்ளாக (பத்திரகாளி) யென்னும் பேய் அணையும்.

(அதின் குணம்) வீரிட்டழும் பால்வெதுப்பும் வேர்வை விடும் திடுக்கிடும் வாந்திபண்ணும் வயறுகழியும் (இதற்குச் சாந்தி அரிசிமாவினல் ஆண்பாவைசெய்து புதுச்சட்டியில் வைத்து எருக்கம்பூ சூட்டி சந்தனந்தெளித்து பகல் உச்சி நேரத்தில் தாயும் பிள்ளையும் கிழக்குமுகமாகக் குந்தவைத்து (ஓம் காளி) பாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று 12-தடவை சுத்தி வூருக்கு வடக்கே வயிரவன் கோயிலண்டை வைத்து விடவும்.



இந்த சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி முருங்கை மரத்திற்கு தூபதீபங்கொடுத்து கொஞ்சம் வேர் கொண்டு வந்து விபூதிமேல் வைத்து (ஓம் பரமசிவா ஓம் நமசிவாயா அகோர கோரதந்தரூபா உடம்புகுளிர சர்வதோஷம் பரிகரி படுபடு பட்சிபடுசிவா) யென்று 108-தடவை ஜெபித்து

வேரைவைத்து சுருட்டி பஞ்சவர்ண நூலினல்சுத்தி குழந்தைக்குக் கட்டவும் நிவர்த்தியாம்.

நான்காவது

பிள்ளைபிறந்த நாலாவது வருடம் முதல்நாள் துடங்கி ஐந்தாம் வருடத்திற்குள்ளாக கேச்சுவரி யென்னும் பேய் அணையும். (அதின் குணம்) வீரியமும் வெருவி விம்மும் வெதுப்பும் வயர்கழியும் வாந்திபண்ணும்.

(இதற்குச் சாந்தி) பாலும் சாதமும் உளுந்தும் போட்டு பொங்கியசாதம் ஐந்து அரிசியிடைபொரி பலவகை கரிகள் இவை புதுச்சட்டியில்வைத்து மாதாவின் மடியில் பிள்ளையை குந்தவைத்து கிழக்குமுகமா யிருக்கச்செய்து தூபதீபங் கொளுத்திவைத்து (ஓம் பாலக்கிரகபயிரவி ஓம் ஆம் ஸ்ரீயும் கிரியும் ஐயுங்கிலியும் சவ்வும் சர்வ பாலக்கிரக தோஷ நிவர்த்தி) யென்று 108-தடவை சுத்திக்கொண்டுபோய் நீர்க் கரையில் வைத்துவிடவும்.



இந்த சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி நத்தைச் சூரிக்கு தூபதீபங்கொடுத்து கொஞ்சம்வேர் கொண்டுவந்து இரண்டும் விபூதிதகட்டில் வைத்து (அரி ஓம் சிவாயநமா சட சட பிளபிள அகோரவீரபத்திராவா இப்பிள்ளைக்கு சர்வ தோஷமும் உடன்படு சுவாஹா) என்று 108-தடவை ஜெபித்து வேரை தகட்டில்வைத்து சுருட்டி பஞ்சவர்ண நூல்சுற்றி குழந்தைக்கு கட்டவும் நிவர்த்தியாகும்.

ஐந்தாவது

பிள்ளைபிறந்த ஐந்தாம்வருடம் முதல்நாள் துடங்கி ஆரு வது வருடத்திற்குள்ளாக (கேகடி) யென்னும் பேய் அணை யும். (அதின்குணம்) உடம்புசுடும் கைகால் நேர்ந்திருக்கும் தாகம் அதிகரிக்கும் வயிர்கழியும்.

(இதற்கு சாந்தி) மாவினல் ஆண்பாவைசெய்து சட்டியில் வைத்து சந்தனம் தெளித்து கருங்கோழி பலிகொடுத்து அத்துடன்வைத்து சிவந்த புட்பஞ்சூட்டி தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து (ஓம்-ஜின்னு-சர்வபாலக்கிரக தோஷம் ஓம்-சிவ-சிவ-ஐயும்-கிலியும்-சவ்வும்-ஓம் பாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று) 31-தடவை ஜெபித்து கிரகத்தின் பெயரை சொல்லி சூடங் கொளுத்தி சட்டியை கையிலேந்தி ஒன்பதுதடவை சுத்தி ஊருக்கு வடக்கே காளிகோயி லண்டை வைக்கவும்.



அவுரி செடிக்கு கருங்கோழிபலியிட்டு வேரைக்கொண்டு வந்து, இந்தச்சக்கரம் செப்புத்தகட்டிலெழுதி இரண்டு விபூதி தட்டில் வைத்து முன்சிரங்கா பின்சிரங்காபோட்டு பொங்கலிட்ட சாதம் வாழையிலையில் வைத்து தூபதீபங் கொளுத்தி ஓம்நீலி கபாலி திரிசூலி-சண்டாளி-அரிஓம்-இப் பிள்ளை தோஷம்-அரங்கி-படு கொய்யா சிவாயென்று 108- தரம் ஜெபித்த வேரைவைத்து சுருட்டி பஞ்சவர்ண நூல் சுத்தி குழந்தைக்கு கட்டவும்; சாதத்தை யெடுத்து முச்சந்தி யில் வைக்கவும் தீரும்.

ஆறுவது

பிள்ளைபிறந்த ஆறும்வருடம் முதல்நாள் துடங்கி ஏழாம் வருடத்திற்குள்ளாக நீலி என்னும் பேயணையும். அதின் குணம்: நடுக்கும் பரலெடுக்கும் சுரங்காயும் சில விகாரங் காட்டும்.

(இதற்கு சாந்தி) பச்சை மாங்கிஷம் கொள்ளுப்பருப்பு சாராயம் தூபதீபம் இதுகள் புதுச்சட்டியில்வைத்து (ஓம் பாலக்கிரக கன்னி தேவா ஐயுங்-கிலியும்-சவ்வும்-சர்வ பாலக்கிரகதோஷம் நிவர்த்தியென்று) 22-தடவை ஜெபி த்து குழந்தையை தாய்மடியில் வைத்து வடக்குமுகமாய் குந்தவைத்து கிரகத்தின் பேரைச்சொல்லி ஏழு எலுமிச்சம் பழம் உச்சியில் வைத்தறுத்து சட்டியில் போட்டு சூடன் கொளுத்தி 9-தடவை சுத்தி காளிகோயிலண்டை வைத்து விடவும்.



நெல்லிமரத்தின் கீழேயிருக்கிற சிறுபுள்ளடி செடிக்கு தூபதிபங்கொடுத்து கோழிபலிகொடுத்து வேரைக்கொண்டு வந்து இந்தச் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி இரண்டும் விபூதி தட்டில் வைத்து சூடம் கொளுத்திவைத்து (அரிகால் தூதா எமதூதா காலயேமதூதா ஓம் இப்பிள்ளை சிற சிற சிங் சிங்) என்று 108-தடவை ஜெபித்து வேரை தகட்டில் வைத்துச்சுருட்டி பஞ்சவர்ண நூல் சுத்தி குழந்தை இடுப்பில் கட்டவும் நிவர்த்தியாகும்.

ஏழாவது

பிள்ளை பிறந்த ஏழாம் வருடம் முதல்நாள் துடங்கி எட்டாம் வருடத்திற்குள்ளாக உத்திரகேசரி யென்னும் பேய்

அணையும். அதின் குணம்: வயறு சிக்கும் வெதுப்பும் வாந்தி பண்ணும் உச்சி குழியும் வயறு வாட்டமாய் திரளும்.

இதற்குச் சாந்தி: மாவினால் பதுமை செய்து புதுச்சட்டியில் வைத்து எருக்கம்பூ சூட்டி சந்தனம் தெளித்து தாயும் பிள்ளையும் கிழக்குமுகமாய் குந்தவைத்து சூடம் கொளுத்தி (ஓம் பாலக்கிரக மாரி ஐயும் கிலியும் சவ்வும் பாலக்கிரக தோஷம் நிவர்த்தி) என்று 22-தடவைஜெபித்து கிரகத்தின் பெயரைச்சொல்லி யிருவருக்கும் 9-தடவையேத்தி யிறக்கி சுத்தி நாலுசந்து கூடும் யிடத்தில் வைக்கவும்.



சுடுகாட்டிலிருக்கும் அவுரிசெடிக்கு பொங்கலிட்டு பெண் கோழி பலிகொடுத்து தூபதீபங்கொடுத்து வேரைக்கொண்டு வந்து செப்புத்தகட்டில் மேற்கண்ட சக்கரமெழுதி யிரண்டும் விபூதி தட்டில் வைத்து தூபதீபங்கொளுத்தி ஓம் சிவா இந்தப் பிள்ளைக்கு சர்வதோஷமும் படு படு சுவாஹா என்று 108-தடவை ஜெபித்து வேரைவைத்து சுருட்டி குளிசமாடி பஞ்சவர்ண நூல்சுற்றி குழந்தைக்கு கட்டவும் நிவர்த்தியாகும்.

எட்டாவது

குழந்தை பிறந்த எட்டாம்வருடம் முதல்நாள் துடங்கி ஒன்பதாம் வருடத்திற்குள்ளாக முனியென்னும் பேய் அணையும். அதின்குணம்: வெதுப்பும் வயிறு கழியும் உடம்பு யிளைக்கும்; மூளையுண்ணது ஒருவித விகாரமா யிருக்கும்.

இதற்குச் சாந்தி: அஞ்சுவர்ண சாதமும் எள்ளும் பொரியும் புண்ணுக்குப் பொடியும் புதுச்சட்டியிலிட்டு தாயும் பிள்ளையும் கிழக்குமுகமாய் குந்தவைத்து மேற்படி சட்டியில் சூடன் கொளுத்தி வைத்து கிரகத்தின் பேரைச் சொல்லி (ஓம் பகவதி ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரகதோஷ பகவதி

இந்த பாலகிரகதோஷ நிவர்த்தி யென்று) 16-தடவை ஜெபித்து 9-தடவை சுத்தி ஏத்தி யிறக்கி பிடாரி கோயிலண்டை வைத்துவிடவும்.



ஊமத்தன் வேருக்கு காப்பு கட்டி தூபதீபங் கொடுத்து (நங்-மங்-சிங்-மங்-யங்-யென்று) ஒன்பது தடவை சொல்லி வேர்பிடிங்கி வந்து செப்புத் தகட்டில் இந்தச்சக்கரம் எழுதி இரண்டும் விபூதி தட்டில்வைத்து அவல்கடலை தாம்பூலம் தேங்காய் தூபதீபங் கொடுத்து ஓம்-ஓங்காரி-வேதாளி சர்வ தோஷம்-நசி இப்பிள்ளை தோஷம் பக்ஷிகணய படுபடு சுவாஹா யென்று 108-தரம் ஜெபித்து குழந்தைக்கு கட்டவும் நிவர்த்தியாம்.

ஒன்பதாவது

பிள்ளை பிறந்த ஒன்பதாம் வருடம் முதல்நாள் தடங்கி பத்தாம் வருடத்திற்குள்ளாக பராபரியென்னும் பேய்அணையும். அதின்குணம்: தலைபிரட்டும் வாய் நீர்வடியும் வயிறு கழியும் கண்மயக்கும் இன்னும் பலவிகாரம் செய்யும்.

இதற்கு சாந்தி: வெள்ளை சாதமும் வெள்ளைப்பூவும் வெள்ளை மாவினல் பாவும்செய்து புதுசட்டியில் வைத்து தாயும் பிள்ளையும் கிழக்குமுகமாய் குந்தவைத்து சூடன் கொளுத்தி ஓம் பாலக்கிரக குடோரி ஐயும் கிலியும் சவ்வும் சர்வ பாலக்கிரக தோஷ நிவர்த்தியென்று 31-தடவை ஜெபித்து 9-தடவையேற்றி யிறக்கி சுத்தி குளக்கரையில் கொண்டுபோய் வைத்து விடவும், உடனே காக்காயிறகும் மயிலிறகும் கழுதைவிட்டமும் படைநெருப்பிலிட்டு குழந்தைக்கு புகை காட்டவும்.



மூடக்கத்தான் அல்லது மூக்குரொட்டைக்கு காப்பு கட்டி தூபதிபங்கொடுத்து ஓம் சிவாயநமவென்று வேர் பிடிங்கிவந்து இந்த சக்கரம்போல் செப்புத்தகட்டி லெழுதி தாம்பாளத்தில் வைத்து பழம் தேங்காய் தாம்பூலம் தூப தீபம் வைத்து ஓம் ஆங்காரி வேதவேதாளி சர்வபட்சணி பிள்ளை தோஷ பட்சணி படுபடு சுவாஹா வென்று 108-தடவை ஜெபித்து வேரை தகட்டில் வைத்து சுருட்டி பஞ்ச வர்ணநூல் சுத்தி குழந்தைக்கு கட்டவும் நிவர்த்தியாம்.

பத்தாவது

பிள்ளை பிறந்த பத்தாம்வருடம் முதல்நாள் துடங்கி பதினோரும் வருடத்திற்குள்ளாக விகாரியென்னும் பேய் அணையும், அதின் குணம்: சிறு உழலையுண்டாக்கும், நடுக்கும் திடுக்கிடும் வாய்மெல்லும் சுரமடிக்கும்.

(இதற்கு சாந்தி) புண்ணாக்குக்கீரையும் தேனும் நெய்யும் பச்சை மாங்கிஷமும் ஓலைப்பூவும் இவைகள் புதுச் சட்டியில் வைத்து தாயும் பிள்ளையும் கிழக்கு முகமாய் குந்தவைத்து தூபதீபங்கொளுத்தி (ஓம்-ருத்திரி ஐயும்-கிலியும்-சவ்வும் சர்வ பாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று) 12-தடவை ஜெபித்து மேற்படி சட்டியை தூக்கி குழந்தைக்கு 9-தடவை சுத்தி பேயின் பெயரைச்சொல்லி 9-தடவைசுத்தி கிழக்குதிசையிலிருக்கும் குளக்கரையில் வைத்து உடனே குழந்தைக்கு ஆட்டுமயிர் புகைகாட்டவும்.



நிலையாவாரைக்கு காப்புகட்டி தூபதீபங் கொடுத்து ஓஓ ஆஆ சீசீ வையென்று வேர்பிடுங்கிவந்து இந்தசக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி இரண்டும் தாம்பாளத்தில்வைத்து அரிஓம் அரநசி அகாரமந்திரா அகோரசுருபா அகோர பட்சி இப்பிள்ளைக்கு சர்வதோஷம் படு சுவாஹாயென்று 108-தரம் ஜெபித்து வேரை தகட்டில்வைத்து சுருட்டி பஞ்ச வர்ண நூல்சுத்தி குழந்தைக்கு கட்டவும் நிவர்த்தியாம்.

பதினோராவது

பிள்ளைபிறந்த பதினோராம் வருடம் முதல்நாள் துடங்கி பனிரெண்டாம் வருடத்திற்குள்ளாக தசரீ யென்னும் பேய் அணையும். அதின் குணம்: கண்வீங்கும் சோர்ந்து விழும் துவளும் தலை நோயிராது.

இதற்கு சாந்தி: பஞ்சவர்ணசாதம் பச்சைப்பால் பச்சரிசி நவதானியம் இவை புதுச்சட்டியிலிட்டு தூபதீபங் கொளுத்தி தாயும் பிள்ளையும் வடக்கு முகமாய் குந்தவைத்து கிரகத்தின் பெயரைச்சொல்லி ஓம்-ஐடாதரி-ஐயுங்-கிலியும்-சவ்வும்-சர்வ பாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று 18-தடவை ஜெபித்து ஒன்பது தடவை யிருவருக்கும் சுத்தி சுடலையில் கொண்டுபோய் வைக்கவும்.



சுடலையிலிருக்கும் விடத்தாரி வேருக்கு பெண்கோழி பலிகொடுத்து தாம்பூலம் தட்சணைவைத்து தூபதீபங் கொடுத்து ஓம் சிவா வென்று 18-உரு ஜெபித்து வேர் பிடுங்கிவந்து இந்த சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி இரண்டும் விபூதி தாம்பாளத்தில் வைத்து அரி ஓம் வம் அக்கினி மாகாளி சத்திரூபா யம்மே ஐயுங்கிலியும் சவ்வும் பட்டு, இப் பிள்ளைக்கு சர்வ தோஷமும் நசிநசி யென்று

108-தடவை ஜெபித்து வேரை வைத்து குளிசமாடி குழந்தைக்குக் கட்டவும் நிவர்த்தியாம்.

பனிரெண்டாவது

பிள்ளைபிறந்த பனிரெண்டாவது வருடம் முதல்நாள் தொடங்கி இவ்வருடம் பூர்த்தியாவதற்குள் அமுட்டி யென்னும் பேய் அணையும் அதின் குணம்: நாய்போல கடிக்கும் உச்சி குருகும் உடம்பு சுடும்.

இதற்குச் சாந்தி: அரிசிமாவில் ஆண்பாவை செய்து, உளுந்து சோரும் தயிரும் புதுச்சட்டியில்வைத்து தாம்பூலம், புஷ்பம், பழம் தூபதீபங்கொடுத்து தாயும் பிள்ளையும் கிழக்கு முகமாய் குந்தவைத்து ஓம் பாலக்கிரகநீலி ஐயும் கிலியும் சவ்வும் சர்வ பாலக்கிரகதோஷ நிவர்த்தியென்று 19-தடவை ஜெபித்து ஒன்பதுதடவை சுத்தி ஊருக்கு வடக்கே முக்கோடி சந்தில் வைக்கவும்.

களாவேருக்கு காப்புகட்டி தூபதீபங் கொடுத்து பெண் கோழி பலிகொடுத்து ஓம்-உ-உ-சி-சி அ-யென்று ஒன்பது தடவை ஜெபித்து வேர் பிடுங்கிவந்து இந்தச் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி இரண்டும் விபூதி தாம்பாளத்தில் வைத்து வெத்திலை, பாக்கு, பூ, சந்தனம், பழம், தேங்காய் தூபதீபங்கொடுத்து ஓம்-ஆம்-தேவி, திரிபுரமாகாளி, சிவாநந்தி அம்மே, தாயே அடியேனுகிய இந்த சிசுவை காற்க சுவாகா யென்று 108-தடவை ஜெபித்து வேரை தகட்டிவிட்டு சுருட்டி குளிசமாடி பஞ்ச வர்ண நூல் சுத்தி குழந்தைக்குக் கட்டவும் நிவர்த்தியாம்.



சாவினுல் மந்திரிக்கும் சுளுக்கு மந்திரம்

(சுடுவுரள் - சுடுகாட்டுவுரள் - அங்கவுரள் - ஆகாயவுரள்-சங்குவுரள் - சங்குசக்கரம்வுரள்.)

எச்சுளுக்கு பாய்ந்தாலும் எதிர்சுளுக்கு பாய்ந்தாலும் பத்துசுளுக்கும் பரந்தோடிப்போம், பரமகுரு நாதாவே ஓம் காளி ஓம் பிடாரி, ஓம் நமசிவாய ஓம், இந்த மந்திரத்தை ஓடுகிற ஜலத்தில் கணுக்கால் தண்ணியில் நின்று 1008-உரு ஜெபித்து பிறகு யாருக்காகிலும் சுளுக்கு விழுந்தால் சாவியினுல் தடவி, 48-விசை மந்திரிக்கவும்; இப்படி மூன்று வேளை செய்ய நீங்கும்.

இதுவும் சுளுக்கு மந்திரம்

(அப்புநிற்க - தேயுநிற்க - வாயுநிற்க - உடல்நிற்க - உயிர்நிற்க - சத்திநிற்க - சிவம்நிற்க - சுவாஹா.)

இந்த மந்திரத்தையும் முன்போல் ஜலத்தில் நின்று, உருவேத்தி வைத்துக் கொள்ளவும் ; எந்த மந்திரமானுலும் ஒருவருக்கு மந்திரித்தால் பிறகு பூசை முகத்திலாவது குளிக்கையிலாவது ஆறு முதலிய ஜலக்கரையிலாவதும் முன் செலவழிந்த குறைக்காக ஜெபித்து பூர்த்தி செய்து வைத்துக்கொள்ள வேண்டியது ; ஏனெனில் (தேடாதழிக்கிற்பாடாய் முடியும்) என்பதுபோல் பலியாது.

கிரகதோஷ யந்திரவிதி முற்றிற்று.

———

ஏழாவது

பத்தியவிதி

சுரரோகிகட்கு இன்னின்ன பதார்த்தங்கள் கூடாது

அறுசீரடி யாசிரிய விருத்தம்

பால்யெண்ணெய்யிளநீர்போகம் பருகிடுங்குளிர்ந்தசோறு
கால்நடைதயிர்புளிப்பு கடுவேலையினிப்புபாகு
மால்தருமடமாண்கன்றே வந்திடுஞ்சுரத்திற்காகா
ஞாலமேல்மனிதர்பேரில் நாட்டிடில்ஜன்னியாமே.

இதுவுமது

பச்சைமீன்யிரைச்சிகோழி பழங்கறிதேங்காய்மாங்காய்
இச்சைநெய்பருப்புமுட்டை யெழிலுளபுனுகுகந்தம்
நச்சுகஇவைகளெல்லாம் நாட்டியசுரத்திற்காகா [மே.
கொச்சைமாநிடர்கொண்டாக்கால் கொடியமரணம்வந்திடு

இதுவுமது

தோசைபிட்டுபணியாரம் சொல்லும்பயருஅவல்பொறிகள்
வேசையுரக்கம்மஞ்சள்வாடை வேண்டாம்பழங்கறிபழங்கஞ்சு
ஆசையுடனேபொருள்தேடல் ஆக்கையுரக்கம்இவையாகா
தோஷமிகுந்துபலஉணியாய் சுருக்கில்மரணம்வந்திடுமே.

சர்வரோக பத்தியங்களுக்கும் ஆகா பதார்த்தங்கள்

விருத்தம்

கொள்ளுக்காடிதுமட்டிக்காய் கோழிப்பன்றிகொக்குடனே
முள்விற்பெரிபாவற்காய் முதிமவறைபயிற்றங்காய்
பள்ளத்தெழுந்தமடற்சேம்பு படரும்வள்ளிபாலையிவை
எள்ளைத்திணையும்பீரேல் யெல்லாமருந்தும்யிழந்தீரே.

இதுவுமது

மாங்காயிளநீர்மாதுளங்காய் மாவின்பண்டம்புளிகடுகு
தேங்காய்நெய்பால்கிழங்குபழம் தின்னும்காயம்வெங்காயம்
மீங்கதாதரிக்கும்சுராபானம் மச்சங்கள்ளுபனங்கள்ளு [மே.
மாங்கேயிவற்றுளொன்றேனும் அருந்ாதிருந்தால்மருந்தா

(இ - ள்.) எவ்விதமான நோயாளிகளுக்கும் கொள்ளு காடி, குமட்டிக்காய், சேவல், பன்றி, கொக்கு, கொம்பு, பாவற்காய், முத்தின அவரைக்காய், காராமணிக்காய், சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, பாலைக்கீரை, மாங்காய், எள்ளு, தினை, இளநீர், மாதுளங்காய், மாப்பலகாரம், புளி, கடுகு, தேங்காய், எருமை நெய், எருமைப்பால், முப்பழங்கள், பெருங்காயம், வெங்காயம், கள்ளு, ஈச்சங்கள்ளு, பனங் கள்ளு இதுகளாவது இவைகளில் எதையாவது விரும்புவார் களாகில் அருந்திய மருந்து பாழாவதும் தவிர (ஒன்றுவிட்டு ஒன்றை செய்யில் கொன்றுவிட்டுப் போய்விடும்) என்னும் பழமொழி கட்டாயமாய் பலிக்கும். எ - று.

நோயாளிகள் தின்னவேண்டிய பத்திய பதார்த்தங்கள்

விருத்தம்

பொன்னுங்கண்ணி சிறுகீரை புதியசாறுநெய் வரால்குரவை
சொன்னேங் கோவைக்காய்வற்றல் சுண்டைபவரை பிஞ்சுடனே
பன்னுவப்பை வெள்ளுள்ளி பயறுமுருங்கை யிளம்பிஞ்சும்
நன்னீர்விளைத்த சிறுபயறு நன்மாங்காயின் பிஞ்சுநன்றே.

இதுவுமது

அத்திப்பிஞ்சு கருவாழை யதன் றன்பிஞ்சு பூவாகும்
கத்திரியும் ஊர்க்குருவி காடையுடனே சிவலாமை
சுத்தமாங் காயின்பருப்பு சுறூன்திருக்கைக் கருவாடாம்
பத்தியத்தி லிவைதவிர பச்சைமீன்கள் பகையாமே.

இதுவுமது

வேண்டிய மருந்துண்பார்கள் விராலொடு குரவைதேளி
யாண்டிடு மயிரையூடான் ஆனசன் னையுஞ்சுதும்பு
மீண்டிடு முருநெய்தோலி யிவைகளை யருந்துகாலை
வேண்டிய துலர்த்திக்கொள்வாய் விரைமலர்க் குழலினளே.

இதுவுமது

காடையுடும்பு கவுதாரி காட்டினெலியும் ஊர்க்குருவி
ஆடுவிரும்பில்வெள்ளாடாம் அதுவும்உலர்த்திக்கறிகொள்ளு
நாடுதனில்வாய் விரூல்குரவை நலமாம்யிவையும் உலர்த்திக்
கூடுங்கூடாதென்னுதே கூட்டில்மருந்து குணந்தருமே [கொள்ளு

(இ-ள்.) சகல வியாதியஸ்தருக்கும், சகல அவிழ்தங் களுக்கும் பொருத்தமான பத்திய பதார்த்தங்களாவன: பொன்னுங்கண்ணி, சிறுகீரை அன்று உருக்கிய பசும்நெய், கோவை, அவரைப்பிஞ்சு, அப்பைக் கோவைக்காய், வெள் ளைப்பூண்டு, முருங்கைப்பிஞ்சு, பனிப்பயறு, அத்திப்பிஞ்சு, கருவாழைக் கச்சல், கருவாழையின் பூ, பழ மாங்கொட்டை யின் பருப்பு ஆகிய இவைகளும், ஏரிவரால், குரவை, தேளி, அயிரை, ஊடான், சன்னே, சுதும்பு, சிறிய நெய் தோலி, உடும்பு, ஊர்க்குருவி, காட்டெலி இவைகளின் கறிகளும், சுரு, திருக்கை, வெள்ளாடு, இரு இவற்றின் கருவாடு அல் லது வற்றல்களும் ஆகும். இதுகளெல்லாம் வியாதிக்கார ருக்கு ஒற்றுமையான பதார்த்த மென்றறிக,

தாம்பூலம் கூடாது

தாபசுரம், மூர்ச்சை, ஜன்னிபாதம், தேகத்திலூரிய விஷங்கள், பயித்தியம், க்ஷயம், சிரஸ்தாபம், மதரோகம் ஆகிய இந்த வியாதிகளுக்கு பரிஷ்காரமாய் தாம்பூலம் தரிக் கக் கூடாது.

நெய் கூடாது

தருணசுரம், ஜலதோஷம் அல்லது நீர்க்கோவை, சப்த தோஷம், பெருவயறு, மகோதரம், அதிசாரம், பேதிகள், வாத குன்மம் ஆகிய இந்த வியாதிகள் அதிகரிப்பதற்கே நெய்யே காரணமானபடியால் இந்த நோயாளர் நெய்யை அனுசரிக்கக் கூடாது.

தயிர் கூடாது

குறைநோய், வீக்கம், நேத்திர ரோகம், வாதகுன்மம், சோபை, விஷம், ஜலதோஷம், சுரம், பீனிசம், பாண்டு, பேதி, பீலிகை, களம் பிணி இந்த வியாதிகளுக்கு தயிர் மிக வும் தொந்தபதார்த்த மாகையால் இருவித தயிரும் கூடாது.

வாததேகிகட்கு நித்திய பதார்த்தங்கள்

கறிவகை	கீரைவகை	ரசவகை	வற்றல்வகை	ஊறுகாய்வகை
கல்யாணபூசினிக்காய்	குப்பைமேனி	சக்ரவர்த்திக்கீரை	சுண்டை	நாரத்தை
கத்திரிக்காய்	முன்னை	வெள்ளைசாரட்டை	பேய்ப்புடல்	தான்றி
முருங்கைப்பிஞ்சு	ஆறை	பாகல்	தூதுணம்	கடுக்காய்
வழுதுளங்காய்	நல்வேளை	முருங்கை	நெல்லி	தேற்றான்
வெள்ளவரைக்காய்	மணத்தக்காளி	முளைக்கீரை	ஆதொண்டை	பருங்களா
பிதிபாகல்	யானைநெருஞ்சில்	நல்தூதுளம்	மணத்தக்காளி	சிறுகளா
காராக்கருணை	முசுமுசுக்கை	பொன்னாங்கண்ணி	வெள்ளவரை	இஞ்சி
காட்டுக்கருணை	அப்பக்கோவை		முள்ளி	மாங்காய்
முள்வாளை	காட்டுமூக்கரட்டை			
புரு	நல்வசலை			
சுரு				
வெள்ளாட்டுத் தலைக் கறி				
இவைகளின் பொரியல் குழம்பு கறி இதுகள் வாததேகத்தார்க்கு உபயோகப் படுத்தி வரில் மிக்க சவுக்கியமாம்.	இந்த கீரைகள் துவட்டல் கடையல் செய்தருந்தில் வாத மதிகரிக்க யிடந்தராது.	இவைகளி லெது வேனும் வேகவைத் திருந்த ஜலத்துடன் மிளகு உள்ளி தொந்தித்து ரசம் செய்து உணவில் கூட்டிவரில் வாதத்தை லகுவில் கண்டிக்குமென வறிக.	இவைகளி லெது வேனும் வற்றலிட்டு அனுபானம் செய்து வரில் வாதம் வழி விலகுமென்றறிக.	இந்த ஊறுகாய்களி லெதுவேனும் மற்றப் பதார்த்தங்களிடம் சிக்கியதை அசனத்திற்கு உபயோகப்படுத்தி வர வாதத்தா லுண்டாகிய சோம்பல் திமிர் உரக்கம் இவைகளை பரக்கடிக்கு மென்று அறிக.

பித்ததேகிகட்கு நித்திய பதார்த்தங்கள்

கரிவகை	கீரைவகை	ரசவகை	வற்றல்வகை	ஊறுகாய்வகை
வெள்ளரி	புளியாரை	கொத்துவசலை	வெண்முள்ளி	பச்சைமிளகு
கொம்புபாவக்காய்	கோவை	கொடிவசலை	பேய்ப்புடல்	இஞ்சி
மிதிபாவக்காய்	முருங்கை	வெள்ளைக்கீரை	தூதுணம்	தூதுளம்
நீளப்புடல்	வசலை	அகத்திக்கீரை	காட்டுசுண்டை	நெல்லி
பீர்க்கு	பொன்முசட்டை	பிரமி	கண்டங்கத்திரி	தான்றிக்காய்
அவரை	அப்பக்கோவை	தைவேளை	பாவற்காய்	நாரத்தை
ஆற்றுமுள்ளி	ஒரிதழ்தாமரை	தாரயிலை	மணத்தக்காளி	தமரத்தை
கல்யாணபூசனி	பாலை		தாமரை	புன்னைஆல்
கத்தரி	காட்டுமுசுக்கை		வல்லாரை	விளா
முருங்கை	தூதுணம்			தேற்றுன்
பருங்களா	சுரை			மாங்காய்
வாழை	வல்லாரை			மரிமாங்காய்
	சிறுகீரை			கொடிஎலுமிச்சை
	மணத்தக்காளி			
இவைகளில் எது வேனும் வரல் பொரியல் கூட்டு குழம்பு செய் தருந்திவரில் பித்தசாந்தி.	இவைகளி லெது வேனும் அன்றுடம் துவட்டல் கடையல் செய் தருந்திவரில் பித்தசாந்தி.	இவைகளி லெது வேனும் வேகவைத்து யிருத்த ரசத்துடன் மிளகு கூட்டி ரசம் செய்து அசனத்திற்கு உபயோகித்து வரில் பித்த சாந்தியாம்.	இவ்வகைக் காய்களின் வற்றல்கள் உபயோகித்து வந்தால் பித்தத்தை எத்தாகவே கண்டிக்குமென்றறிக.	இவ்வகை ஊறுகாய்களை உணவினுடன் படுத்தி வருவார்க்கு பித்தம் சற்று தூரமாகவே யிருக்குமென்றறிக.

சிலேத்துமதேகிகட்கு நித்திய பதார்த்தங்கள்

கரிவகை	கீரைவகை	ரசவகை	வற்றல்வகை	ஊறுகாய்வகை
அத்திக்காய்	காரைக்கீரை, வரிக்கோவை, பசுமுன்	ஓமம்	மணத்தக்காளி	பசுமஞ்சள்
மிதிபாவக்காய்	கருஞ்செம்பை	செங்கடுகு	சுண்டை	மிளகு
கொம்புபாவக்காய்	நீராரை, புளியாரை	சதகுப்பை	தூதுளம்	சுண்டை
கத்திரிக்காய்	மருதம், நெய்தல்	வெந்தயம்	பிரண்டை	வாழைத்தண்டு
பேய்ப்புடல்	குப்பைமேனி	கொத்துமல்லி	கோவை, முள்ளி	மாம்பிஞ்சு
அவரை	பொன்னுவாரை	வேளை	பேய்ப்புடல்	அத்திப்பிஞ்சு
பெரியகளா	முசுமுசுக்கை	சுக்கு, அகத்தி	ஆதொண்டை	தூதுளம்
பாவக்காய்	பெருபிண்ணாக்கு	குரிஞ்சான்	அவரை	மிதிபாவல்பிஞ்சு
பயிற்றம்பிஞ்சு	சிறுபிண்ணாக்கு	பாகல்	கண்டங்கத்திரி	
கண்டங்கத்தரிக்காய்	பண்ணைக்கீரை	தும்பை	நெல்லி	
பீர்க்கங்காய்	முளைக்கீரை, மணலி		காட்டுநாரத்தை	
இவைகளின் பிஞ்சு	பொன்முசுட்டை			
கருணைக்கிழங்கு	காராமணி, உளுந்து			
கூழ்ப்பாண்டம்	புளிப்பு மலைகளா			
வாழைத்தண்டு	பொன்னங்கண்ணி			
ஷெடி பூ	காய்வேளை, வசலை			
முள்ளங்கி				
இவைகள் சிலேத்ம தேகிகளுக்காகும்.	இவைகளை சமைத்துத் தின்னலாம்.	ஆகிய இவைகளிலெதுவேனும் வேக வைத்திருத்த நீரில் மிளகுமுதலிய காரங் கூட்டி ரசம் செய்தருந்த சேத்தும தேகிகளுக்கு மிக்க சுகுணத்தை யுண்டாக்கும்.	இந்த காய்களை வற்றல் செய்து வைத்துக் கொண்டு நெய்யில் வறுத்து உண்டியுடன் உண்ணில் மிக்க சவுக்கியமும் சேத்தும சாந்தியுமம்	இவைகளில் ஊறுகாயானது சிலேத்ம தேகிகட்கு சுகமான வுணவும் சிலேத்தும சாந்தியுமாம்.

தைல பத்தியம்

எவ்விதத் தைலங்களாடினாலும் அல்லது எள்ளெண்ணெயிட்டு அப்பியங்கஸ்நானம் செய்தாலும் உடனே ஈரந் துவட்டியவுடன் நீ உண்ணும் உணவில் புளி, தயிர், பால், பாவக்காய், இலைக்கறி, பச்சை மாமிசங்கள், பகல் நித்திரை, புணர்ச்சி, புகையிலை இன்னும் தகாத நடத்தைகள் நீக்குவதுடன் மறு தினமும் பத்தியமிருக்கக் கடவாய் என்று முதியோர் சொல்லுவார்கள்.

பேதிக்கு பத்தியம்

அதிசாரபேதிக்கு வாழைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சிட்டுகுருவி, காடை, கவுதாரி, உடும்பு, முயல், குளத்துக் கருவாடு இவைகள் ஆகும். பேதியை நிறுத்தும் குணம் விசேடமாயுண்டு.

பேதிக்கு அபத்தியம்

காராமணி, பெருங்காராமணி, அகத்தி யென்னும் இக்கீரைகளும், கத்திரிக்காயும், பச்சை மீன்களும் பேதியையுண்டாக்கும். கிராணி முதலிய பேதியுள்ளவர்கள் அருந்தினால் உயிருக்கு அபாயத்தை தருகுமென்றறிக.

மூலரோக பத்தியம்

மருட்கிழங்கு, வெண்காரட்டை, சமூலம், கருணைக்கிழங்கு, பிரண்டை, காராக்கருணை, எருக்கன் கிழங்கு, வெள்ளருகு, வெண்சித்திரமூலம் முதலியவை மூலரோகத்தை சாந்திபண்ணு மென்றறிக.

பத்திய விதி முற்றிற்று.

———

எட்டாவது

பிரதிவிஷத்திரட்டென்னும்

மூ ரி வு வி தி

எவ்வித அவிழ்தமாவதும், புசித்து அது தேகத்திற் பொருந்தாமல் அனல்மீரியாவது, கடுப்பு, பேதி, உதிரபேதி இவைகள் நேரிட்டால் அதற்கு முரிப்பு, முருங்கை, ஈர்க்கு பலம்-2, ஆவாரம்வேரின் பட்டை பலம்-1, ஈருள்ளி பலம்-10 இவைகளை இடித்து கியாழம் வைத்து இருவேளையுமாக 5-நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

அல்லது,

அருகன்வேர் பலம்-1, மிளகு பலம்-5, மிளகை ஒன் றிரண்டா யிடித்து கியாழம் வடித்து அதில் மாதளம்பூ, அதி மதுரம், குகைநீறு, பனங்கற்கண்டு, பசும் நெய்விட்டு கொடு க்க, 3-நாளில் நிவர்த்தியாம்.

அறுபத்திநாலு பாஷாணத்திலும், எவ்வித பாஷாணம் சேர்ந்த மருந்தாவது தின்று அதினால் நேரிட்ட கெடுதிகளுக் கெல்லாம் மிளகு இரண்டு பங்கும், பருத்திக்காய், அவுரி வேர், சிறுகீரை வேர் இவைகள் ஒவ்வொரு பங்குமாய் எடுத்து இடித்து கியாழமிட்டு இருவேளையும் வேளைக்கு ⅛-படி வீதம் கொடுத்து வரவும்; அசாத்தியமா யிருந்தால் வேக மடங்குமட்டும் மணிக்கொருதரங் கொடுக்கவும்.

விஷமுள்ள வஸ்துக்களை தின்றவர்க்கு அழிஞ்சிவேரின் பட்டை ரூபாயெடை-1, கடுகு ரூபாயெடை-⅛, பூண்டு ரூபா யெடை-⅛ இவைகளைக் கூட்டி வென்னீர் விட்டரைத்து 6-மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு முன்னு தாக நெய் பலம்-1, பசும்பால் பலம்-4, இரண்டும் கலந்து கொடுத்துவிட்டு உடனே ஒரு மாத்திரையை வென்னீரில் இழைத்துக் கொடுக்கவும்; கோதுமை நொய் சர்க்கரை கூட்டி பால்விட்டு கஞ்சிகாய்ச்சி ஆகாரம் கொடுக்கவும், 3-நாளில் நிவர்த்தியாகும். பிறகு கோழி சூப்பு ஏராளமாய் கொடுத்து வரவும்.

சூதமென்னும், இரசம்சேர்ந்த அவிழ்தம் சாப்பிட்டு அதனல் கெடுதி நேரிட்டால் சங்கனிலை, பாகலிலை, வெத்திலை, குறிஞ்சானிலை, பிரண்டை இவைகள் சமன் கொண்டிடித்து கியாழமிட்டு இருவேளையும் மூன்றுநாள் கொடுக்க நிவர்த்தியாம். அல்லது ஆரைக்கீரையை அரைத்து கத்திரிக்காய்க்குள் வைத்து வெதுப்பி இரண்டுநாள் கொடுக்க, சூதம் சிறுநீரி லிரங்கும் அல்லது தாமரை யிலைமீது கத்திரி யிலைகளைப் பரப்பி அதன்மீது புளியாரை யிலைகளைப் பரப்பி கைகால் முதலிய கணுக்களில் கட்டி மறுநாள் அவிழ்த்தால் சூதமிரங்கும்.

மேற்படி இரசம் சேர்ந்த அவிழ்தங்கள் சாப்பிட்டு முடக்கு கண்டாலும் அகத்தியும் மிதிபாவையும் கியாழமிட்டு கொடுத்து வரவும் நிவர்த்தியாம்.

மேற்படி சூதமென்னும் இரச சம்பந்த செந்தூரங்கள் சாப்பிட்டு சூடு அல்லது வெப்பம் வீறு கண்டவர்களுக்கு சுர குடுக்கை சுட்டக்கறியை முறித்த மோரில் கலந்து மூன்று நாள் கொடுக்கவும்.

மேற்படி சூதமென்னும் இரச வேக்காட்டிற்கு கருவேலன்பட்டை, வெள்வேலன்பட்டை, துளசிவேர், எருக்கன் வேர் இவைகள் சமன்கொண்டு கியாழம்வைத்து கொப்பளிக்கவும். அல்லது படிகார ஜலம் கொப்பளிக்கவும். கத்திரிக்காய் கொதிக்கவைத்த ஜலத்தை கொப்பளிக்கவும். கருவேலம்பிசின், முருங்கைவேர், எருக்கன்வேர், சிவனார் வேம்பு சமன்கொண்டு தூளாக்கி படை நெருப்பிலிட்டு புகை பிடிக்கவும் நிவர்த்தியாம்.

மேற்படி சூதமென்னும் இரசமுரிவிற்கு சூரணம், சுக்கு திப்பிலி, மிளகு கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சித்திரமூலம், வாய்விளங்கம், இலவுங்கப்பத்திரி, சணப்பவிரை, ஏலம் வகைக்கு பலம் அரைக்கால், நெல்லி கெந்தகம் பலம்-3 இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து திருகடிப் பிரமாணம் எடுத்து வெண்சங்கயிலை வேகித்தசாறு அல்லது பாகயிலை வேகித்த சாறு அவுரிவேர் வேகித்தசாறு இவைகளில் போட்டுக் கொடுக்கவும் நிவர்த்தியாம்.

தாளகம் மனேசிலே இவைகள் சேர்ந்த அவிழ்தங்கள் தின்ற வீறுதணிய சுண்ணும்பு தெளிவு, ஆவாரம்பூ, சீரகம், காசினிவிரை இவைகளை மேற்படி நீரில் ஜியாமம் வைத்துக் கொடுக்கவும்; 5-6-வேளையில் தீரும்.

வீரம்சேர்ந்த அவிழ்தங்கள், இவைகள் தின்றதினுலுண் டான வெட்பம், வீறுபேதி இவைகள் தணிய சிறுபசரையை அரைத்து எருமையெண்ணெயில் கொடுக்க நெய்சிட்டி யரைத்து விளக்கெண்ணெயில் கொடுக்க நெருஞ்சி ரசமும் முத்தெண்ணெயும் கொடுக்க அதிமதுரத்தூள் பலம்-1; முலைப்பாலில் இழைத்துக்கொடுக்கவும்.

பூரம் சேர்ந்த அவிழ்தங்கள், இவைகள் தின்றதினு லுண்டான பொல்லாங்கு தவிற்க வெள்ளை சாட்டரணைரசம் கொடுக்கவும்; துளசி யரைத்து கொடுக்கவும்; முத்தெண் ணெய் கொடுக்கவும்; அல்லது இம் மூன்றும் சமன்கலந்து வேளைக்கு ஒரு பலமாக மூன்று நாள் கொடுக்கவும்.

கருவங்கம், வெள்வங்கம் இவைகள் சேர்ந்த அவிழ்தங் கள் தின்றதினுலுண்டான தீமைநீங்க கரும்புரசம், பூலாரசம், கோழி சூப், காட்டுப்புளியரணை இவைகள் கொடுக்க நிவர்த்தியாம்.

காரீய செந்தூரம் சாப்பிட்டு முடக்கு கண்டாலும் தொண்டை கம்மலானுலும் இஞ்சியும் உப்பும் வாயிலிட்டு ரசம் முழுங்க நிவர்த்தியாம்.

கெந்தக பாஷாணம் சேர்ந்த அவிழ்தங்களுக்கு முரிவு அவுரிவேர், மிளகு, தாமரைக்கிழங்கு, கத்திரிவேர் இவைகள் ஜியாமம் வைத்துக் கொடுக்கவும்; பன்னீர் பலம்-5, கற்பூரம் விராகனெடை-1, கலந்து கொடுக்கவும் முரியும்.

பாஷாணம் தின்றவர்களுக்கு, எருமை வெண்ணெயில் மிளகை அரைத்துக் கொடுக்கவும்; எருமைத் தயிரில் சந்தனத்தை அரைத்து மேலுக்குப் பூசவும் தீரும். அல்லது மிளகு, சிறுகீரை, நீலி, துளசி பாகலிலை கொடுப்பைக் கோவை, பசலை, ஏரண்டயிலை, எலுமிச்சம் யிலை இதுகள் சமன்கொண்டரைத்து புன்னக்காயளவு கொடுக்கவும்; அவுரிவேர், மிளகு, பிரமியிலை, ஜியாமம்வைத்துக் கொடுக்க வும் நிவர்த்தியாகும்.

எவ்வித நஞ்சிற்கும் முறிவு, பசும்பாலும் நெய்யும் கலந்து நான்குதரம் கொடுக்கவும்; வெந்தியம் மிளகும் அரைத்து வென்னீரில் கலந்து கொடுக்கவும்; கடுகை யரைத்து நல்ல ஜலத்தில் கரைத்துக் கொடுக்கவும், இரண்டுவிசை வாந்தி யாகும் நஞ்சு விஷங்கள் முறியும்.

சேராங்கொட்டை புகையினல் வீக்கம் கண்டவர்களுக்கு:—புழுங்கலரிசியும் கஸ்தூரி மஞ்சளும் சமன்கொண்டரைத்து மேலுக்குப் பூசவும்; எள்ளும் வெண்ணெயும் காடியிலரைத்து பூசினலும் நிவர்த்தியாகும். தனிப்பழ ரசம் உள்ளுக்கும் கொடுக்கவும்.

ரவை தின்றவர்களுக்கு:—பசும்பாலும் நெய்யும் சமன் கலந்துகொடுக்க வாந்தியாகும்; இப்படி மூன்று விசை கொடுக்க நிவர்த்தியாகும்.

அபினி வூமத்தங்காய் தின்றவர்களுக்கு:—மாசிக்காய் கியாழம் கொடுக்கவும்; அல்லது மிளகு, சீரகம், தனியா, சோம்பு இவை சமன்கொண்டு கியாழமிட்டுக் கொடுக்கவும்.

தனியூமத்தை தின்றவர்க்கு:—தாமரைக்கிழங்கை காடியி லரைத்துக் கொடுக்கவும்; கத்திரிக்காயை ஜலத்தில் அரைத் துக் கொடுக்கவும்; பரித்திப்பால் உப்புங்கூட்டிக் கொடுக்க வும்; அழிஞ்சுவேர் பழரசத்தி லரைத்துக் கொடுக்கவும், மாசிக்காய்தூள் அவுரிவேரும் அரைத்துக் கொடுக்கவும்.

நேர்வாளக்கொட்டை தின்றவர்கட்கு:—வசம்பு சுட்டக்கறியை தேனில் குழைத்துக்கொடுக்கவும்; ஜலத்தில் சர்க்கரையிட்டுக் கரைத்து எலுமிச்சம்பழரசம் கலந்துக்கொர்டுக்கவும்; புளித்த மோர்கூடிய சாதம் ஈசக்கோலவிரை யூரிய ஜலம் கொடுக் கவும்.

இரத்தபாஷம் தின்றவர்களுக்கு:—பேரரத்தை யென்னும் தும்புராஷ்டகக் கியாழம் கொடுக்கவும்.

இடுமருந்துகளுக்கு:—கருஞ் செம்பையிலை கலியாணப் பூசினி, நீலிவேர், சிகப்புமணத்தக்காளி இவைகளின் சாறு கொடுக்கவும்; கலியாணப் பூசினிக்காயை கடலையிட்டு தேங் காய்க்கூட்டி சமைத்துக் கொடுக்கவும்.

எருக்கம் பாலிற்கு:—பசுமோர், நெய், கருவேலன் கியாழம் அல்லது அவுரி, காடி, சர்க்கரை, முத்தெண்ணெய், மஞ்சள் இவை கொடுக்கவும்.

சுண்ணும்பிற்கு:—மஞ்சள் கியாழம், எள்ளெண்ணெய், எருமைத் தயிர், சிந்திற்கொடி கியாழம், சீரகம், கொள்ளுக் காய், வேலை கியாழம் இதுகள் கொடுக்கலாம்.

புகையிலைக்கு:—அகத்திக்கீரை, குரிஞ்சானிலை கியாழம்.

தில்லைப்பாலுக்கு:—எருமை கோமியம், கோவைசாறு, விளக்கெண்ணெய்.

கற்பூரத்திற்கு:—காசுக்கட்டியை பழரசத்தி லரைத்து மோரில் கொடுக்கவும்.

சோற்றை எள்ளெண்ணெயில் அரைத்து தின்றவர்க்கு:—காடி கொடுக்கவும்.

வெற்றிலைச் சாறும், எள்ளெண்ணெய்க்கும்:—முற்றின தேங் காய்ப்பால் கொடுக்கவும்.

கொடிக்கள்ளிப்பாலுக்கு:—கோவைச்சாறு, ஆவாரைக்கியா ழம்.

உளுந்திற்கு:—கொள்ளுக்காய், வேலைவேர், மிளகு, சீரக கியாழம்.

கடலை, துவரை, மொச்சைக்கு:—செம்மண் ஜலம்.

சதுரக்கள்ளிக்கு:—கடுக்காய், ஆவாரை கியாழம்,

கள்ளிக்கு:—வாழைப்பட்டை ரசம், ஆவாரை கியாழம்.

கஞ்சாவிற்கு:—சுக்கு, கியாழம், பழரசம், வாழைப்பட்டை ரசம்.

எலி பாஷாணத்திற்கு:—பாகயிலைச்சாறு, நீலி கியாழம்.

தாம்பரத்திற்கு:—புளித்த மோர், பழரசம்.

கெந்திக்கு:—பசு நெய்.

சாரயத்திற்கு:—முள்ளாங்கி ரசத்தில் படிகாரமிட்டுக் கொடுக்கவும்; வாழைப்பட்டை ரசம், வெங்காயச்சார் கொடுக்கவும்.

வாளத்திற்கு:—வசம்புகரி, சாணிப்பால் கொடுக்கவும்.

வாழைப்பழத்திற்கு:—மிளகு, கற்பூரம், புகையிலையியாழம்

பலாப்பழத்திற்கு:—தேன், பசுநெய்.

பழவர்க்கத்திற்கு:—மிளகு, சுக்கு கியாழம்.

தேனுக்கு:—வெந்த கரியின் ஜலம்.

நாபிக்கு:—சிறுகீரை, வெள்ளாட்டுநீர், பசுநெய் கொடுக்கவும்.

எள்ளுக்கு:—சர்க்கரை கொடுக்கவும்.

எட்டிக்கு:—நாவற்பட்டை அரைத்துக் கொடுக்கவும்,

துரிசி, துத்தத்திற்கு:—பழரசம், இஞ்சி, தேன். சர்க்கரை கொடுக்கவும்.

மாஜினத்திற்கு:—கீத்தரிக்காய்பழம், நெய், புளி, ஜலம்.

நெய், தேனுக்கு:—அடுப்புக்கரியை ஜலத்தில் கொடுக்கவும்.

இலவன் பிசினிக்கு:—சிவனார்வேம்பு கியாழம்.

அலரிவேரும், எள்ளெண்ணெயும் குடித்தவர்கட்கு:—கடுகு கியாழம் கொடுக்க அல்லது முடிமேல் முடிக்கிழங்கை வெந்நீரில் கொடுக்கவும்.

விஷப்பிரதி விஷத்திரட்டு முற்றிற்று.

———

ஒன்பதாவது

சர்பத்து விதி

குலாபி சர்பத்து

மணல் சர்க்கரை வீசை-1, நிறுத்தெடுத்து $1\frac{1}{2}$-புட்டி தண்ணீர்விட்டுக் காய்ச்சி இளம்பாகமாய் வந்தவுடன் இறக்கி வைத்து கொதிப்பெல்லாம் ஆறியபிறகு புட்டியில் ஊற்றி வைத்துக்கொள்ளவும்; (செட்றிகாசிட்) கோலி பிரமாணம் எடுத்து நன்ருய்க் காய்ந்து ஆறிய ஜலம் $\frac{1}{2}$-டிராம் எடுத்து அதில் போட்டுக் கரைத்து மேற்படி பாகு இருக்கும் புட்டியில் ஊற்றிவிட்டு அத்துடன் பன்னீர் 1-அல்லது 2-டிராம் விட்டு கொஞ்சம் மெஜிண்டாபௌடர் போட்டு குலுக்கி வைத்துக்கொள்ளவும், கெட்டுப்போகாது. சாப்பிடும்போது 1-டிராம் சர்பத்துக்கு 2-டிராம் தண்ணீர்விட்டு சாப்பிடவும்.

முதல்தரம் ரோஜா சர்பத்து

1-வீசை மணல்சர்க்கரையில் $1\frac{1}{2}$-புட்டி தண்ணீர்விட்டு பச்சைகற்பூரம்,குங்குமப்பூ, ஜாதிக்காய்,ஜாபத்திரிஏலக்காய், லவங்கம், சப்ஜாவிரை வகைக்கு விராகனெடை 3-எடுத்து இடித்து தூளாக்கி $\frac{1}{2}$-புட்டி பன்னீருடன் கலந்து சர்க்கரை பாகு அடுப்பிலேற்றும்போதே அத்துடன்கூட இந்தமருந்து களையும் ஊற்றிநன்ருய் முதிர்ந்த பாகமாய் காய்ச்சி இறக்கி வடிகட்டி தன்னிச்சையாய் ஆறியபிறகு $\frac{1}{2}$-டிராம் செட்றி காசிட்டு மஜிண்டாபௌடர் ஒரு சிட்டிக்கை போட்டு குலிக்கி கார்க்கடைக்கவும்; இந்த ரோஜா சர்பத்தை ஷாப்புகளில் 1-புட்டி 2-ரூபாய் விற்கிருர்கள்.

பாதம் சர்பத்து

பாதம் பருப்பு பலம்-4, கொண்டுவந்து வென்னீரிலிட்டு மேற்ரேல் நீக்கி இடித்து $\frac{1}{4}$-படி ஜலத்தில் பிசைந்து பால் பிழிந்துக்கொண்டு அகிற்கட்டை, தோலா-$\frac{1}{2}$ கொண்டுவந்து $\frac{1}{4}$-படி ஜலத்திலிட்டு காய்ச்சி வீசம்படியா யிறக்கி வடிகட்டி மேற்படி பாலும் கியாழமும் ஒன்ருய்க் கலந்து வெள்ளைச்

சர்க்கரை பலம்-20, கூட்டி அடுப்பேற்றி பதமாய்க் காய்ச்சி இறக்கும் சமயத்தில் ⅛-விராகனெடை குங்குமப்பூவை பாலில் இழைத்துக் கலந்து பன்னீர் பலம்-2, விட்டு பதப் படுத்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும். சாப்பிடும்போது 1½-தோலா சர்பத்து 2-பலம் தண்ணீர் விட்டுக் கலந்து சாப் பிடவும். நாபி ரெணம், கொதிப்பு, சூடு, வாய் ரெணம் இவை தீரும்.

தாமரை சர்பத்து

வெள்ளைத் தாமரைப்பூ உலர்ந்ததாக யிருந்தால் ராத் தல்-1, பச்சையாகக் கிடைத்தால் ராத்தல்-4, எடுத்து 2-ராத் தல் ஜலத்தில் போட்டு வேகவைத்து மூன்றிலொரு பங்காகக் காய்ச்சி வடிகட்டி வெள்ளை சர்க்கரை 20-பலம் போட்டு பத மாய்க் காய்ச்சி யிரக்கி புட்டியில் ஊற்றி கார்க்கிட்டு வைத் துக்கொண்டு 9-பலம் வீதமாக நிதம் சாப்பிட்டு வருதல் தலை நோய், பித்தகாச்சல், பக்கநோய், வயிர் நோய் இவைகள் நீங்கும்.

சந்தன சர்பத்து

வெள்ளைச் சந்தனம் பலம்-3, பன்னீர் பலம்-12 இவ் விரண்டும் ஒன்ருயூற்றி நாலுஜாமம் ஊரியபின் சற்று கொதிக்கவைத்து பிசைந்து வடிகட்டியதில் வெள்ளை சர்க் கரை பலம்-12 போட்டுக் காய்ச்சி பதமா யிறக்கி தினம் ஒரு தோலா வீதம் புசித்துவர குலைபீரல் முதலிய உட்கருவி களுக்கு பலங் கொடுக்கும்; வயறு சூடு, தாகம் தீரும்; இருதய காப்ரா நீங்கும்.

வெற்றிலை சர்பத்து

இருநூறு வெற்றிலையை நன்ருய் நசுக்கி 2-ராத்தல் ஜலம் விட்டு மூன்றிலொரு பங்காக கியாழம் வடித்து வெள்ளை சர்க்கரை பலம்-6½, போட்டு பாகுபதமாய்க் காய்ச்சி அச்சமயத்தில் குங்குமப்பூ, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வெள்ளை யேலக்காயின் அரிசி வகைக்கு தோலா-½, லவுங்கம் தோலா-¼, இவைகளை பன்னீராலரைத்து மேற்படி பாகில் கலந்திரக்கி வைத்துக்கொண்டு பிரதிதினம் ½-தோலா வீதம் புசித்துவர மனச் சந்தோஷம், தாதுபுஷ்டியும் உண்டாம்; இரத்தம் சுத்தியாம்.

நன்னாரிவேர் சர்பத்து

ஒருபடி ஜலத்தை நன்ருய் கொதிப்பித்துயிறக்கி அதில் 12½-பலம் நன்னாரி வேரை தூளா யிடித்துப்போட்டு இரண்டு ஜாமம் ஊறியபின் அடுப்பிலேற்றி வேகவைத்து ½-படி கியாழமாக வடிகட்டி அதில் 12½-பலம் சீனி போட்டு பத மாய்க் காய்ச்சி யிறக்கி வைத்துக்கொண்டு தினம் 2-தோலா வீதம் கொஞ்சம் நல்ல ஜலம் கலந்து சாப்பிட, காங்கை, பிர மேகம், சுருக்கு, நீர்கடுப்பு இவைகள் தீரும்.

காசினியிலை சர்பத்து

காசினி யிலையை இடித்து சார் பிழிந்து காய்ச்சி வடி கட்டிய ரசம் பலம்-13, வெள்ளைச் சர்க்கரை பலம்-20, இரண் டும் ஒன்ருய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு கொஞ்சம் நல்ல ஜலத்தில் 2-தோலா வீதம் சாப்பிட்டு வரில் நீர்கட்டு, நீர் யெரிவு, உட்காச்சல் தீரும். மலம் சாதாரண மாய்க் கழியும், குலைக்கு பலந்தரும்.

திராக்ஷைபழ சர்பத்து

பச்சை திராக்ஷைபழ ரசம் பலம்-15. சீனு கற்கண்டு பலம்-15, இவ்விரண்டும் ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி பாகு பதமாய் காய்ச்சி யிரக்கையில் 2½-பலம் பன்னீர் விட்டு யிறக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒருபலம் வீதமாக கொஞ்சம் ஜலங் கலந்து சாப்பிட்டுவரில் பித்தசூடு தணியும், சுத்த இரத்தம் பரவும்.

தாழம் விழுது இடித்த ரசத்தை தீயிலிட்டு முறித்து வடிகட்டி 13-பலம் யெடுத்து இத்துடன் 20-பலம் வெள்ளை சர்க்கரை போட்டு பதமாய் காய்ச்சி வடித்து இறக்கும் சம யத்தில் ஒரு எலுமிச்சம்பழ ரசத்தை விட்டு துழாவி யிறக்கி புட்டியில் வைத்துக்கொண்டு தினம் 1½, அல்லது 2-தோலா வீதம் கொஞ்சம் நல்ல ஜலத்துடன் கலந்து சாப்பிட்டு வரில் கொதிப்பு, அஜீரணம், மேகம், பித்தம் இவை சாந்தமாகும்.

யூநானிகா கருபா சர்பத்து

நன்னாரிவேர், நாகமல்லிவேர், அத்திப்பட்டை, மகிழன் பட்டை, ஆலம்விழுதின் துளிர், கொட்டைக்கரந்தைப்பூ, கோரைக்கிழங்கு வகைக்கு பலம்-3, இவைகளை மெல்லிய

தூளா யிடித்து ஒரு படி ஜலத்தில் ஒருநாள் ஊரவைத்து பிசைந்து வடிகட்டிய ஜலத்தில் 15-பலம் சீனகற்கண்டு போட்டு அழுக்கு நீக்கிய கருபா 1½-தோலா நிறுத்தெடுத்து பன்னீராலரைத்து கலந்து அடுப்பேற்றி பதமாய் காய்ச்சி யிறக்கிக்கொண்டு வேளைக்கு இரண்டு தோலா வீதம் நல்ல ஜலத்தில் கலந்து சாப்பிடவும். இப்படி நாள் ஒன்றுக்கு மூன்று வேளை சாப்பிட்டு வர சூடு, காந்தல் யாவும் தீர்ந்து இரத்தவிருத்தி யுண்டாகும்.

இஞ்சி சர்பத்து

இஞ்சி 6¼-ரூபா யெடை கொண்டுவந்து சிறு துண்டுகளாக அரிந்து ¼-படி வென்னீரில் போட்டு ஒரு முகூர்த்தம் வரை தீயிலிட்டு வேக வைத்து யிறக்கி பிசைந்து வடிகட்டிய ரசத்தில் 75-ரூபா யெடை சீனி போட்டுக் கலந்து அடுப்பேற்றி பதமாய்க் காய்ச்சி புட்டியில் நிரப்பி கார்க்கடைத்து வைத்துக் கொள்ளவும். சாப்பிடும்போது 1-ரூபா யெடைக்கு 2-ரூபா யெடை தண்ணீர் விட்டு சாப்பிடவும் பித்தம் தீரும்.

எலுமிச்சம்பழ சர்பத்து

எலுமிச்சம்பழ ரசம் ½-வீசைக்கு வெள்ளை சர்க்கரை ஒரு வீசை போட்டு பதமாய்க் காய்ச்சி இறக்கும்போது ஒரு பலம் பன்னீர் விட்டு கலக்கி யிறக்கி ஒரு பங்குக்கு இருபங்கு ஜலம் விட்டு சாப்பிடவும். பித்தம், வாயூரல், வெள்ளோக்காளம், செறியாமை, மந்தம் இவை போம்.

சர்பத்து செய்கிறவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு

இந்த சர்பத்துகள்-1½, அல்லது 2-மாதத்திற்கு மேல் பட்டால் புளித்து கெட்டுப்போகு மாதலால் அப்போதைக்கப்போது செலவு செய்துவிட வேண்டியது அப்படி செலவிடும்போது 1-ரூபா யெடை சர்பத்திற்கு 2-ரூபா யெடை தண்ணீர் கலந்தே சாப்பிட வேண்டியது.

சர்பத்து விதி முற்றிற்று.

தாது விதி

இந்திரிய ஸ்தம்பனத்திற்கு பூரனி பலங்தோடு

ஜாதிக்காய், சாம்பிராணி, அக்ராகாரம், அபீம், லவுங்கம் இவை சமனெடை கொண்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலிட்டு தேன் வேண்டிய மட்டும் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைக்கவும், மெழுகு பதமாய் அரைத்து பீங்கான் கோப்பையில் வைத்துக் கொள்ளவும். மாலை ஆறு மணி சுமாருக்கு தம்பிடி யெடை சாப்பிட்டு உடனே கால் படியால் சாப்பிடவும். இரவு போஜனத்திற்கு புளி சேர்ந்த குழம்பு ரசம் கூடாது ; பால் ஊற்றிக்கொண்டு போஜனம் செய்ய வேண்டியது பகலில் மாத்திரம் புளிப்பு முதலிய சகல வஸ்துவும் புசிக்கலாம். இரவில் மாத்திரம் புளி கூடாது, தித்திப்பு, பழவர்க்கம், மிட்டாய் தினுசுகள் யாவும் தின்னலாம். ஆனல், லாகிரி வஸ்துக்கள் எப்பவும் கூடாது, இப்படி 5, 7-நாள் வீதம் புசித்த பிறகு புணர்ச்சி செய்தால் இந்திரியம் ஸ்கலிதமாகாது ஒரு எலுமிச்சம்பழம் தின்றல் உடனே ஸ்கலிதமாகும்.

முதல்தாம் பலங்தோடு

ஜாதிக்காய், ஜாபத்திரி, லவுங்கம், பூனைக்காலி வித்து, அராக்காரம் இரண்டு வருஷத்திய வெல்லம் வகைக்கு 4-ரூபாயெடை, 15-கோழிமுட்டையின் வெண்கருவு மேற்படி வஸ்துக்கள் யாவும் இடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்திவிட்டு கருவையும் போட்டு தேன் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைக்கவும் மெழுகு பதமாய் அரைத்து வழித்து கோப்பையில் வைத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாயெடை சாப்பிடவும். இப்படி 15-நாள் சாப்பிடவேண்டியது சாப்பிடும்போது பிறகு ஏழுநாளும் ஆக 22-நாள் ஸ்திரீபோகம் கூடாது, லாகிரி வஸ்துக்களும் கூடாது, அரை புளிப்பு கூட்டிக் கொள்ளவேண்டியது வாய்வான வஸ்துக்களும் தள்ளுபடி போகத்தில் மிக்க பிரியமும் வலியும் செய்யும்.

ஸ்திரீபோக அல்வா

ஜாதிக்காய்	ரூபா யெடை	8
குல்கந்து	,,	8
கர்மஸ்துகி	,,	8
அக்கிராகாரம்	,,	4
பழையவெல்லம்	,,	4
லவுங்கம்	,,	4
சாம்பிராணி	,,	4
கவாப்புசின்னி	,,	4

இவை யாவும் இடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்தி விட்டு தகுந்த தேன்விட்டு மெழுகுபதமாய் அரைத்து கோப்பையில் வழித்துவைத்துக்கொண்டு இலந்தங்காயளவு எடுத்து மாலே ஆறு மணிக்கு சாப்பிடவும். உடனே ஆழாக்கு பால் குடிக்கவேண்டியது. இப்படி 20-நாள் தின்னவும். (பத்தியம்) அரைபுளி கூட்டவேண்டியது கள்ளுசாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் கூடாது. மேற்படி இருபதுநாளும் ஸ்திரீபோகம் கூடாது, பிறகு போகிக்கலாம்.

ஒரு இராத்திரிக்கு எத்தனேதரம் புணர்ந்தாலும் சட்டை பண்ணுது சரீரம் உப்பல் கொடுக்கும், பலம் வரும்.

நாமாதா அல்லது பேடிகட்கு

நல்லெண்ணே	சேர்	1
தேன்	,,	1
உலர்ந்தகஜுர்காய்	,,	1

இந்த மூன்றையும் சிறுவாயுள்ள புதுப்பானேயில் போட்டு வாய்கட்டி மண்சீலேசெய்து சமையல் செய்யும் அடுப் பின்கீழே பள்ளம் வெட்டி நெருப்புக்கு நாலுவிரற்கடை கனம் உள்ளடங்கும்படியாய் புதைத்து சாதாரணமாய் சமையல் செய்துக்கொண்டு வரவும். இப்படி ஆறுநாள் இருவேளேயும் சென்றபிறகு ஏழாவதுநாள் பானே யுடையாமல் எடுத்து வைத்துக்கொண்டு பிரதிதினம் காலேயில் ஒரு கஜுர்க்காய் வீதம் தின்று வரவும். இது ஆகிறவரையில் ஒருவனே தின்றுவர வேண்டியது. (பத்தியம்) சுட்டபுளி வறுத்த உப்பு சேர்க்க வேண்டியது. வாய்வான பதார்த்தங்களும் லாகிரி வஸ்துக்களும் கூடாது.

மஹாமதன காமேசுவரம்

சுக்கு	சிறுநாகப்பூ
பெருஞ்சீரகம்	கடுக்காய்
அதிமதுரம்	தான்றிக்காய்
கிராம்பூ	நெல்லிக்காய்
மிளகு	ஏலம்
வால்மிளகு	ஜாதிக்காய்
அரிசிதிப்பிலி	ஜாதிப்பத்திரி
ஆனைதிப்பிலி	இலவுங்கப்பட்டை
இலவுங்கப்பத்திரி	அசுவகெந்தி
கோஷ்டம்	செண்பகப்பூ
கொத்தமல்லி	கஸ்தூரிமஞ்சள்
தாளிசம்	தக்கோலம்
கருஞ்சீரகம்	கஸகஸா
உளுந்து	நீர்முள்ளிவித்து
நிலப்பனங்கிழங்கு	பூனைக்காலிவித்து
திராட்சி	இலவன்பிசின்

இவைகளில் வறுக்க வேண்டியதை பொன்வரலாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வகைக்கு பலம்-1, இதற்கு சரியெடை விரைகாம்பு நீக்கிய கெஞ்சா நிறுத்தெடுத்து ஏழு ஜலம் விட்டு கழுகி நாலுபடி ஜலமும் ஒருபடி பசும் நெய்யும் ஒன்றாயூற்றி அதில் கெஞ்சாவைப் போட்டு நன்றாகக் காய்ச்சி சிட்டுகட்டி நெய்யை கையால் வழித்துக் கொண்டு பசும்பால் உழக்கு சர்க்கரை 16-பலம் ஒன்றாயிட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில் சூரணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் தூவிக் கிளரி வருகையில் நெய்யும் விட்டுக் கொண்டே கிண்டவும், யாவும் ஒன்றுபட்டவுடன் சிவந்த சமயங் கண்டு தேன் 15-பலம் விட்டு கைவிடாமல் சற்று நேரம் கிண்டி யிறக்கிவைத்துக் கொள்ளவும். இரவில் போஜனம் செய்தபிறகு பால் உழக்கு சாப்பிட்டு அதன் பிறகு இந்த லேகியத்தில் 1-அல்லது 2-களஞ்சிவீதம் புசித்து வரவும் வீரியமதிகரிக்கும் சரீரம் மேனிகொடுக்கும் கண்கள் பிரகாசிக்கும் நரை திரை மாற்றிவிடும். ஈளை, இருமல், அக்கினிமாந்தம், சூலை, பழையசுரம், வீக்கம், க்ஷயங்கள், பனிரெண்டுந் தீரும். இது யோகாப்பியாசிகளுக்கு வாசியோடசன் மருவிநின்று மும்மண்டலமும் தாண்டி ஆனந்த கேசரத்தில் அறிவுண்டாக்கி வைக்கும் என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

போககாலத்தில் துவண்டுபோகும் லிங்கத்திற்கு லேபு

அதாவது முலாம்

நாபி, புனுகு, சவுக்காரம், படிகாரம், வெண்காரம், அதிமதுரம், அகிற்கட்டை, திப்பிலி, நன்னரிவேர். காமப்பூ இவைகள் சமனெடைகொண்டு யிடித்து வஸ்திரகாயஞ் செய்து செங்கன் பழரசத்தாலரைத்து இரும்பு டப்பியில் வைத்துக் கொள்ளவும். தேவையானபோது லிங்கத்தின் முழுமையும் முலாம் பூசுவதுபோல் இலேசாகத் தடவிவரவும் இப்படி 3-4-5-நாள் தடவவும் வேண்டாதபோது வெந்நீரா லலம்பவும்.

இதுவுமது

எட்டிக்கொட்டை, அமுக்கினங்கிழங்கு வசம்பு சமனெடை கொண்டு பசும் வெண்ணெயால் மெழுகுபோல் அரைத்து லிங்க நரம்புமீது ஒருவாரம் தேய்த்துவர கெட்டிப் படும்.

ஒரு பெண் தலைச்சீவிய கூந்தல்மயிரை கருக்கி தேனில் குழைத்து லிங்கத்தின்மீது தடவி மற்றொரு பெண்ணை புணருங்கால் அதிக இன்ப முண்டாக்குவதுடன் அப் பெண் விடாள் இந்திரிய வலிவு.

ஸ்திரீபோக சிந்தாமணி

பூச்சக்கரக்கிழங்கு	தோலா	10	லவுங்கம்	தோலா	1
அமுக்கினங்கிழங்கு	,,	2	லவுங்கப்பட்டை	,,	1
பூனைக்காலிவிரை	,,	2	ஏலரிசி	,,	1
நீர்முள்ளிவிரை	,,	2	வேலன்கொழுந்து	,,	1
துத்திவேர்	,,	1	இலவன் பிசின்	,,	1
சிறுநாகப்பூ	,,	1	வால்மிளகு	,,	1
ஜாதிக்காய்	,,	1	வெந்தியம்	,,	3
ஜாதிபத்திரி	,,	1	சாலேமிசரி	,,	1
குலாப்புசின்னி	,,	1	சியாமுசலி	,,	1
சீமைதண்ணிவிட்டான்கிழங்கு	,,	1	ரூமஸ்தகி	,,	1
வெள்ளகுண்டுமணிபருப்பு	,,	1	சாம்பிராணி	,,	1

இவைகளை சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு நல்ல தேனை காய்ச்சி அழுக்கை நீக்கி அந்த தேனைவிட்டு சூரணத்தைப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். குங்குமப்பூ விராகனெடை-1, தேனில் யிழைத்து அத்துடன் கலந்து பிசைந்து லேகியமாய் வைத்துக்கொண்டு தினம் மாலைவேளையில் இலந்தங்காய்ப் பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குப் பசும்பால் குடிக்கவும். இப்படி 10-20-30-40-நாள் விதம் தின்று கொண்டு வரலாம். இடையில் ஸ்திரீபோகமும் செய்யலாம் விசேஷமாய்க்கூடாது. தாது விர்த்தியாம் பெலம் வரும் மிகவும் உயர்ந்த பூரணி லேகியமென்றறிக. லாகிரிமட்டும் கூடாது மற்ற யாதொரு பத்தியமும் இல்லை.

தாதுவிதி முற்றிற்று.

பதினேராவது

சொற்பனவிதி

பூஞ்சோலை, பாதரக்ஷை, யானை, குதிரை, மலைகள், தீபம், சங்கு, சூரியன், சந்திரன், அத்திமரம், புளியமரம், ஆலமரம், புன்னைமரம், கனிவர்க்கம் பயிர்நாற்று, மலம் எறும்புகூட்டம், மழை பெய்தல், வெள்ளைவஸ்திரம், தாசி வீட்டிற்கு போகுதல், அரசை யெதுத்தல், மலையேருதல், பாண்டவர் கதை படித்தல், கேழ்க்குதல் இவைகளி லெது வேனும் சொற்பனத்தில் காணுவார்களாகில் மனோ யுச்சாகம் பொன்வருத்து, சுபகாரியங்கள், சவுக்கியம் முதலிய நற்கதிகள் கூடுமென்றறிக.

எண்ணெய் அல்லது எண்ணெய் விட்டு ஸ்நானஞ் செய்தல், வானரக்கூட்டம், வானரத்து முதுகிலேரி வழி நடத்தல் பிணத்தை மிதித்தல், விறகு முதலிய சுமை யெடுத்தல் காகத்தை காணல் அழைத்தல், பன்றிகளைக்காணல், எருமை, நாய் புலி, பருந்து, கைம்பெண்ணைப் புணர்தல், வானம் யிடிந்து விழுதல், விவாகம் செய்தல், யீரத்துகிலுடுத்தல், பிராமண வசம், யானைத்தவரி விழுதல், இராட்சதர், அம்பு, யீட்டி,

கத்தி, வல்லயம் இவைகளில் எதுவேனும் சொற்பனத்தில் காணுவார்களாகில் விசனம். அசவுக்கியம், வியாதி சம்பவம், சத்துருவிவகாரம், தூரத்து மரணசேதி இவைகள் கேழ்க்கவும் அல்லது அனுபவிக்கவும் நேரிடும்.

இதுவுமது சொற்பன விதி

ஆண்டி வேடம்பூண்டு யாத்திரை செல்லுதல்
காசிக்ஷேத்திரம் போய் வருதல்
மரக்கலத்திலேறி தூரதேசம் சென்று வருதல்
நெருங்கிய பந்துக்கள் கொடிய பகையாதல்
நரகலில்சரக்கிவிழ்ந்தெழுந்து மனைசேர்தல்
புராணகாலக்ஷேபங்கள் செய்தல்கேட்கல்
ஆகாயம் கைக்கு யெட்டும்படி காணுதல்
வேட்டையாடக் காணுதல்
இளநீர்கரும்பு கண்ணாடி இவைகாணல்
வெற்றிலைப்பாக்கு மஞ்சள் வாங்குதல்
சோலைகளிற் சென்று மலர்கொய்தல்
வீடுபத்தி யெரிதல்

இம்மாதிரி சொற்பனங்கள் காணுவார்களாகில் மிகவும் விசேஷ பொருள் வருத்து கலியாணம் மூதலிய நற்காரியங்கள் தன்னால் நடத்த நேரிடுவதுடன் சர்வ சவுக்கிய சாம்ராச்சியம் பெறுவாரென்றறிக.

மரண சொற்பன விதி

யாதொரு பிரயாணமாயாவது நடக்கும்போது தன்னுடைய நிழல் தனக்கு தெரியாதிருந்தபடி கனவு காண்பாராகில் ஒரு வருடத்தில் மரணம் சம்பவிக்கு மென்பர்.

கண்ணாடி யெடுத்து முகம் பார்க்கையில் தன்னுடைய சிரசு தெரியாதபடி அல்லது கழுத்தளவாயுள்ள முண்டம் மாத்திரம் கண்ணாடியில் தோன்றினபடி கனவு காண்பார்களாகிலும், பண்டாரம் அல்லது சன்னியாசியை நீச்சன்மயிர் பிடித்திழுக்கும்படி கண்டாலும் ஒரு வருஷத்திற்குள்ளாக மரண மென்பர்.

சூரியனைப் பார்த்தது போலும் அப்படி பார்க்கையில் கிரகணங்களால் கண்கள் கூசவொட்டாமல் வட்ட வடிவு பில்லைபோல் காண்பாராகில் 10-மாதத்தில் மரணமென்று பகர்வர்.

சாதாரணமாய் நடந்து போவதுபோல் சொற்பனங் காணும்போது தனது நிழலில் இரண்டு சிரசு யிருப்பது போல காண்பாராகில் 8-மாதத்தில் மரணபத்து வந்தணுகு மென்பர்.

வானரமும் கழுதையும் தானிருக்கும் வீட்டிற் காவலாக கட்டி யிருப்பதுபோல் காண்பாராகில் 6-மாதத்தில் மரண வேதனை யணுகு மென்பார்.

ஆந்தை நாய் பன்றி இம்மூன்றும் தன்னை துரத்திக் கொண்டு வந்து கடித்ததுபோல் சொர்ப்பனம் காண்பா ராகில் இரண்டு மாதத்தில் மரணயிம்சை நேருமென் றிசைப் பார்.

எந்த வஸ்துவைக் கண்டபோதிலும் ஒன்று பத்தாகவும் பத்து நூறுகவும் செதிரிசெதிரி புலப்படாமலே தோற்று மாகில் ஒரு மாதத்தில் மரணமென்றுரைப்பார்.

தனிவழியாய் நடக்கும்போது படுகுழியில் வீழ்தல் அக் குழியை மீண்டு தென்முகமாய் நடக்கவும் சில கருத்தமனிதர் கள் கூடி கற்களால் தன்னையடிக்கும்படி கண்டாலும் 1-மாதத்தில் மரண மென்றுரைப்பார்.

கேணி முதலிய குளங்களில் ஸ்தானம் அல்லது குளித்த படியும் அப்படி குளித்து துணியினல் துவட்டுமுன்னம் மார்பினிடமாக அக்கினிகொட்டிக் கட்டியதுபோல் எரியக் காண்பாராகில் 15-நாளில் மரணதுன்ப மணுகுமென்று பகருவார்.

தலையில் யெண்ணையிட்டு கையில் அறைப்பும் சிவப்புநிற புஷ்பமுங்கொண்டு கறுத்தமனிதன் துணையாக சிகப்பு வேட்டி யுடுத்தினவர்களாய் தெற்கு முகம்நோக்கி நடக்கக் கண்டால் 10-நாளில் துன்பமணுகுமென்று சொல்லுவர்.

வீட்டிலெரிகின்ற தீபஸ்தம்பத்தின் விளக்கு அல்லது அந்த ஜோதியெல்லாம் கீழே விழுந்தெரியவும் ஸ்தம்பமானது இருண்டு உருதெரியாதிருக்க சொப்பனங் காண்பாராகில் 5-நாளில் அவஸ்தை நேருமென்றறைறவர்.

பறவை, காக்கை, கூளி இவைகள் தலைமீது வட்டமிட்டு எப்புறமும் போகவொட்டாது முகத்தில் குத்துவதுபோல் காண்பாராகில் நாலுநாளில் அவஸ்தை யணுகுமென்பர்.

தன்னுடைய இரண்டுகாலும் முழங்கால்களி லிருந்து பாதமட்டும் இல்லாதபடியும் கண்ணுக்கு தோற்ருதபடியும் காண்பாராகில் இரண்டுநாளென் றிசைப்பார்.

கறுத்தப்பெண் கறுப்பாடையுடுத்தி தலைவிரித்தபடியாய் சிரித்துக்கொண்டே சரசமாய் அருகில்வந்து தோளின் மேலேறிக்கொண்டு எருமைபோல் கூச்சலிடக் காண்பாராகில் மறுநாளைக்கிராத மரணவஸ்தை மன்ருடுமென்று மறையோருரைப்பர். இந்த சொர்ப்பனவிதி ஒன்றிற்கே அளவிறந்த நூற்களை ஆராய்ச்சி செய்து சேகரித்திருப்பாரென்று அறிவுள்ளோரறிவர். சுபம். சுபம். சுபம்.

சொர்ப்பன விதி முற்றிற்று.

ஆக பதினெருவிதிகளடங்கிய

நோயில்லா வாழ்வு முற்றுப்பெற்றது.

திருமகள் விலாச அச்சகம், சென்னை-1.—1964

கண்ணுசாமியம் என்னும்

வைத்தியசேகரம் விலை ரூ. 3-50

வைத்திய வித்வன்மணி கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்திலும் நிலைபெறுமாறு பரம ரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களை யெல்லாம் சூர்ணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பற்பம், செந்தூரம், ஆக்கிராணம் முதலியவைகளை ஆங்காங்கு கைபாகம் செய்பாகம் முதலிய வற்றால் எளிதில் உணருமபடி இப் புத்தகத்தில் எழுதி யுள்ளார்.

வைத்திய சிந்தாமணி விலை ரூ. 4-00

[வைத்திய வித்வன்மணி சி கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியது.]

இந்த "வைத்திய சிந்தாமணி" என்னும் நூலானது யூகி மாமுனி என்பவரால் கூறப்பட்டது. இதனில் ரோக நிதானங்களை கூறியிருப்பதினால் இதனை ஆதாரவாகக் கொண்டும் சில கிரந்தங்களினின்று சிலது சேர்க்கப்பட்டும் ஒவ்வொரு ரோகங்களின் இறுதியில் ஆங்கிலேய மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள ரோக நிதான விஷயங்களை மதாந்தரமாகவும், அமைத்துக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு சிகிச்சைகளையும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சுகந்த பரிமள சாஸ்திரம் விலை ரூ. 1-00

இதில் சுகந்த மூக்குத்தூள், ஸ்நானப் பொடிகள், பல் பொடி புதுக்கோட்டை மைசூர் முதலிய சமஸ்தான அத்தர் பில்லைகள், ஊதுவர்த்திகள், பரிமளத் தைலங்கள், கர்ப்பூரம், கர்ப்பூரத் தைலம், சந்தனாதித் தைலம் முதலிய இன னும் பல அருமையான பரிமளத் திரவியங்கள் செய்யும் முறைகள் அடங்கி யிருக்கின்றன.

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.